மாதம் இருமுறை

# எங்கள் தேசம்

එංගල් දේසම
QD/28/NEWS/2013
Engal Thesam
மலர்: 12 இதழ்: 13
248
ஜூலை 01-14, 2013
விலை: ரூபா. 30.00

## விரிசலுக்கு வித்திடும்

# இனவாத அரசியல்

09 JUL 2013

9/07/2013

அமைச்சரவைக் கூட்டத்திலும் அதற்கு வெளியிலும் 13ஆவது யாப்பு குறித்து அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் நிலையும் உருவாகி உள்ளது. இந்த நிலையில் 2/3 பெரும்பான்மை பெற்று அரசின் மசோதாவை நிறைவேற்றுவதிலும் சிக்கலுள்ளது. அரசாங்கம் திருத்த மசோதாவில் தோல்வியடைந்தால் அது மசோதாவின் தோல்வியாகவன்றி, அரச கட்டம் சரியத் தொடங்குவதன் அடையாளமாகக் கொள்ளப்படும் அபாயம் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இஸ்தான்பூல்



## எரிந்தது தணிந்தது!

## மீட்டர் ஆட்டோவிலும் களவு நடக்கிறது



## பொன் விழா காணும் யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி

03 கத்திக் குத்து: மாணவர்களுக்கு தவறிய முன்னுதாரணமாகுமா?
07 13ஐ ஒழித்தலும் சீனாவின் கைக் கூலிகளும்
09 13ஆவது திருத்தம் இ.தொ.கா. வின் நிலைப்பாடு என்ன

Design: Kahatowita Sinan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

# யுத்தத்தில் இழந்ததை கல்வியால்தான் பெற முடியும்

## கிழக்கு மாகாண சபை பிரதி தவிசாளர் எம்.எஸ்.எம். சுபைர்

எம்.ரீ.எம். பாரிஸ்



யுத்தத்தினால் மட்டக்களப்பு வாழ் மக்கள் தமது உறவுகளையும் உடைமைகளையும் பொருளாதாரத்தையும் இழந்து, பல கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இன்று நாம் இழந்த சொத்துக்களை மீளப் பெற வேண்டுமானால் அதற்கிருக்கின்ற ஒரே வழியான கல்வி என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி எமது உரிமைகளையும் அபிலாசைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் எம்.எஸ்.எம். சுபைர் தெரிவித்தார்.

E-Soft நிறுவனத்தின் கிழக்கு பிராந்திய கற்கை நிலையத்தில் கணினி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 600 இளைஞர், யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு தேவநாயக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு E-Soft நிறுவனத்தின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் ரீ. சசிகுமார் தலைமையில் நடைபெற்றன. மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எம். சாள்ஸ், E-Soft நிறுவனத்தின் தலைவர் டாக்டர் தயான் ராஜபக்ஷ ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதி தவிசாளர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் கணினி அறிவையும் வர்த்தக மற்றும் விஞ்ஞானம், கணிதம் போன்ற உயர் கல்வியைப் பெற பலமைல்தூரங்கள் பயணத்து கொழும்பு, கண்டி போன்ற பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையே எமக்கு ஏற்பட்டது. பெண் பிள்ளையாக இருந்தால் அப்பிள்ளையின் பாதுகாப்பு பற்றியும் சிந்திக்க வேண்டியிருந்தது. ஆனால், இன்று அந்நிலை முற்றிலும் மாறி எமது காலடியிலேயே கல்விக்குரிய எமக்கு பல வழிகள் கிடைத்துள்ளன.

அரசாங்கம் கல்வியில் பாரிய மாற்றத்தையும் முன்னேற்றங்களையும் கொண்டு வருகின்ற இவ்வேளையில், அதற்கு ஒத்ததாக தனியார் கல்வி நிறுவனங்களும் தமது கொடிகளை பறக்க விடுகின்றன. அதிலும் கல்வியை வியாபாரம் நோக்கம் கருதி காசுக்கு விற்றுஉழைக்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் இருக்கின்ற போதும் E-Soft நிறுவனம் இவைகளை துச்சமென மதித்து இலங்கையில் தரம் வாய்ந்த கல்விச் சேவையை வழங்கி வருகின்றது. அதன் பிரதிபலிப்புத்தான் இன்று 600 மாணவர்களுக்கு கணினிக் கல்வியை வழங்கி கிழக்குப் பிராந்தியத்தில் அதன் அடைவு மட்டத்தைக் காட்டியுள்ளது.

எனவேதான், வியாபார நோக்கத்திற்காக கல்வி நிலையங்களை நடத்தும் நிறுவனங்களிடம் நான் அன்பாகவும் எச்சரிக்கையாகவும் வேண்டிக் கொள்வது, தயவு செய்து கல்வியை ஒருபோதும் விலை பேசி விற்றுவிட வேண்டாம். எமது நாளைய தலைமுறைக்காக அதனைப் பரிசளியுங்கள். அதன் மூலம் எமது மாவட்டத்திலும் மாகாணத்திலும் சிறந்த கல்வியாளர்களை உருவாக்கி தேசத்தில் நல்ல மாற்றத்தைக் கொண்டு வர நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் கடமையாற்ற வேண்டும்.

# மத்ரஸாக்களில் பயிற்சியளிக்கப்படுவதாக கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது

## பாராளுமன்றத்தில் அஸ்வர் எம்.பி.



மத்தரஸாக்கள் சம்பந்தமாக சில வட்டாரங்களில் சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன. மத்ரஸா என்பது தீவிரவாதிகளுக்குப் பயிற்சியளிக்கும் இடமென்பது உண்மைக்குப் புறம்பான கூற்று. சிறு வயதில் நானும் மத்ரஸாவுக்குச் சென்றவன் தான் என ஏ.எச்.எம். அஸ்வர் எம்.பி தெரிவித்தார். கடந்த வாரம் பாராளுமன்ற விவாதத்தில் கலந்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் ஆரம்பத்தில் தஃலீமுல் குர்ஆனை வாசிக்கக் கற்றுக் கொள்கின்றோம். பள்ளிகளோடு சேர்ந்து மார்க்கம் கற்றுக் கொடுக்கப்படும். பள்ளியில் தொழுவிக்கும் லெப்பை பள்ளியோடு சேர்ந்து குர்ஆன் மத்ரஸாக்களை ஆரம்பித்து குர்ஆன் ஓதிக் கொடுப்பது வழக்கம். குர்ஆனை ஓதாத ஒருவர் முஸ்லிமாக இருக்க முடியாது. அதுதான் எங்களுடைய மார்க்கம். எனவே, இது குறித்து எந்த விதமான சந்தேகத்தையும் எற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்று சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

தெற்கிலே முஸ்லிம்களுடைய மாட்டிறைச்சிக் கடையொன்றை ஊர்வலம் சென்றவர்கள் உடைத்திருக்கிறார்கள். இதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், அரசியல் யாப்பின் 10ஆவது வாசகத்தின் படி முஸ்லிம்கள் உட்பட அனைத்து மதத்தவருக்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இஸ்லாத்தின் ஓர் அங்கம்தான் குர்பான்-உழ்கிய்யா கொடுப்பது. அதை இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகிலுள்ள எல்லா முஸ்லிம்களும் கட்டாயமாகச் செய்வார்கள். யாராலும் அதை நிறுத்த முடியாது. இப்படியாக தப்பான விதத்தில் வழிதவறி நடப்பவர்கள் மூலமாக அசம்பாவிதம் நடந்தால், அந்தக் கெட்ட பெயர், அந்தப் பழி ஜனாதிபதி அவர்களைத்தான் சேரும். தெற்கிலே மாட்டிறைச்சிக் கடைகளுக்கும் முஸ்லிம்களுக்கும் அடிக்கின்றார்கள் என்று SMS அனுப்பி உலகத்துக்குச் சொல்வதற்கு இங்கு நிறையவே ஆட்கள் இருக்கின்றார்கள்.

# அல்ஹிறா மஹா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா


மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி அல்ஹிறா மஹா வித்தியாலயத்தில் முப்பெரும் விழா, அண்மையில் வித்தியாலய அதிபர் எம்.சீ.எம்.ஏ. சத்தார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. எம். அஹமட் லெப்பை, கல்வியமைச்சின் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கிழக்கு மாகாண திட்ட முகாமையாளர் எஸ். கலாநிதி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறுக் உட்பட காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பாடசாலையில் 2013 வருடாந்த பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றதுடன் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் மஹிந்தோதய ஆய்வு கூடத்திற்கான அடிக்கல்லை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நட்டி வைத்தார்.

இந்நிகழ்வின் போது இவ்வித்தியாலயத்தில் நீண்ட காலமாக கடமையாற்றிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# சமாதான நீதவான்



எஸ்.எல். அப்துல் அஸீஸ்

கல்முனை3 ஆம் பிரிவைச் சேர்ந்த நூறு முஹம்மது ஜலீல் என்பவர் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார்.

மௌலவி ஆசிரியரான இவர், கல்முனை ஜம் இயத்துல் உலமாவின் நிர்வாக உறுப்பினரும் கல்முனை லக்கி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் பொதுச் செயலாளருமாவார். இவர் அலியார் நூறு முஹம்மது - ஆமினா உம்மா ஆகியோரின் புதல்வராவார்.

# மாணவர்கள் கௌரவிப்பு விழா

எமது நிருபர்

சம்மாந்துறை அல்மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி உயர்தர மாணவிகளின் கௌரவிப்பு விழா அண்மையில் ஆசிரியர் ஏ.எம். முபாறக் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இம்முறை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான 22 மாணவிகளைக் கௌரவித்தல், விடுகை வருட மாணவிகளை வழியனுப்புதல் மற்றும் புதிய உயர்தர மாணவிகளை வரவேற்றல் ஆகிய மூன்று நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கல்லூரி அதிபர் திருமதி அபீரா சலீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்

வர்த்தகப் பிரிவிலிருந்து முதன் முறையாக மூன்று 'A' சித்தி பெற்ற மாணவி மற்றும் சித்திரப் பாடத்தில் முதன் முறையாக சித்தி பெற்ற மாணவி ஆகியோர் குறிப்பிட்ட துறையில் கற்பித்த ஆசிரியைகளால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மாணவிகள் மற்றும் ஆசிரியர்களினதும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் விழா சிறப்பு மலரொன்றும் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் ஜெஸ்மி எம். மூஸா மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

**எங்கள் தேசத்தில்**

**விளம்பரம் செய்வதற்கு தொடர்பு கொள்ளவும்**

**ரீ. முஸ்தாக்**

**0777 396 306**

# பெண்களிடையே மாற்றத்தை ஏற்படுத்த மௌலவியாக்கள் செயற்பட வேண்டும்

சமுதாய திருத்தத்திற்கு அரபுக் கல்லூரிகள் மகத்தான பங்களிப்பை நல்கி வருகின்றன என்றால் அது மிகையாகாது. அதே வேளை, பெண்கள் அரபுக் கல்லூரிகளில் கல்வி கற்று வெளியாகும் மௌலவியாக்கள் பெண் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த பாடுபட வேண்டும் என அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி இஸ்லாம் பாடநெறி தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான மௌலவி எம்.ஐ.எம். ஜஃபர் தெரிவித்தார்.

பொலன்னறுவை ஸைனபியா மகளிர் அரபுக் கல்லூரி மாணவியர் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியைப் பார்வையிட்டனர். அவர்களை இஸ்லாம் கற்கை நெறி பயிலுனர்கள் வரவேற்று விளக்கமளித்ததுடன் ஒன்று கூடலொன்றையும் ஏற்பாடு செய்தனர். இவ்வைபவத்தில் கலந்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1992ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி தமிழ் மொழி கல்வியற் கல்லூரிகளில் முதலாவது கல்லூரியாகும்.

நாட்டில் இஸ்லாம் கற்கை நெறி உள்ள ஒரேயொரு கல்விக் கல்லூரியும் இதுவாகும். அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் கடந்த மூன்று வருடங்களாக இந்து மாணவர்களும் அனுமதிக்கப்பட்டு தமிழ் மொழி பேசும் சமூகங்களின் கல்லூரியாக மிளிர்கிறது.

தமிழ்-முஸ்லிம் இன உறவைக் கட்டியெழுப்பி சமூகத்திற்குத் தேவையான ஆசிரியர்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றமை இதன் சிறப்பம்சமாகும். இதுவரை நான்காயிரம் ஆசிரியர்களை இக்கல்லூரி பயிற்றுவித்துள்ளது.

நாட்டில் அண்மைக் காலமாக அரபுக் கல்லூரிகள் அதிகரித்து வரும் அதேவேளை, பெண்கள் அரபுக் கல்லூரிகளும் துரித வளர்ச்சி கண்டு வருகின்றன.

இது முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அடையாளத்தைப் பேணவும் சமூகம் வேண்டி நிற்கும் தற்கால அடிப்படை சவால்களுக்கு ஈடுகொடுப்பதற்கும் முடியும். அதற்கேற்ப பெண் மௌலவியாக்கள் பங்களிப்பு நல்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் விரிவுரையாளர் எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானாவும் விளக்கமளித்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல்:

ஜுனைத் பாத்திமா பஹீத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு அடித்தால் எங்கு வலிக்கும் 13ஐ வைத்து இந்தியாவுக்கு விழுந்த அடி

**இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் பட்சத்தில் அது இந்தியாவுக்கே பாதகமாக அமையும். இதனை சீனா பயன்படுத்திக் கொள்வதுடன் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சியளிக்க முன்வரும் அதேவேளை, இலங்கையில் இன்னொரு பாகிஸ்தானை உருவாக்க சந்தர்ப்பமும் கிடைத்து விடும்.**


மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதன் நிலையான தன்மைக்கு 3 விடயங்கள் முண்டு கொடுத்துக் கொண்டிருப்பதாக பரவலான கருத்துக்கள் உள்ளன.

முதலாவது, யுத்த வெற்றி உட்பட இன்னும் பல அதிஷ்ட சம்பவங்கள் சரியான தருணத்தில் சரியாகக் கிடைத்தமை.

இரண்டாவது, எங்கு அடித்தால் எங்கு வலிக்கும் என்று நாடி பிடித்துக் காய் நகர்த்தும் ராஜ தந்திரம்.

அடுத்தது, இதையெல்லாம் தெரிந்து கொண்டே எல்லாவற்றுக்கும் 'ஆமாம்' போட்டுக் கொண்டிருக்கும் மகா ஜனங்களின் ஆதரவு.

எந்தவொரு பிரச்சினையின் போதும் சில தீர்க்கமான சந்தர்ப்பங்களிலும் யாரைப் பிடித்தால் எது நடக்கும், எங்கு அடித்தால் எங்கு வலிக்கும் என்ற நாடி பிடிப்பில் அரசாங்கம் சாதனை படைத்து வருவதாகத்தான் தெரிகிறது.



அதில் கண்டதுதான் கடந்த சில வாரங்களாக இலங்கை அரசியலில் பேசப்படும் 13ஆவது யாப்புத் திருத்த விவகாரம்.

13 விவகாரத்தில் விமல் வீரவன்சவையும் ஜாதிக ஹெல உறுமயவையும் தூண்டி விட்டு என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தது அரசாங்கம்.

ஆளுக்காள் அறிக்கைகள் விட்டார்கள், விமரிசித்தார்கள் பிரிந்தார்கள், சேர்ந்தார்கள், இவை எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்து அரசாங்கம்.

13ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் மிக முக்கிய கதாநாயகனான இந்தியாவின் நிலைப்பாட்டை அவதானித்துக் கொள்ளுமாறு ஆள் வைத்து விட்டு சீனாவுக்குப் பறந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இதுவே இந்தியாவுக்கான முதலாவது அடியாக விழுந்தது. தன்னை சுதாகரித்துக் கொண்ட இந்தியா, 13 விடயத்தில் பாம்புக்கும் நோகாமல் கம்புக்கும் நோகாமல் மெல்லக் காய் நகர்த்திக் கொண்டிருந்தது. இருந்தாலும், 13ஐ ஒழிப்பதற்கு எதிரான பலமான கோஷங்களும் தமிழ் நாட்டிலிருந்து எழுப்பப்பட்டன.

இந்தியாவுக்கு எங்கு எப்போது அடிக்க வேண்டும் என்று தருணம் பார்த்திருந்த இலங்கை அரசாங்கத்திற்கு அப்போதுதான் தமிழ் நாட்டுக்கு பயிற்சி பெறச் சென்ற இலங்கை இராணுவ அதிகாரிகள் மீதாக எழுந்த எதிர்ப்பலை பழம் நழுவி பாலில் விழுந்த கதையாக அமைந்தது. அதன் எதிரொலியாகத்தான் கடந்த வாரம் டில்லிக்கு இரண்டு அடிகளைக் கொடுத்திருக்கிறது கொழும்பு.

**ஸிமால் சைய்யாப்**

முதல் அடி, இந்தியாவுக்குப் பயிற்சிக்காக அனுப்பப்படும் படையினருக்கு அங்கு போதிய பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினால் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு பயிற்சிக்காக அனுப்புவதுடன் இந்தியாவைக் கைகழுவ உத்தேசிப்பதாகவும் வெளியான செய்தி.

இரண்டாவது, கடந்த வாரம் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானி குறித்த செய்தி.

கடந்த வாரம் தமிழ்நாடு குன்னூர் வெலிங்ரன் இராணுவக் கல்லூரிக்கு பயிற்சி பெறச் சென்ற இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் தமிழகக் கட்சிகளால் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்பலைகளை அடுத்து இலங்கைக்கு மீளழைக்கப்பட்டனர். இதையடுத்து, தமிழ் நாடு தவிர்ந்த வேறு மாநிலங்களில் பயிற்சியளிக்க டில்லி முன்வந்த போதும் கொழும்பு அதனை மறுத்து விட்டது.

பகைவனின் பகைவன் நண்பன் என்பதற்கொப்ப இந்தியாவின் எதிரிகளிடம் பயிற்சி பெறும் யோசனையை இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இது உண்மையில் இந்தியாவின் வயிற்றில் புளியைக் கரைத்தது போலத்தான். பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் இலங்கை விஜயமும் இந்தியாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை.

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்ட

(18ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக கத்திக் குத்து மாணவர் சமூகத்துக்கு தவறிய முன்னுதாரணமாகுமா?

"என்னைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்! என்று சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி ஓடிச் சென்றேன். கிட்டே நெருங்கி வந்தால் உன்னையும் குத்திக் கொன்று விடுவேன் எனக் கத்தினார் டாக்டர் சிவஞானசுந்தரம் சுரேந்திரஜித். அங்கு மிஸ் இரத்த வெள்ளத்தில் மிதந்தார். நான் ஓடிச் சென்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் சொன்னேன்."

இது, கடந்த வாரம் கொழும்பு நாவல திறந்த பல்கலைக்கழக சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் யசோதரா கதிர்காமத்தம்பி (45) மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான கத்திக் குத்து தாக்குதல் குறித்து சாட்சியமளித்த பி.பி. ரேமாவதி தெரிவித்தது.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் மட்டுமன்றி, மிக அண்மையில்



வாஸ் குணவர்தன
முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர்

இடம்பெற்ற முஸ்லிம் வர்த்தகர் முஹம்மத் சியாமின் கொலைச் சம்பவத்தில் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ்குணவர்தன அவர்களும் சம்பந்தப்பட்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்ற செய்திகளைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது. கள்வர்களும் முரடர்களும் கொள்ளையர்களுமே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக கூறப்பட்டு வரும் இச்சூழலில், படித்துப் பட்டம் பெற்றவர்களும் சட்டத்தைக் காக்க வேண்டியவர்களும் இவ்வாறு ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுவதை பார்க்கும் போது நல்லவருக்கும் கெட்டவருக்கும், படித்தவருக்கும் படியாதவருக்கும் இடையில் எந்த வித்தியாசங்களும் இருப்பதாக தெரியவில்லை.

விரிவுரையாளர் மீதான இத்தாக்குதல் சம்பவத்தின் விளைவு எதிர்கால எமது இளம் சந்ததியினர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தீய முன்னுதாரணத்தை வழங்கியுள்ளமை கவலையளிக்கிறது. திறந்த பல்கலைக்கழகத்தில் நடந்த இச்சம்பவம் இலங்கை வரலாற்றில் கறை படிந்த ஒரு தொடக்கப் புள்ளியாக அமைந்து விடுமோ என்று அச்சமாகவும் இருக்கிறது.

**கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் கூட மாணவர்களிடம் செயற்திட்டங்களும் ஒப்படைகளும் கோரப்படுவது வழக்கம். அது மாணவர்களால் உரிய நேரத்தில் கையளிக்கப்படாத போது, குறித்த மாணவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுவதும் இயல்பானதுதான். இதற்காக கற்றுத் தருகின்ற ஆசான்களை இலக்கு வைத்து தாக்குவதென்பது எவ்வளவு பெரிய மடமை. அதற்குரிய முடிவு இதுவல்ல.**

**பஷீர் அலி**

குறித்த விரிவுரையாளரைத் தாக்கிய யாழ் பலாலியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் சுரேந்திரஜித் (40) ஒரு டாக்டராவார். உயிரோடு போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு சிகிச்சையளிக்கும் ஒரு மருத்துவர், உயிர் குடிக்கும் ஒரு பாதகச் செயலை செய்திருப்பது எவ்வளவு மூர்க்கத்தனமானது? அதுவும், விரிவுரையாளரை கத்தியால் சரமாரியாகத் தாக்கி விட்டு தானும் தற்கொலை செய்து கொள்ளும் நோக்கில் இனந் தெரியாத மாத்திரைகளை உட்கொண்டிருக்கிறார்.

நாவல திறந்த பல்கலைக்கழக சட்ட பீடத்தின் இறுதி மாணவரான குறித்த வைத்தியர் கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் தங்கியிருந்து வத்தளையிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றி வருகிறார். வைத்தியத் துறையில் தனது திறமையைக் காட்டி பட்டம் பெற்றிருந்த போதும் சட்டத்துறை கல்வியில் அவரால் ஜொலிக்க முடியவில்லை. பல பரீட்சைகளில் கோட்டை விட்டிருந்தார்.

இத்தருணத்திலேயே இறுதிப் பட்டம் பெறும் பொருட்டு செயற்திட்டம் கோரப்பட்டிருந்தது. ஆனால், குறித்த மாணவர் அதனையும் குறிப்பிட்ட காலத்துக்குள் வழங்காமல் சம்பவ தினத்துக்கு முதல் நாளான ஜூன் 18ஆம் திகதி செயற்திட்டத்தை ஒப்படைத்திருக்கிறார். காலதாமதத்தை காரணமாகச் சொன்ன விரிவுரையாளர் அதை ஏற்க மறுத்திருக்கிறார். இதனால் போபமடைந்த மாணவரான சிவஞானசுந்தரம் சுரேந்திரஜித் மறுநாள் கூரான கத்தியுடன் பல்கலை வளாகத்துள் நுழைந்து அவரது திட்டத்தை அமுல்படுத்தியிருக்கிறார்.



விரிவுரையாளர் யசோதரா கதிர்காமத்தம்பி

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளில் பாடசாலை மாணவர்களிடம் பரவியிருக்கும் ஒரு வியாதிதான் தனது பாடசாலையின்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்
மலர்: 12 இதழ்: 13 ஜூலை 01-14, 2013
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# முன்னுதாரணத்தைப் பாராட்டுவோம்

இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டு வேலை செய்யும் அமைப்புகளின் பட்டியல் நீண்டு கொண்டு வரும் இக்காலகட்டத்தில், பேருவளையில் அண்மையில் நடந்த நிகழ்வுகள் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்றால் மிகையாகாது.

அண்மைக் காலங்களில் காலநிலை மாற்றத்தால் உருவான கடற் சீற்றத்தினால் தெற்குக் கரையில் ஏராளமான மீனவர்கள் பரிதாபமாக உயிரிழந்ததையும் நூற்றுக்கணக்கான மீன் பிடிப் படகுகள் சேதமைடைந்ததையும் நாம் அறிந்ததே. வானிலை அவதான நிலையத்திற்கும் சிலபோது கடற்படை, விமானப்படை ஊழியர்களுக்கும் எதிராகவே முறைப்பாடுகள் செய்யப்படும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருந்தது. ஹெலிக்கொப்டர்கள், கடற்படைகளின் அதிவேகப் படகுகள் மூலம் செய்ய முடியாத காரியத்தை பேருவளை மருதானை முஸ்லிம் இளைஞர்கள் மேற்கொண்டுள்ள செய்தி முன்னுதாரணமாகும்.

அனர்த்தம், விபத்து, ஆபத்து என்று வரும் போது இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று உதவுவது மனிதப் பண்பு. சுனாமியின் போதும், வெள்ள அனர்த்தங்களின் போதும் நாம் இந்தப் பண்பை இலங்கையர்களிடம் கண்டோம். கடல் சீற்றத்தின் நடுவே தம் உயிரைப் பணயம் வைத்து சிங்கள மீனவர்களின் உயிரையும் உடமைகளையும் காப்பாற்றிய மருதானை முஸ்லிம் இளைஞர்களைப் பூ வைத்து வணங்க வேண்டும் என்று மீனவ சங்கத் தலைவர் குறிப்பிடும் அளவுக்கு அவர்களின் சேவை உயர்ந்து நிற்கின்றது.


இந்த இளைஞர்களின் பணி மட்டும் இல்லாதிருந்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்திருக்கும் என்றே கூறப்படுகிறது. பேருவளை மருதானையைச் சேர்ந்த தம்பி என்று செல்லமாக அழைக்கப்படும் ரிஸ்வானும் அவருடைய சகாக்களும் 50இற்கும் மேற்பட்ட மீனவர்களின் உயிர்களையும் 14 மீன் படகுகளையும் காப்பாற்றியுள்ளனர்.

மருதானைக்கு அண்மிய ஊர் பண்டாரவத்தை. அக்கிராமத்தாரின் பிரதான தொழில் மீன்பிடியாகும். அவர்கள் கடந்த கடற் சீற்ற காலத்தில் கடலில் சிக்கித் தவித்தனர். அதன் போதுதான் ரிஸ்வான் அன்ஸார், முஸ்கி, ரஸ்லான், மும்தாஸ், பைரூஸ், முவான் உள்ளிட்ட இளைஞர்களும் உடனடியாக செயலில் இறங்கி தம் உயிரை துச்சமாக மதித்து பண்டாரவத்தை சிங்கள மீனவர்கள் சிலரைக் காப்பாற்றிய நிகழ்வை மீனவ சங்கத் தலைவர் சுனில் ரம்யசிறீ உட்பட அனைவரும் பாராட்டியுள்ளனர்.

பல மணி நேரம் ஆகாயத்தில் சுற்றிய ஹெலிக்கொப்டரினால் கூட ஒருவரைத்தான் காப்பாற்ற முடிந்தது. ஆனால், இந்த முஸ்லிம் இளைஞர்களோ 50இற்கும் மேற்பட்டோர்களை காப்பாற்றினர் என்று அவர் நன்றியோடு குறிப்பிட்டுள்ளார். இவர்கள் அரச கௌரவத்துக்கு உரியவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் துயரை அறியச் சென்ற ஊடகவியலாளர்கள் இந்த இளைஞர்களைப் பேட்டி காண முற்பட்ட போதும் தாம் இயல்பான மிகச் சாதாரண வேலையைச் செய்ததாகவே கூறியுள்ளனர்.

மனித நேயம் மிக்க இந்தப் பணி இலங்கை பல்லின மக்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும். அந்த இளைஞர்களின் துணிச்சலையும் சேவை மனப் பாண்மையையும் எங்கள் தேசம் பாராட்டுகிறது. வாசகர்களும் அந்த இளைஞர்களுக்காகப் பிரார்த்திக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.






*இந்தியா-இலங்கை உறவில் விரிசல் இல்லை*

*-அமைச்சர் தினேஷ் குணவர்த்தன-*

**அப்புடிண்டா, ஜனாதிபதி சேர் சீனாவுக்கு கிளம்பித் தீர்ர என்னத்துக்காம்?**

*இலங்கை வர்த்தக மாநாடு அவுஸ்திரேலிய தொழில் முயற்சியாளருக்கு நல்ல வாய்ப்பு*

*-வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்-*

**மாநாட்டுக்கு வார அவுஸ்திரேலியர்கள கஷினோவைக் காட்டி கௌட்டுடலாம்**

*உல்லாச பயணத்துறை வளர்ச்சிக்கு கிழக்கு பெரும் பங்களிப்பு*

*-அமைச்சர் பஷில் ராஜபக்ஷ-*

**அதத்தான சேர் நாங்களும் சொல்லிவாறம். உல்லாச பயணத்துறை மட்டுமில்ல, எல்லாத்துறையிலயும் கிழக்கும் அங்கரிக்கிற சிறுபான்மையினரும் செய்ற பங்களிப்புகள பொது பல சேனாவிடமும் சொல்லுங்க சேர்**

*தெரிவுக்குழுவில் இடம்பெறாவிட்டாலும் எமது கருத்துக்கள் அங்கு ஒலிக்கும்*

*-அமைச்சர் ராஜித சேனாரத்ன-*

**கருத்துக்கள் ஒலிக்குமா, ஒழித்துக் கொள்ளுமாண்டு பொறுத்திருந்துதான் பாக்கனும்!**

*13வது திருத்தம் தொடர்பில் இந்தியா ஏதாவது விடயங்களை முன்வைத்தால் அதனை ஆராய்வோம். ஆனால், சுயாதீனமாகவே தீர்மானங்கள் அமையும்*

*-அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல-*

**யுத்தத்த ஒழிக்கிற நேரத்தில இந்தியாட கத தேவ, இப்ப தேவல்லியாமா?**

*கூட்டமைப்பு-மு.கா. இல்லாத தெரிவுக்குழு நம்பகத்தன்மை அற்றதாகவே அமையும்*

*-அமைச்சர் ரஊப் ஹக்கீம்-*

**ஏற்கனவே நம்பிக் கெட்டது போதும் வாப்பா. நம்பாமல் கெடுறதுக்கும் ஒரு சந்தர்ப்பம் குடுங்க வாப்பா**

*புதிய ஊடக ஒழுக்கக் கோவை நடைமுறைக்கு வராது*

*-ஜனாதிபதி-*

**வராது... ஆனா, வரும்**

*விநியோகஸ்தர்களின் செயற்திறன் இன்மையே மருந்து விநியோகப் பிரச்சினைக்குக் காரணம்*

*-சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன-*

**அதிகாரிமார் வாங்குற லஞ்சமும் ஊழலும்தான் இதுக்குக் காரணமுண்டும் சொல்றாங்களே சேர்**

*முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்*

*-ஹசன் அலி-*

**ரோசமில்ல இவுகளுக்கு. அசாத் சாலியும் இதத்தான் சொல்றாரு**

*கொலையுண்ட முஸ்லிம் வர்த்தகரின் கைத் தொலைபேசி கழிவுக் கால்வாயில் மீட்பு*

*-பொலிஸ் தலைமையத்தின் அதிகாரி-*

**வேலிதான் பயிர்கள மேயிது, கெட்டிக்காரர்கள்.**

எங்கள் தேசம் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| உள்நாடு | தனிப்பிரதி: 30.00<br>வருட சந்தா: 1200.00<br>ஆறு மாதங்கள்: 600.00 | |
| வெளிநாடு | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 | அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00<br>இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசியல் பார்வை



எம்.எச்.எம். ஹஸன்

## விரிசலுக்கு வித்திடும் இனவாத அரசியல்

அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களுடன் உடன்பட முடியாதவர்கள் வெளியேறலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். 13ஆவது அரசியல் யாப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கும் அமைச்சர்களையா அவர் கூறியிருக்கிறார் என்று தெளிவாகவில்லை. கபினட் அமைச்சர்களான விமல் விரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோர் வெளிப்படையாகவே 13ஐ எதிர்க்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

தினேஷ் குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட்ட சில அமைச்சர்களும் அதே கருத்தில் இருப்பதாகவே தெரிகிறது. அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டீ. யூ. குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ராஜித சேனாரத்ன, ரெஜினோல்குரே ஆகியோர் 13ஐத் திருத்த வேண்டிய அவசியம் கிடையாது என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளனர். பத்திரிகை மாநாட்டில் தம் கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ள வடக்கு, கிழக்கு மலையக தமிழ் பேசும் கட்சிகளும் 13இன் சிறகுகளை கத்தரிப்பதை ஆதரிக்கும் நிலையில் இல்லை என்றே தெரிகிறது. அரசாங்கம் அறிவித்த தெரிவுக்குழுவின் முன்னைய சர்வகட்சி அமைப்பின் தலைவர் பேராசியர் திஸ்ஸ விதாரண இடம் பெறாமை குறித்தும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. சிறுபான்மைக்கு ஆதரவு என்பதால் வேண்டுமென்றே அவர் தவிர்க்கப்பட்டார் என்ற அபிப்பிராயம் வலுவடைந்துள்ளது.

மாகாண சபை எனும் பாம்பின் ஐந்து விஷப் பற்கள் பிடுங்கப்பட வேண்டும் என்பது அமைச்சர் விமல் வீரவன்சவின் நிலைப்பாடாக உள்ளது. இரண்டு மாகாண சபைகளை ஒன்றிணைத்தல், பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம், மாகாண சபை அதிகாரப் பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை அனைத்து மாகாணங்களும் அங்கீகரிக்க வேண்டும் என்ற நிபந்தனை, உள்ளூராட்சி சபைகளை இடையில் கலைக்கும் அதிகாரம் என்பவை இந்த ஐந்து விஷப் பற்களுமாகும் என்பது அவரது வாதம். தாம் ஆரம்பத்திலிருந்தே மாகாண சபை முறைக்கு எதிரானவர்கள் என்றும், 25 வருடங்களாக இயங்கி இருப்பதால் இப்போது மாகாண சபை முறையில் மாற்றம் கொண்டு வந்து அதன் இருப்பை அங்கீகரிப்பதாகவும் பாராளுமன்ற சட்ட மூலத்தை அனைத்து மாகாண சபைகளும் அங்கீகரிக்க வேண்டும் என்ற சட்டம் பெரும்பான்மையான சபைகளின் அங்கீகாரம் என்று மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

30 வருட காலம் தமிழ் ஈழம் கோரி ஆயுதங்களால் போராடிய பிராபாகரனின் அடிச்சுவட்டிலேயே தமிழ்த் தேசியக் கூட்டணி பயணிப்பதாகவும் அப்படியொரு கட்சி அதிகாரத்தைப் பெறும் போது காணி, பொலிஸ் அதிகாரங்கள் இருப்பது ஆபத்தானது என்றும் அவர் கூறியுள்ளார். வேறு ஒரு மதவாதக் கட்சியாக இருந்தால் ஏனைய மாகாணங்களைப் போன்று இதனை அனுமதிக்கலாம். எனினும் டீ.என்.ஏ. பிரிவினை வாதக் கட்சி என்பதால் அது நாட்டுக்கு ஆபத்தானது என்றும் வீரவன்ச தனது நிலைப்பாட்டை விளக்குகிறார்.

அமைச்சரவைக் கூட்டத்திலும் அதற்கு வெளியிலும் 13ஆவது யாப்பு குறித்து அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் நிலையும் உருவாகி உள்ளது. இந்த நிலையில் 2/3 பெரும்பான்மை பெற்று அரசின் மசோதாவை நிறைவேற்றுவதிலும் சிக்கலுள்ளது. அரசாங்கம் திருத்த மசோதாவில் தோல்வியடைந்தால் அது மசோதாவின் தோல்வியாகவன்றி, அரச கட்டடம் சரியத் தொடங்குவதன் அடையாளமாகக் கொள்ளப்படும் அபாயம் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### இருவகைத் திருத்தங்கள்

மாகாண சபை முறை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையில் இரண்டு வகையான திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன. ஒன்று, அரசாங்கம் ஏலவே அமைச்சரவையில் நிறைவேற்றியதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஏகமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான திருத்தம். மேலும் அத்திருத்தம் இப்போது மாகாண சபைகளில் நிறைவேற்றப்படுகின்றன. ஏற்கனவே சில மாகாண சபைகள் அதனை அங்கீகரித்து விட்டன. வடமேல் மாகாண சபையில் அதற்கு ஆதரவளித்தமைக்காக முஸ்லிம் காங்கிரஸின் இரண்டு மாகாண சபை உறுப்பினர்கள் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதும் இந்தச் சீர்த்தம் தொடர்பாகத்தான். இதில் இரண்டு விடயங்களே திருத்தப் பிரேரணைக்கு உட்படுகின்றன. முதலாவது, ஒன்றுக்கு மேற்பட்ட மாகாண சபைகள் சுயாதீனமாக இணைவதைத் தடுக்கும் சீர்திருத்தம். இரண்டாவது, மாகாண சபைகளின் அதிகாரப் பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை அனைத்து மாகாண சபைகளும் அங்கீகரிக்க வேண்டும் என்பதை மாற்றி, பெரும்பான்மையான மாகாண சபைகளின் அங்கீகாரம் போதுமானது என்ற திருத்தமுமாகும். சிறுபான்மை தொடர்பான விவகாரங்களில் கூட வடக்கு-கிழக்கு மாகாண சபைகளின் அங்கீகாரம் இன்றியே அமுல் நடத்தக் கூடிய வாய்ப்பு இதன் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கும். இந்தச் சீர்திருத்தம் இன்றோ, நாளையோ. அதாவது வட மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது வகைத் திருத்தம், ஐந்து விடயங்களை உள்ளடக்கிய மேற்கூறிய இரண்டுடன் காணி, பொலிஸ், உள்ளூராட்சி சபை கலைப்பு என்ற அதிகாரங்களை இரத்துச் செய்யும் திருத்தம். இது அரசாங்கத்தின் பொதுவான பிரேரணையாக அன்றி அமைச்சர்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோரின் முன்னெடுப்பாகக் கொண்டு வரப்படுவது. இந்தத் திருத்தப் பிரேரணை தொடர்பில் நிறையவே சர்ச்சைகள் எழுந்துள்ளன. அரசாங்கத்துள்ளேயே கருத்து வேற்றுமை எழுந்துள்ளது. அரசாங்கத்திற்கு வெளியே நின்ற கட்சிகளும் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இந்தப் பிரேரணையைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சமர்ப்பித்து அதனூடாக ஒரு மசோதாவை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றன. ஆயினும், அரசாங்கக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இதுவரை தெரிவுக்குழுவில் இடம்பெற விருப்பம் தெரிவிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல கட்சிகள் தெரிவுக்குழுவுக்கு வரப் போவதில்லை என்று அறிவித்துள்ளன. அமைச்சரவையில் இடதுசாரி உறுப்பினர்களும் ராஜித சேனாரத்ன, ரெஜினோல் குரே ஆகியோரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதும் இந்த காணி, பொலிஸ் அதிகாரம் பறிப்புக்குத்தான். அதே நேரம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இச்சட்ட மூலத்துக்கு ஆதரவு வழங்குவதில்லை என்றும் அறிவித்துள்ளது. இந்த நிலையில், அரசாங்கம் கொண்டு வரும் மாகாண இணைப்பு, மாகாண சபையின் அங்கீகாரம் என்ற சட்ட மூலத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தாலும் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கவுள்ள சட்டமூலத்துக்கு அத்தகைய பெரும்பான்மை கிடைப்பது சந்தேகம் என்றே கூறப்படுகின்றது.

அதை விடவும் முக்கியமான விடயம் அமைச்சர்களின் வாக்குகள் அரசுக்கு எதிராக வழங்கப்படுமானால் ஜனாதிபதியின் எச்சரிக்கையோடு சேர்த்துப் பார்க்கும் போது அரசாங்கத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தி விரிசலைத் தோற்றுவிக்கும் காரணியாக மாறும் ஆபத்து இருப்பதாகும். அத்தகைய நிலைமை தொடர்வதை அரசாங்கம் விரும்பாது. இந்த நிலையில் தெரிவுக்குழு செயற்படுமா, அதனது யோசனை பாராளுமன்ற மசோதா வரைக்கும் செல்லுமா? என்பதை இப்போது சொல்ல முடியாதுள்ளது.


### எதிரும் புதிருமான கருத்துகள்

ஜனாதிபதியின் கருத்தை எதிர்க்கும் ஐந்து அமைச்சர்களின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பது ஒரு புறமிருக்க, இந்த விடயத்தில் மனச்சாட்சிப்படி வாக்களிக்க அங்கத்தவர்களுக்கு ஜனாதிபதி அனுமதியளித்திருப்பதாகவும்

(20ஆம் பக்கம் பார்க்க)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்து கிடக்கும் நுரைச்சோலை வீட்டுத்திட்டம்





எம். பைஷல் இஸ்மாயில்

கடந்த சுனாமி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சஊதி அரசாங்கத்தினால் கட்டி முடிக்கப்பட்ட நுரைச்சோலை வீட்டுத்திட்டம் பல ஆண்டுகள் கடந்தும் இதுவரை உரியவர்களுக்கு கையளிக்கப்படாமையால் வீடுகளை திருடர்கள் உடைத்து அதிலுள்ள பெறுமதியான பொருட்களை திருடிச் செல்வதுடன் அவ்வீடுகள் கட்டாக்காலிகளின் இருப்பிடமாகவும் மாறி வருகின்றன.

இவ்விடம் கவனிப்பாரற்று காணப்படுவதால் வீடுகள் யாவும் காடு மண்டிக் காட்சியளிப்பதுடன் வீட்டுக் கதவுகள், நிலைகள் யன்னல்கள், ஓடுகள் என்பன திருடர்களால் களவாடப்படுகின்றன.

இந்த வீடுகளை பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிப்பதாக இருந்தால், அங்குள்ள வீடுகள் யாவும் மீண்டும் திருத்தியமைக்கப்பட்டே வழங்க வேண்டிய துரதிஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இவ்வீடுகளைத் தமக்கு கையளிக்கக் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் பலதடவைகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். இதனை வழங்க மறுக்கும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் செயலானது அம்மக்களின் விசனத்தை தூண்டுவதாகவே இருந்து வருகிறது.

எனவே, இந்த வீட்டுத்திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளிப்பார்களேயானால் திருடப்பட்டது போக மீதமாகவுள்ள பாதி வீட்டையாவது அந்த மக்கள் பெற்றுக் கொள்வார்கள்.

# கிண்ணியா தள வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்

## கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் உறுதி மொழி

எச்.எம். ஹலால்தீன்

கிண்ணியா தள வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் பூரணமாக நிவர்த்தி செய்து தருவதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் தெரிவித்தார்.

கிண்ணியா தள வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் அங்கு கடமையாற்றும் வைத்தியர்கள், ஊழியர்களைச் சந்தித்துப் பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.


இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், நகர சபைத் தவிசாளர் ஹில்மி மஹ்ரூப், வைத்திய அதிகாரி ஏ.எச். சமீம், கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர் கே.எம். நிஹார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் அவர் கூறுகையில்: நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சைகளைப் பூரணமாக வழங்குங்கள். ஏற்கனவே நடந்த சம்பவங்கள் இந்த வைத்தியசாலையில் மட்டுமல்ல நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலைகளில் நடந்திருக்கின்றன. இனி இவ்வாறான சம்பவங்கள் நடக்காமல் இருக்க அவதானமாக இருக்க வேண்டும்.

பொதுவாக வைத்தியசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டே வருகின்றது. இந்த வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளேன்.

மாகாண சபையினூடாக வைத்தியசாலைக்குத் தேவையான ஏனைய வசதிகளையும் வழங்குவதற்கு மிக விரைவில் நடவடிக்கை மேற்கொள்வேன் என மேலும் அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மீளிணக்கம்





பாரூக் சிகான்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் யாழ். பல்கலைக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த 'மீளிணக்கத்தில் உயர்கல்வியின் பங்கு' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடலொன்று அண்மையில் யாழ்ப்பாணம் கிறீன் ஹிராஸ் ஹோட்டலில் இடம் பெற்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், பிரதம விருந்தினராக முன்னாள் சர்வதேச நீதிமன்ற நீதிபதி சி.ஜீ. வீரமந்திரி கலந்து சிறந்த பல கருத்துரைகளை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் கல்வியியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மாணவர் கௌரவிப்பு விழா

கிண்ணியா நிருபர்

2012ஆம் ஆண்டு கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை இறக்கக்கண்டி அல்ஹம்றா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஏ. ஸலாகுத்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக குச்சவெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். ஸம்சுத்தீன் பெற்றார் ஆசிரிய சங்க உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 20 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் 2013ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் தலைவர்கள் மற்றும் வகுப்புத் தலைவர்கள் தெரிவும் இவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.



ஜமாஅத்தே இஸ்லாமி மாணவர் அமைப்பின் மருதமுனைக் கிளை மற்றும் அதனது சிறுவர் பிரிவு ஆகியன இணைந்து தரம் 6,7,8 மாணவர்களை மையப்படுத்தி 'அறிவியலில் முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு' எனும் கருப்பொருளில் ஏற்பாடு செய்த கண்காட்சி நிகழ்வு அண்மையில் ஜமாஅத்தே இஸ்லாமி மருதமுனைக் கிளையின் அலுவலகத்தில் நடைபெற்ற போது மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கண்காட்சிப் பொருட்களை பார்வையிடுவதைப் படங்களில் காணலாம். படமும் தகவலும்: றாசீக் நபாயிஸ்

# பள்ளிவாசல்களில் பணியாற்றுவோருக்கு மருதமுனையில் பயிற்சிப் பட்டறை

ஜெஸ்மி எம். மூஸா

செஸ்டோ ஸ்ரீ லங்கா அமைப்பின் சமய கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முஅத்தீன் மற்றும் பள்ளிவாசல் சேவையாளர்களுக்கான ஒரு நாள் செயலமர்வொன்று அண்மையில் மருதமுனை மத்திய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தென் கிழக்குப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ஏ.ஜே.எம். வஸீல், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் ரஸான், அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்சார் மௌலானா, பொதுச் சுகாதார பரிசோதகர் பைசல் முஸ்தபா, உம்முல் குரா முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ஐ. ஹுசைனுத்தீன், மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் எம்.எல். எம். முபாறக் மதனி, சமாதன கற்கைள் நிலையப் பணிப்பாளர் டாக்டர் றியாஸ் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரைகள் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வு அமைப்பின் தலைவர் என்.எம். முஸ்னி தலைமையில் இடம்பெற்றது. செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான ஊக்குவிப்புப் பணம் மற்றும் சான்றிதழ்களும் இதன் போது வழங்கப்பட்டன.






மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் வழிகாட்டலில் சமூக மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஒன்றியத்தினால் (சிடோ) காத்தான்குடி முதலாம் குறிச்சி மார்க்கட் சதுக்கத்தில் புதிய வாசிகசாலை அண்மையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இவ் வாசிகசாலையை எம்.ஏ.எம். ரவல்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அன்வர் ஹாபிஸ் நாடாவை வெட்டி வைபவ ரீதியாக திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். படமும் தகவலும்: பழுலுல்லாஹ் பர்ஹான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மூன்றை ஒழித்தலும் சீனாவின் கைக் கூலிகளும்



**கொள்கை அரசியலை மேற்கொள்ளும் நாகரிக அரசியல்வாதிகளாக இவர்கள் இருப்பார்களாயின் இவர்களுடைய கட்சியினர் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர் பதவிகளையும் அமைச்சுப் பதவிகளையும் உடனடியாக இராஜினாமாச் செய்வதோடு, மாகாண சபை சார்ந்த அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் முற்று முழுதாக விலகிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து அல்லது அதற்குள் அமர்ந்து கொண்டு கோஷம் இட்டுக் கொண்டிருப்பது இவர்களின் அரசியல் கோமாளித்தனத்தையே காட்டுகிறது. தெற்கில் மாகாண சபை முறைமை இருந்தால் அது ஜனநாயகம், தாராளவாதம், அதில் பங்கெடுப்பது ஜனநாயகத்தை வலுவூட்டும். ஆனால், வடக்கில் இருந்தால் அது அடிப்படை வாதம், பிரிவினை வாதம், நாட்டின் இறைமைக்கு ஊறு விளைவிக்கும். இத்தகைய அரசியல் சூத்திரத்தை கண்டு பிடித்திருக்கும் இவர்கள், தங்களது கொள்கை அரசியலை எப்பாசறையில் கற்றுக் கொண்டார்கள் என்று தெரியவில்லை.**

**1987.07.29ஆம்** திகதி இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களுக்கான ஒரு குறைந்தபட்ச அரசியல் தீர்வாகவே மாகாண சபை முறைமை முன் வைக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் சமூகத்தின் கோரிக்கைகளையும் அபிலாசைகளையும் இது முழுமையாக பூர்த்தி செய்ததா இல்லையா எனும் வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால், அரசியல் தீர்வுத்திட்ட முன் நகர்வில் ஓர் ஆரோக்கியமான சுட்டியாகவே அன்றைய புலமைத்துவ வட்டாரங்களால் நோக்கப்பட்டது. மாகாண சபை முறைமைக்கு வழி கோலிய 13ம் திருத்தம் தனி ஈழக் கோரிக்கையை முன்னிறுத்தி ஆயுதப் போராட்டம் நடத்திய தமிழீழ விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்ட போதும், தமிழ் சமூகத்தின் தீர்க்கதரிசனமிக்க அரசியல் தலைமைகள் பல அதனை வரவேற்கவே செய்தன.

கிழக்கின் பெரும்பான்மைச் சமூகமான முஸ்லிம் சமூகத்தை கலந்தாலோசிக்காது இரவோடிரவாக மேற்கொள்ளப்பட்ட இவ்வொப்பந்தத்தின் மூலம் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளும் அபிலாசைகளும் மறுக்கப்பட்டுள்ளதாக முழங்கிய முஸ்லிம் காங்கிரஸ் கூட அதனை முற்று முழுதாக எதிர்ப்பதை விடுத்து அதற்குள்ளாலேயே சமூகத்துக்கான காப்பீடுகளையும் உரிமைகளையும் வென்றெடுக்கப் போராடியது.

எது எப்படி இருப்பினும் இம்முறைமை ஒழிக்கப்பட்டு விடக்கூடாது என்பதிலேயே பெரும்பாலான அரசியல் தலைமைகளும் சிவில் தலைமைகளும் முனைப்புக் காட்டி வருகின்றன. எந்தளவுக்கென்றால் எந்த விடுதலைப் புலிகள் இம்முறைமையை கிழித்தெறிந்தார்களோ அதே விடுதலைப் புலிகளின் ஏக அரசியல் பிரதிநிதியாக செயற்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினரே இன்று இதனை தக்க வைத்துக் கொள்வதற்காகப் போராட்டம் நடத்துவதை காண்கின்றோம். ஆரம்பத்தில் இதனை விமர்சித்துத் தூற்றிய பலரும் இன்று ஓரணியில் திரண்டு இதற்கு ஆதரவாய் குரல் கொடுப்பதைப் பார்கின்றோம்.

அரசாங்கத்துக்குள்ளேயே இது தொடர்பிலான இரு கருத்தியல்கள் முனைப்பு பெற்றிருக்கின்றன. அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்றனவும் இந்நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ போன்றவர்களும் இம்முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் முனைப்போடு செயற்படும் அதேவேளை,



முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் சில தமது எதிர்ப்பை பகிரங்கமாகவே வெளியிட்டுள்ளன.

இச்சந்தர்ப்பத்திலேயே இத்தகைய வாதப் பிரதிவாதங்களின் பின்னணி பற்றி ஆராய வேண்டியதன் தேவைப்பாடு எழுகின்றது.

வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் 13ஆம் திருத்தச் சட்டம் அரசியலமைப்பில் இருந்து நீக்கப்படா விட்டால் அலரி மாளிகையை முற்றுகை இடுவோம் என முழங்கும் அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியாக இருக்கட்டும், இது இலங்கையின் இறைமையை பாதித்து ஒருமைப்பாட்டை சிதைத்து விடும் என ஆய்வறிக்கை சமர்பிக்கும் ஜாதிக ஹெல உறுமயவாக இருக்கட்டும் இவர்களில் எவரும் கடந்த மாகாண சபைத் தேர்தல்களில் பங்கு பற்றாமலோ, மாகாண ஆட்சியில் பங்கெடுக்காமலோ ஒதுங்கி இருந்ததாக வரலாறில்லை. கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலையில் தனித்துக் களமிறங்கிய NFF ஓர் உறுப்பினரை பெற்றுக் கொண்டதோடு ஆளும் பங்காளிக் கட்சியாக காணப்படும் அதேவேளை JHU வினது சிரேஷ்ட உறுப்பினரான உதய கம்பன்விலமேல் மாகாணத்தின் முக்கிய அமைச்சராகப் பவனி வந்து கொண்டிருக்கின்றார். இத்தகைய இலட்சணத்திலேயே மாகாண சபையை ஒழிக்கக் கோரும் அறப் போராட்டத்திற்கு அறைகூவல் விடுகின்றனர்.

கொள்கை அரசியலை மேற்கொள்ளும் நாகரிக அரசியல்வாதிகளாக இவர்கள் இருப்பார்களாயின் இவர்களுடைய கட்சியினர் வகிக்கும் மாகாண சபை உறுப்பினர் பதவிகளையும் அமைச்சுப் பதவிகளையும் உடனடியாக இராஜினாமாச் செய்வதோடு, மாகாண சபை சார்ந்த அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் முற்று முழுதாக விலகிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து அல்லது அதற்குள் அமர்ந்து கொண்டு கோஷம் இட்டுக் கொண்டிருப்பது இவர்களின் அரசியல் கோமாளித்தனத்தையே காட்டுகிறது. தெற்கில் மாகாண சபை முறைமை இருந்தால் அது ஜனநாயகம், தாராளவாதம், அதில் பங்கெடுப்பது ஜனநாயகத்தை வலுவூட்டும். ஆனால், வடக்கில் இருந்தால் அது அடிப்படை வாதம், பிரிவினை வாதம், நாட்டின் இறைமைக்கு ஊறு விளைவிக்கும். இத்தகைய அரசியல் சூத்திரத்தை கண்டு பிடித்திருக்கும் இவர்கள், தங்களது கொள்கை அரசியலை எப்பாசறையில் கற்றுக் கொண்டார்கள் என்று தெரியவில்லை.

அன்று தொடக்கம் இன்று வரைக்கும் இனப் பிரச்சினை விவகாரத்தில் தலையிட்ட எந்த சர்வதேச சக்திகளும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் இதய சுத்தியோடு செயற்பட்டதில்லை. மாகாண சபை முறைமைக்கு வித்திட்ட இந்தியா கூட இதற்கு விதிவிலக்கல்ல. பூகோள ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இந்தியாவுக்கு மிக நெருக்கமாக காணப்படும் இலங்கையை என்றும் தன் ஆளுகைக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதிலேயே இந்தியா கண்ணும் கருத்துமாய் செயற்பட்டிருக்கின்றது. இத்தகைய நிகழ்ச்சி நிரலின்

**- இப்னு ஹமீத் -**

ஓர் அங்கமாகவே இலங்கை-இந்திய ஒப்பந்தமும் அநேக அரசியல் ஆய்வாளர்களால் நோக்கப்படுகின்றது.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலேயே இலங்கை மீதான ஆதிக்கப் போரில் முட்டி மோதிக் கொண்டிருக்கும் பிராந்திய வல்லரசுகளான சீனாவினதும் இந்தியாவினதும் காய் நகர்த்தல்கள் ஊன்றிக் கவனிக்கப்படுவது அவசியமாகின்றது.


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவி ஏற்கும் வரைக்குமான இலங்கை-இந்தியா உறவு ஓரளவு பலமானதாகக் காணப்பட்டது என்பதே யதார்த்தமாகும். இருந்த போதிலும் இவ்வரசாங்கம் ஆட்சிப் பீடமேறியது முதல் இன்று வரைக்குமான காலப்பகுதியில் இலங்கை-சீன உறவு வரலாற்றில் என்றுமில்லாதவாறு வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. 1952ஆம் ஆண்டு இறப்பர்-அரிசி ஒப்பந்தம் மூலம் ஆரம்பமாகிய இலங்கை-சீன வர்த்தகம் இன்று 3.17 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. இலங்கையின் உட்கட்டுமானம் முதற்கொண்டு செய்மதி, தொழிநுட்பம் வரைக்கும் சீனாவின் ஆதிக்கம் வியாபித்துள்ளது.

இவ்வாறு இலங்கையைத் தனது முத்து மாலைத் திட்டத்தின் முதன்மை நாடாக மாற்றிவிட்ட சீனா, இலங்கையைக் கொண்டே தனது பிராந்திய எதிரியான இந்தியாவைத்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் விழா காணும் யாழ். ஒஸ்மானியா கல்லூரி




ஆரம்ப காலத்திலிருந்தே யாழூர் மக்கள் கல்வியில் மேலோங்கிக் காணப்பட்டார்கள். எட்டாம் வகுப்பு வரை கல்வி புகட்டும் பணியில் யாழ். மஸ்றஉத்தீன் பாடசாலை (புதுப்பள்ளி), முஹம்மதியா கலவன் பாடசாலை (அல்லா பிச்சை மாமா பள்ளி), வண். மேற்கு முஸ்லிம் கலவன் பாடசாலை (மன்பஉல் உலூம் மத்ரஸா) ஆகியன நற்சேவை புரிந்தன. இப்படியான கனிஷ்ட பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர்வதற்காக யாழ் வைத்தீஸ்வரா, யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்குச் சென்றனர். எனினும், அக்காலத்தில் வசதி குறைந்தவர்களால் உயர் படிப்பைத் தொடர முடியவில்லை.

இக்கால கட்டத்தில் சிறந்த கல்விமானும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபருமாகிய அல்ஹாஜ் டாக்டர் ரீ.பீ ஜாயா அவர்களின் தலைமையிலான குழு 1938ஆம் ஆண்டிலும் 1942ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் மேற்படிப்பைத் தொடர்வதற்கான ஒரு பாடசாலையை உருவாக்க வேண்டும் என்பதை இக்குழுவினர் மக்கள் மத்தியில் வலியுறுத்தினர். யாழ்ப்பாணத்திலும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் கிளையொன்று நிறுவப்பட வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தினர்.

1959ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி ரீ.பீ. ஜாயா அவர்களால் இப்பாடசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது. இதன் பின்,


அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக்

ராப்ஸ் வீதி என்று நாமம் பூண்டிருந்த குறித்த பாடசாலை வீதி, மாநகராட்சி மன்றத்தினரால் முஸ்லிம் கல்லூரி வீதி என்ற புதிய பெயரைப் பெற்றது.

ஒஸ்மானியாக் கல்லூரிக்கு ஆரம்பத்தில் ஸாஹிராக் கல்லூரி என்ற பெயரே இருந்து வந்தது. 1962ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 6ஆம் வகுப்பிற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர்கள் விஜயம் செய்வதை தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை நிலவிய அக்காலத்தில் கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் யாழ்ப்பாணம் ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, 1963 ஜனவரி 5ஆம் திகதி கல்லூரியை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார். அவருடன் அன்று வர்த்தக அமைச்சராக பதவி வகித்த திரு. இலங்கரத்ன அவர்களும் கலந்து கொண்டார்.

ஸாஹிராக் கல்லூரி என்ற பெயரில் இயங்கிய இப் பாடசாலையை டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இஸ்லாத்தின் மூன்றாம் கலீபாவாகிய உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை நினைவுபடுத்தி, பின்னர் ஒஸ்மானியாக் கல்லூரி என்ற நாமத்தை சூட்டினார்.

ஒஸ்மானியாக் கல்லூரி (ஸாஹிராக் கல்லூரி) ஆரம்பிக்கப்பட்டதும் ஜனாப் சீ.எம்.ஏ. ஜிப்ரி அவர்கள் அதிபராக பதவி வகித்தார். இவருடன் ஏழு ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். பிறகு ஒஸ்மானியாக் கல்லூரி படிப்படியாக வளர்ந்தது. கல்லூரியின் விஸ்தரிப்பிற்காக அதன் சுற்று வட்டாரத்திலுள்ள காணிகளும் தென்னந் தோப்புகளும் பயன்படுத்தப்பட்டன.

ஜனாப் எம்.எம். யூஸுப் அவர்கள் 01.02.1964இல் புதிய அதிபராக நியமனம் பெற்றார். இவரது நிருவாகக் காலத்தில் பல முக்கிய விடயங்கள் இடம்பெற்றன.

குறிப்பாக, பச்சையும் வெள்ளையும் கலந்த கல்லூரிக் கொடியின் அறிமுகமும் ஓ.எஸ்.எம்.ஏ. கபூர் ஆசிரியரின் உதவியால் கல்லூரியின் இலச்சினையும் வரைவாக்கம் செய்யப்பட்டதுடன் எதிர்கால விளையாட்டு வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இக்பால், ஷாபி, அலி, கஸ்ஸாலி ஆகிய இல்லங்களும் உருவாக்கப்பட்டன. பின், 01.02.1967இல் ஜனாப் எம். எம். அப்துல் குத்தூஸ் அவர்கள் அதிபராக பதவி வகித்தார்.

டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இக்கல்லூரிக்கு ஆற்றிய சேவைகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக இக்கல்லூரியின் மண்டபத்திற்கு 'அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் மண்டபம்' என்று நாமம் சூட்டப்பட்டு, 1972ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி அமைச்சர் அவர்களின் கைகளாலேயே இம்மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.

30.06.1974இல் ஜனாப் ஏ.எச். ஹாமீம் அவர்கள் அதிபர் பதவியை ஏற்றார். இவர் கல்லூரியில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதில் அரும்பாடுபட்டவர். இவரது காலத்தில் உதைப் பந்தாட்டக் குழு தேர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. கல்லூரியின் முற்றமும் வளாகமும் சீரமைக்கப்பட்டது. பசுமையான மரங்களும் மலர்ச் செடிகளும் பயன் தரு பயிர்களும் நடப்பட்டு இயற்கையான, குளிர்ச்சியான சூழலை உருவாக்கிய பெருமை ஹாமீம் அதிபருக்கே உரித்தாகும்.

03.04.1980இல் ஜனாப் எம்.ஏ.ஆர்.ஏ. றஹீம் அதிபர் பதவியேற்று பல அபிவிருத்திகளை முன்னெடுத்தார். பின், 30.06.1982 இல் மீண்டும் ஜனாப் ஏ.எச். ஹாமீம் அதிபர் அவர்கள் நியமனம் பெற்று கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தார்.



1990 முதல் 2003ஆம் ஆண்டு வரை நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக ஒஸ்மானியாக் கல்லூரி தூர்ந்த நிலையில் காணப்பட்டது.

ஏ 9 பாதை திறந்து நாட்டில் சமாதானச் சூழல் நிலவிய சந்தர்ப்பத்தில் சோர்ந்து கிடந்த ஒஸ்மானியாக் கல்லூரி உயிர்ப்பிக்கப்பட்டது. இதற்கு முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், யாழ் முஸ்லிம் நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அரும்பாடுபட்டனர்.


டாக்டர் ரீ.பீ. ஜாயா

*யாழ்ப்பாணத்திற்கு அமைச்சர்கள் விஜயம் செய்வதை தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலை நிலவிய அக்காலத்தில் கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் யாழ்ப்பாணம் ஸாஹிராக் கல்லூரியை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, 1963 ஜனவரி 5ஆம் திகதி கல்லூரியை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.*

22.09.2003ஆம் ஆண்டில் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் மௌலவி அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். மனித சஞ்சாரமற்ற அடர்ந்த பற்றைகளும் பாழடைந்த, இடிந்த கட்டிடங்களுக்கிடையே விஷஜந்துக்கள் நிறைந்த சூழலில்தான் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் மௌலவி ஒஸ்மானியாக் கல்லூரியைப் பொறுப்பேற்றார். மீள் எழுச்சி பெற்ற கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட இவரை, இச் சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. அன்றிலிருந்து இன்று வரை இவரது நற்சேவைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

இந்த ஆண்டு ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன் விழா ஆண்டாகும். பொன் விழாவை வெகு விமர்சையாகக் கொண்டாட அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாரக் மௌலவி மற்றும் நிருவாகம் முயற்சி செய்கின்றது. இதற்கு முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஆலோசனைகளை வழங்கி பொன் விழாவைச் சிறப்பிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.


டாக்டர் பதியுத்தீன் மஹ்மூத்

பொன் விழா காணும் ஒஸ்மானியாக் கல்லூரி மென்மேலும் வளர்ந்து முஸ்லிம் சமுதாயத்தில் தலை சிறந்த கல்லூரியாகத் திகழ்ந்து வைரவிழா, நூற்றாண்டு விழா போன்ற பல விழாக்களைக் கொண்டாட வேண்டும் என்றும் மனதார வாழ்த்துகிறோம்.

**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்**
முன்னாள் உயர்தர மாணவர் மன்றத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





-மலைஞானி

# 13ம் திருத்தச் சட்டம்

# இ.தொ.கா. வின் நிலைப்பாடு என்ன?



**13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் எழுந்த வாதப் பிரதிவாதங்களில் இ.தொ.கா. கலந்து கொள்ளவில்லை. பிரச்சினைகள் ஏற்படும் போது இந்தியாவில் தஞ்சமடைந்து விட்டு, பின் மெதுவாகக் கொழும்புக்கு வருவது ஒன்றும் புதிய 'ராஜ தந்திரமல்ல' இவர்களுக்கு. 83 கலவரத்தின் போது, முதல் தடவையாக சந்திரிகா அம்மையார் அரசுக்கு முட்டுக் கொடுக்க முற்பட்ட போதும் இந்த இந்தியாவில் தலைமறைவாகும் இராஜ தந்திரத்தைத்தான் இ.தொ.கா. பின்பற்றியது. இப்போதும் இதைத்தான் பின்பற்றியிருக்கிறது.**



இன்று இலங்கையில் பேசப்படும் விஷயங்கள் இரண்டு. முதலாவது, 13வது திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச்செய்யும் கைங்கரியம். இரண்டாவது, முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனத் துவேஷ பிரசாரம். 13ஆம் திருத்த சட்டத்தை வலுவிழக்கச் செய்வதென்பது இனத் துவேஷத்தின் சிங்கள மேலாதிக்கத்தின் ஓர் அப்பட்டமான வடிவமே தவிர வேறில்லை.

கடந்த இரண்டு மாதங்களாக இது பற்றிய விவாதங்கள் நாடெங்கும் நடைபெற்று வருகின்றன. இதற்கான விதைகள் இதற்கு முன்னரேயே அரசியல் களத்தில் கருவாகி விட்டன.

13ஆம் திருத்தச் சட்டம் வழங்கிய அதிகாரங்களை அப்போது விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டனர். இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏற்கவில்லை. இந்நிலையில், ஜனாதிபதியும் மேற்கத்திய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் 13+ என்று ஒரு வாக்குறுதியைத் தந்தார். ஜனாதிபதியின் வாக்குறுதி, 'ஆற்றைக் கடக்கும் வரை அண்ணன் தம்பி கடந்த பின்னர் நீ யாரோ நான் யாரோ' என்பது போலத்தான் என்பதை அரசின் இயல்பு தெரிந்தவர்கள் அறிந்தே வைத்திருந்தனர்.

25 ஆண்டு காலமாக 13ஆம் அரசியல் சட்டத் திருத்தமும் அதன் கீழான மாகாண சபைகள் சட்டமும் அப்படியே இருந்து வந்துள்ள போதிலும், வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்று வந்ததும் சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது திருத்த வேண்டும் என்று புறப்பட்டிருக்கிறது அரசாங்கம். அதன் உண்மை முகம் தெரிந்த விஷயம்தான். என்றாலும் கூட, இப்போது பட்டவர்த்தனமாகி இருக்கிறது. வடக்குக்கு பொலிஸ், காணி அதிகாரங்களைக் கையளித்தால் நான் கிராமங்களுக்குப் போக முடியாது என்று ஜனாதிபதி இப்போது கவலை வெளியிட்டிருக்கிறார்.

டட்லி-செல்வா ஒப்பந்தம், பண்டா-செல்வா ஒப்பந்தம், சந்திரிகாவின் சமாதான திட்டம் என்றெல்லாம் பேசுகிறோம். அவற்றை செயல்பட அனுமதித்திருந்தால் நாட்டுக்கு என்னென்ன பலன்கள் கிட்டியிருக்கும் என்பதையும் எழுதித்தள்ளாத விமர்சனங்களே கிடையாது. அரச அறிவியல் பாடத்தில் இது முக்கியமான ஒரு பாடம். ஆனால், எல்லாம் தெரிந்தும் கூட, நடைமுறையில் அரசியல்வாதிகள் எல்லா அரசியல் ஞானத்தையும் காலில் போட்டு மிதித்து விட்டு அதே இன, மதவாதச் சிந்தனையுடன்தானே முக்கிய விடயங்களில் தீர்மானம் எடுக்கிறார்கள். அரசியலைத் தவிர ஏனைய அனைத்துத் துறைகளுக்கும் தகுதிகள் தேவை. நாட்டை நிர்வகிப்பதற்கு மட்டும் எந்தத் தகுதியும் தேவையில்லை. குறுகிய இனவாத, மதவாத சிந்தனைகளும் அவற்றில் வெகு ஜனங்களை வைத்திருக்கக் கூடிய பேச்சாற்றலும் இருந்தால் சர்வ அதிகாரங்களையும் கையில் வைத்திருக்கலாம் என்ற இந்த குருட்டாம் போக்கு அரசியல்தான் இன்று இலங்கையை மட்டுமல்ல, பல உலக நாடுகளிலும் ஆட்சி அதிகாரம் செய்து கொண்டிருக்கிறது என்பது எவ்வளவு வினோதமானது.

வடக்கு மாகாண சபைக்கு அதிகாரம் தந்தால் கிராமத்துக்குப் போக முடியாது என்று ஜனாதிபதி சொல்கிறார். நாட்டு மக்களின் ஒரு பிரிவினருக்கு அதிகாரம் (குறைந்த பட்சம்) அளித்தல் என்ற ஒரு முக்கிய விடயத்தை, தனது சொந்த புகழ் மற்றும் கட்சிக்குக் கிடைக்கும் வாக்குகளுடன் அவர் ஒப்பிடுவதை நாம் என்னவென்று சொல்வது? இலட்சக்கணக்கான உயிரிழப்புகளுடன் அவர் தன் சொந்த செல்வாக்கை ஒப்பிட்டுப் பார்க்கிறார்! ஜே.ஆர். அப்படி ஒப்பிட்டுப் பார்த்திருந்தால் மாகாண சபை என்ற ஓர் அதிகாரப் பகிர்வு நிகழ்ந்திருக்காதே! அதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதி, பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்களில் சிங்கள கிராமவாசிகள் ஐ.தே.க. வுக்கு வாக்களிக்கவே செய்தார்கள். ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் 'நாம் சிங்களவர்' பாணி பிரசாரங்கள் அச்சமயத்தில் மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

13ஆம் திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென மக்கள் கோரவில்லை. எதிர்க்கட்சிகளும் கோரிக்கை விடுக்கவில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிப்போரே இதை ஊதிப் பெரிதாக்கினார்கள் என்பதில் இருந்தே, பின்னணியில் இருந்து யார் செயல்பட்டிருக்கக் கூடும் என்பது வெளிப்படையானது.

ஆனால், இவ்வாறான ஓர் அரசுடன்தான் விரும்பியோ, விரும்பாமலோ சிறுபான்மையினக் கட்சிகள் சேர்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளன. சிறுபான்மையினர் தொடர்பான விடயங்களில் எதிர்மறையான நிலைப்பாடுகளை அரசாங்கம் எடுக்கின்ற சமயங்களிலும் அங்கம் வகிக்கும் சிறுபான்மையினக் கட்சித் தலைவர்கள் கண்டும் காணாத மாதிரி இருந்து விடுகின்றனர். கேட்டால், அரசியலை எடுத்தேன், கவிழ்ந்தேன் என்று செய்ய முடியாது; தொலை நோக்கு சிந்தனையுடன்தான் கையாள வேண்டும் என பண்டித விளக்கங்கள் தருவார்கள் நமது சிறுபான்மையினக் கட்சித் தலைவர்கள்.

எனினும், இத்தகைய கல்லுளி மங்கன் தலைமைகளையும் உலுக்கிப் போடச் செய்த ஒன்றுதான் 13ஆம் திருத்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சியாகும். இத்திருத்தச் சட்டத்தை ஒழித்துக் கட்டுவதற்கோ அல்லது திருத்துவதன் மூலம் வலுவிழக்கச் செய்வதற்கோ நாங்கள் துணை நிற்கப் போவதில்லை என்பதை முஸ்லிம் காங்கிரஸ் காட்டமாகவே அரசுக்குச் சொன்னது. இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை எடுத்தால் தம்மாலும் கிராமத்துக்கு போக முடியாமல் போகலாம் என்ற நிலையிலும் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார, ராஜித சேனாரத்ன போன்ற சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் 13ஆம் திருத்தச் சட்டத்தில் கை வைப்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளனர். அமைச்சரவைக் கூட்டத்தில் ரஊப் ஹக்கீம், ராஜித, வாசு ஆகியோர் தமது நிலைப்பாடுகளை ஆணித்தரமாக எடுத்துரைத்ததன் விளைவாகவே, 13ஆம் திருத்தச் சட்டத்தில் கை வைப்பதில்லை என்றும் இப்போதுள்ள நிலையிலேயே வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதென்றும் செய்யப்பட வேண்டிய மாற்றங்களை பாராளுமன்ற தெரிவுக் குழுவே முடிவு செய்யட்டும் என்றொரு நிலைப்பாட்டை அரசாங்கம் எடுக்க வேண்டியதாயிற்று.

சமீப காலமாக அரசு, தான் நினைத்ததையெல்லாம் செய்து வருகிறது. அதற்கான அதிகாரத்தை அது பாராளுமன்றத்தில் அங்கத்தவர் எண்ணிக்கை மூலம் கொண்டுள்ளது. இவ்வாறான பின்னணியிலும் மு.க. வும் சிங்கள அரசியல்வாதிகள் சிலரும் கடுமையான எதிர்ப்புக் குரல் கொடுத்து சிறுபான்மையினருக்கு ஊறு விளைவிக்கக் கூடிய ஒரு பிரேரணையைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். இதன் பிரதிபலனாக, அரசாங்கம் தன் சார்பாக தெரிவுக்குழுவுக்கு நியமித்த உறுப்பினர் 19 பேர்களில் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒருவர் கூட இல்லை. ராஜித, திஸ்ஸ, வாசு போன்ற சந்தேக நபர்கள் எவரையும் நியமிக்கவில்லை. தமக்கு சார்பாகவும் தலையாட்டக் கூடியவர்களையும்தான் நியமித்திருக்கிறது.

இந்தப் பட்டியலின் கீழ் வருவதுதான் இ.தொ.கா. 13ஆம் திருத்த சட்டம் பற்றி ஆளாளுக்கு கருத்து சொல்லிக் கொண்டிருக்கும் போது இத்திருத்தச் சட்டத்துக்கும் தமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல வாயடைத்துக் கிடந்தது. இ.தொ.கா. தனியாளான பிரபா கணேஷனே, திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்யும் பிரேரணைக்கு ஆதரவு தரப் போவதில்லை என்று பகிரங்கமாகச் சொன்னார்; அவரால் சொல்ல முடிந்தது.

ம.ம. முன்னணியின் அரசியல் பொறுப்பாளரான வே. ராதாகிருஷ்ணனும் 13ஆம் திருத்த சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்படுவதை எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார். இதுதான் ம.ம. முவின் கொள்கையும் கூட என்றிருக்கிறார். பலவீனமான நிலையில் அக்கட்சி இருக்கின்ற போதிலும் அது பற்றிக் கவலை கொள்ளவில்லை அந்தக் கட்சி. மறைந்த சந்திரசேகரன் இருந்திருந்தாலும் இப்படித்தான் போர்க்கொடி உயர்த்தியிருப்பார்.

ஆனால், இ.தொ.கா. இன்று வரை எந்தக் கருத்தையும் சொல்லவில்லை.

ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்ட பின்னர் அரசுக்கும் புலிகளுக்கும் இடையே அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. தென் பகுதி அரசியல் கட்சித் தலைவர்கள் அல்லது பிரதிநிதிகள் புலிகளைச் சந்தித்தனர். ஆனால், இ.தொ.கா. புலிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பேச்சுவார்த்தைகளில் ஒரு தரப்பாகக் கலந்து கொள்ளவுமில்லை. இப்படி எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தாமல், அரசாங்கமாயிற்று புலிகளாயிற்று, என்னமும் செய்து கொள்ளட்டும் என்று ஒதுங்கி இருந்து விட்டது.

இன்றைக்கு 13ஆம் திருத்தம் தொடர்பிலும் அதே மௌனம்தான். தெரிவுக்குழுவில் ஹக்கீம் இல்லை. ஹக்கீமும் திஸ்ஸ விதாரணயும் இல்லாத தெரிவுக்குழுவில் நாமும் அங்கம் வகிக்க மாட்டோம் என்கிறது தமிழ் தேசிய கூட்டமைப்பு. ஆனால், தெரிவுக்குழுவில் இ.தொ.கா. பங்கு கேற்கிறது. பிரதிநிதியாக முத்து சிவலிங்கம் உட்கார்ந்திருக்கிறார். இ.தொ.கா. வின் நிலைப்பாடு, 13ஆம் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் எவ்வாறானது என்பது பற்றி வாயே திறவாமல், தெரிவுக்குழுவில் உட்கார்ந்திருக்கிறார்.

இ.தொ.கா. என்பது மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் அரசியல் கட்சியா அல்லது தனக்கு தேவையான போது தேவையான உருவங்களை பிசைந்து உருவாக்கும் அரசாங்கத்தின் களிமண் உருண்டையா? என்று மக்கள் எழுப்பும் கேள்வி நியாயமானதே. (18ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் சின்ன முஹையதீன் ஜ'அமுஆ பள்ளிவாசலுடன் இணைந்த மன்பல் உலூம் மத்ரஸா, 23 வருடங்களின் பின்னர் நாவாந்துறை சூரியவெளி ஹஜபா ரெஜிமண்ட் இராணுவத்தின் உதவியுடன் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. இராணுவத்தினர் சிரமாதனத்தில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: பாரூக் சிகான்




பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளுக்கான அலுவலக உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் மட்டக்களப்பு டேபர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவருக்கு அலுவலக உபகரணங்கள் வழங்குவதையும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன் ஆகியோரையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: பழூல்லாஹ் பர்ஹான்



தேசத்துக்கு மகுடம் கண்காட்சி ஊடாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்முனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் இளைஞர் சேவை அதிகாரி ஏ. முபாறக் அலி இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதையும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான ஏ.எச். உமர்லெப்பை, லங்கா சகரிஹா தமயந்தி ஆகியோரையும் நிகழ்வில் கலந்து கொண்ட இளைஞர்களையும் படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: மருதமுனை றாசீக் நபாயிஸ்



கெகுணகொல்ல இர்பானிய்யா அரபு இஸ்லாமிய கலாபீடத்தின் 8ஆவது பகுதிக்கு புதிய மாணவர்களை உட்பிரவேசிக்கும் நிகழ்வு அண்மையில் கலாபீடத்தில் இடம்பெற்றது. இதில் கலாபீடத்தின் அதிபர் அஷ்ஷெய்க் ரீ.எம். இஹ்ஸான் மரிக்கார் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட பெற்றோரில் சிலரையும் படங்களில் காணலாம்.

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-05

—— பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com



சாப்பிட்டு ஓய்வெடுக்கும் போதுதான் 'அந்த சேர்' வந்தார்.

கலாநிதி அப்வர்தீன் மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஜாமிஆ நளீமிய்யாவில் பயின்ற அவர் புலமைப் பரிசில் பெற்று எகிப்து அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்து அங்கேயே கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். பின்னர் மாலைதீவு, மலேசியா உள்ளிட்ட நாடுகளிலுள்ள கலா நிலையங்களில் கடமையாற்றிய அவர் கடந்த 10 வருடங்களுக்கு மேல் புரூணை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

குடும்பத்துடன் புரூணையில் வசிக்கும் அவரது மனைவியின் சகோதரியின் மகன் தான் நண்பன் ஸியான். இஸ்மத் அலி கற்கும் அதே பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய நிதியியல் துறையில் உயர் கல்வியைத் தொடர்கிறார். கலாநிதி அப்வர்தீன் அவர்களுடைய குடும்பத்தாருடன் இஸ்மத் அலிக்குள்ள சினேகபூர்வமான உறவின் காரணமாக புரூணை வரும் என்னையும் அவர்களது வீட்டிலேயே தங்க வைக்குமாறு கோரப்பட்டிருந்தது.

எனக்கும் இஸ்மத் அலிக்குமாக வீட்டின் கீழ் தளத்தில் அறை, குளியலறை, தொழுகையறை கலந்துரையாடலுக்கான அறை என அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தமையைப் பார்த்துப் பூரித்துப் போனேன்.

இலங்கை மண்ணின் மைந்தன், ஒரு பத்திரிகையாளன் என்பதற்கெல்லாம் மேலாக இஸ்மத் அலியின் நண்பன் என்ற பல தகமைகள் ஒருபுறமிருக்க, கலாநிதி அப்வர்தீன் அவர்களதும் குடும்பத்தினரதும் விருந்தாளிகளைக் கவனிப்பதில் காட்டும் தனித் தன்மையும் எனக்கு ராஜ மரியாதை வழங்கியது.

பிரயாண களைப்பில் முதல் நாள் கழிந்தது. அன்று இரவு தூங்கும்போது அறையின் குளிரூட்டியை 'ஒண்' செய்த ஸியான் பெரும்பாலும் இரவில் வெக்கையாக இருக்கும் என்றார். புரூணையில் சாதாரணமாக எல்லா வீடுகளிலும் எல்லா அறைகளிலும் குளிரூட்டிகள் பொருத்தப்பட்டிருக்கும்.

சாதாரணமாக நம் நாட்டு வெப்பநிலையே அங்கும் பதிவாவதால் ஸியான் பயமுறுத்தியது போல் வியர்வை என்னை எழுப்பி உட்கார வைக்கவில்லை. தங்கிய எந்த ஒரு நேரத்திலும் குளிரூட்டியை 'ஒண்' செய்யவுமில்லை.

சொல்ல மறந்தே விட்டேன்; அன்றிரவு சாப்பிட்டு முடிந்த பின்னர் கடைக்குச் சென்று வர புறப்பட்டோம். ஏற்றிக் கொண்டு கார் பறந்தது. இதை சொல்லி முடித்த நேரத்துக்குள் கார் அந்த சுபர் மார்கட்டை அடைந்து விட்டது.

அலாதியாக பொடி நடையாகச் சென்று பொருட்கள் வாங்கி வரும் தூரத்திலேயே அந்தக் கடை இருந்த போதும் காரில் வந்தது பற்றி விசாரித்தேன்.

"இங்கு எவரும் நடந்து செல்ல மாட்டார்கள். வேண்டுமென்றால் நாளை பகல் வேளையில் வீதியைப் பாருங்கள்" என்றார் ஸியான். உண்மையில் அந்தப் புதினம் பற்றி பிறகு சொல்கிறேன்.

கடையருகில் இறங்கிப் பொருட்கள் வாங்கியதும் வீட்டிலிருந்து 'பேக்' எடுத்து வராதது குறித்து கைசேதப்பட்டார் ஸியான்.

"ஏன் சொபின் பேக்கில் போட்டுத் தர மாட்டார்களா?" என்று கேட்டேன்.

"இன்று சனிக்கிழமை தெரியாதா? ஓஹ்...! நீங்க புது ஆள் இல்லையா?" என்று விழித்த ஸியான் விளக்கம் சொன்னார்.

புரூணையில் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சனி, ஞாயிறு தினங்களில் எந்தவொரு கடையிலும் பொருட்களை எடுத்துச் செல்ல சொபின் பேக் வழங்க மாட்டார்கள். சில வருடங்களுக்கு முன்னர் அமுலுக்கு வந்த இச்சட்டம் மிக கண்டிப்பாக அங்கு பின்பற்றப்படுகிறது. ஆரம்பத்தில் பொருட்கள் வாங்கினால் இலவசமாக வழங்கும் பொலித்தீன் பைகளை நிறுத்தி, பணம் கொடுத்து வாங்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. பின்னர் அதுவும் தடை செய்யப்பட்டது.

"எவ்வளவு பெரிய திட்டம் இல்லையா?" எங்களுக்குள் சொல்லிக் கொண்டோம்.



டாக்டர் அப்வர்தீன் சேர் மற்றும் நண்பர்களான இஸ்மத் அலி, ஸியான் ஆகியோருடன் நான்

"அதுசரி, நம்ம நாட்டுலயும் பொலித்தீன் பாவனைக்கு தடை கொண்டு வந்தார்கள்தான். இன்று அந்த சட்டத்தை நாம் நடைமுறைப் படுத்தும் சீத்துமம் தெரியும்தானே" என்றேன்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் புரூணை எப்படி நாடு என்பதை நான் சொல்ல, நீங்கள் கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

ஒக்டோபர் இரண்டாம் தேதியின் காலைச் சூரியன் புரூணை மண்ணில் எப்படி உதிக்கப் போகிறது என்பதைக் காண ஆவலாய் இருந்தேன்.

அமைதி தாலாட்டியது. அரைமணி நேரத்தில் கண்ணயர்ந்திருந்தேன்.

அப்போதுதான் காதைக் கிழிக்கும் அந்த சத்தம் கேட்டது!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைக் கருவூட்டலால் நோயுற்றுப் பிறக்கும் குழந்தைகள்



ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk / aalifali@gmail.com

ஆண்-பெண் மலட்டுத் தன்மை என்பது சந்ததியைப் பெருக்க முடியாத உடல் சார்ந்த உயிரியல் குறைபாடாகும். மாறிவரும் சுற்றுச் சூழல் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை முறைத் தேர்வுகளால் உலகளவில் பெண்களை விடவும் ஆண் மலட்டுத்தன்மை அபாயகரமான அளவில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வீரியமுள்ள விந்தணுக்களின் எண்ணிக்கை குறைதல் அல்லது அவற்றின் ஊர்தலில் (Motility) வேகம் குறைதல் போன்றவை மருத்துவ ரீதியாக ஆண் மலட்டுத் தன்மை ஏற்படக் காரணமாயுள்ளன.

குடிப்பழக்கம், புகை பிடித்தல், கஞ்சா போன்ற போதைப் பொருட்களை உபயோகித்தல், சத்துக் குறைவான உணவு, விட்டமின் சீ குறைபாடு, தொடர்ச்சியான மன அழுத்தம், அளவுக்கதிகமான உடற்பயிற்சி போன்ற தனிப்பட்ட வாழ்க்கை முறைகளும் ஆண்களில் மலட்டுத் தன்மையை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. பூச்சிக் கொல்லிகள் போன்ற பல வேதி நச்சுக்கள், காரீயம், பெயிண்ட் போன்ற சில வகை வண்ணப் பூச்சுகள், கதிர்வீச்சு, உலோகங்கள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் எனப் பல காரணிகள் மூலம் நமது ஆரோக்கியமான வாழ்க்கையில் மலட்டுத் தன்மை உட்பட பல நேரடி மற்றும் மறைமுக எதிர் விளைவுகளை உண்டாக்குகின்றன.

ஆண்-பெண் மலட்டுத் தன்மையால் குழந்தைப்பேறு இல்லாமல் போகும் நிலை வெறும் தனிப்பட்ட பிரச்சினை அல்ல, உலகம் முழுதும் இது ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினையாக இன்று நோக்கப்படுகின்றது. நமது அண்டை நாடான இந்தியாவில் ஆண்-பெண் மலட்டுத்தன்மை அச்சுறுத்தும் வேகத்தில் வளர்ந்து வருவதாக மும்பையில் இயங்கி வரும் பன்னாட்டு மக்கள் தொகை ஆய்வியல் நிறுவனம் (international institute of population sciences/iips) 2010 இல் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. 1981ஆம் ஆண்டுக்குப் பின் ஒவ்வொரு பத்தாண்டு இடை வெளியிலும் முறையே 1991, 2001 இல் எடுக்கப்பட்ட கணக்கீடுகள் 50 சதவிகிதத் திற்கும் மேல் மலட்டுத்தன்மை பெருகியுள்ளதாக அந்நிறுவனத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. விந்தணுக்களின் எண்ணிக்கை, தரம், உற்பத்தி ஆகியவற்றில் தீவிரமான பாதிப்புகள் இருப்பதாகவும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பாரம்பரியமாக குழந்தைகளைத் தத்தெடுக்கும் முறை பின்பற்றப்பட்டு வந்தது. என்றாலும், இதில் கருவில் சுமந்து, பிரசவித்து தாய்மைப் பேற்றை அடையும் திருப்தி காணப்படவில்லை. நவீன மருத்துவ வளர்ச்சியின் காரணமாக இந்தக் குறைக்குத் தீர்வாக செயற்கைக் கருவூட்டல் முறைகள் அறிமுகமாகின. செயற்கைக் கருவூட்டல் முறைகள் பல்வேறு விதங்களில் நடைபெறுகின்றன.

உடலுறவின் போது ஆணின் விந்து 48-56 மணி நேரங்களில் பெண்ணின் சினை முட்டையைச் சென்றடையவில்லை என்றால் விந்தணு இறந்து விடும். எனவே நிமிடத்திற்கு 10 அங்குல தூரம் விந்தணு நீந்த வேண்டும். குறைவாக நீந்துவதால் குறித்த நேரத்தில் சினை முட்டையை அடைய முடியாது விந்து இறந்து பிள்ளைப்பேறு அற்றுப் போகிறது. அப்படியான சந்தர்ப்பங்களில் கணவனினதும் மனைவியினதும் விந்தையும் முட்டையையும் வெளியே எடுத்து அவற்றை ஆய்வு கூடத்தில் குழாய் முறைப்படி கருக்கட்ட வைத்து பின்னர் தாயின் கருவறையில் செலுத்தி வளரச் செய்வர். இதுவே Testube முறை எனப்படுகின்றது. இஸ்லாத்தில் இம்முறையே அங்கீகரிக்கப்பட்ட முறையாகக் கொள்ளப்படுகின்றது.

மற்றுமொரு முறையாக குழந்தைப் பேற்றிற்கு ஆணிடம் விந்து வளம் இல்லாதிருந்தால் வேறு ஓர் ஆணின் விந்தை மாத்திரம் பெற்று அதனை குறித்த பெண்ணின் யோனி வழியாக உட்செலுத்தி கருத்தரிக்க வைப்பர். இதற்காக விந்து தானம் செய்வோர் விந்தினை கோடி ரூபாய்களுக்கு விற்பனை செய்வோர் உலகில் உள்ளனர். உலகப் பிரசித்தி பெற்ற விளையாட்டு வீரர்கள், சினிமா நடிகர்கள், உலக முக்கியஸ்தர்கள், பிரபலங்கள் என பலரும் தமது விந்தை கோடி விலைக்கு விற்கின்றனர். இதுபோல மதம், இனம், கல்வித் தகுதி, விளையாட்டு, கலைகளில் தேர்ச்சி, வீரம், அழகு போன்றவற்றை அடிப்படையாக வைத்து விந்தணுக்களை விற்கும்-வாங்கும் வழக்கம் உலக நாடுகளில் உண்டு.

விந்தணு தானம் செய்தல் அல்லது விற்றல் போன்றே பெண்களும் தமது கருமுட்டையை தானம் செய்ய ஆரம்பித்துள்ளனர். பெண்ணிடம் சினை முட்டை உற்பத்திக் குறைவு காணப்படின் வங்கிகளில் உள்ள முட்டையை விலைக்கு வாங்கி அதன் மூலம் குழந்தை உருவாக்கம் செய்கின்றனர். இன்னும் ஒருபடி மேல் சென்று குழந்தை மீது ஆசையுள்ள பெண்கள், தம் வயிற்றில் சிசுவைச் சுமப்பதால் தமது அழகு மங்கிப் போகும் என்று நினைப்பவர்கள் தனதும் கணவனினதும் செயற்கையாகக் கருக்கட்ட வைத்த கருவை வேறு ஒரு பெண்ணின் கருவில் சுமக்க வைத்து அது பிறந்ததும் தாம் அதனை வளர்த்தெடுப்பர்.

உண்மையில் விந்தணு, சினை முட்டை தானம் அல்லது விற்பனை மூலம் குழந்தைப் பேறு அடைவது ஆகியவற்றை இஸ்லாம் ஹறாமாக்கியுள்ளது. ஆனால், அதையும் மீறி இன்று வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் இம்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முறைகளால் பிறக்கும் குழந்தைகள் இன்று பல்வேறு மரபணுப் பாதிப்புகளுக்குட்பட்டு நோயுற்றும் வாய்ப்பட்டு பிறக்கும் நிலை கண்டறியப்பட்டுள்ளது.

விந்தணு, சினை முட்டையைப் பெற்று சேமிக்கும் முன்பு உரிமையாளரின் உடலாரோக்கியம் பரிசோதிக்கப்பட வேண்டும். தொற்று நோய்கள், மரபணுக் கோளாறுகள் போன்றவை முக்கியமாகப் பரீட்சிக்கப்பட வேண்டும். ஆனால், வெறும் தொழில் நோக்கிற்காக நடத்தப்படும் இந்த செயற்கைக் கருவூட்டல் முறைகளிலும் விந்தணு வங்கிகளிலும் இந்தப் பரிசோதனைகள் முழுமையாக உரிய கவனத்துடன் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது கேள்விக்குறி. ஏனெனில், இதுவரை இவ்விடயத்தில் பெரிதாக கவனத்தில் கொள்ளப்படாத ஒரு நடைமுறைப் பிரச்சினை 2012 அளவில் மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க கள ஆய்விவு ஒன்றின் மூலம் வெளிவந்துள்ளது. அதைப் பற்றி The New York Times நாளேடு ஒரு கட்டுரையை வெளியிட்டு இப்பிரச்சினையின் பாரதூரத்தை வெளிக்கொணர்ந்தது.

குழந்தைப் பேற்றை விரும்பிய ஓர் அமெரிக்கத் தம்பதியினர் செயற்கை விந்தூட்டலின் மூலம் (Artificial Insemination) ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தனர். பிறந்த குழந்தையின் குடல் அசைவில் ஏற்பட்ட பிரச்சினைக்காக அறுவை சிகிச்சை செய்ய வேண்டி ஏற்பட்ட போது, சந்தேகம் கொண்ட மருத்துவர்கள் மரபணுப் பரிசோதனை செய்து பார்த்ததில் குழந்தைக்கு சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் (Cystic Fibrosis) என்னும் மரபணுக் குறைபாடு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இது நுரையீரல், கல்லீரல், கணையம், குடல் என்பவற்றில் அளவுக்கு மீறி அடர்த்தியாக வளரும் இழை நார்கள் (fiber) மற்றும் கோழை (mucous layer) என்பவற்றால் உருவாகும் ஒரு வகை நோய். இது உருவாக அடிப்படைக் காரணம் விந்தணுவைப் பெற்றவரிடம் இருந்த பரம்பரை நோயே என தெரிய வந்தது. இதனால் மூச்சு விடுவதில் சிரமம், உணவு செரித்தலில் குறைபாடு, ஆண் மலட்டுத் தன்மை, நீரிழிவு, சில சமயம் உயிருக்கே ஆபத்து ஏற்படல் எனப் பல உடல் நலக் குறைபாடுகளை இது ஏற்படுத்துகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே போன்ற மரபணு ரீதியிலான பிரச்சினைகளின் எல்லா சாத்தியக்கூறும் கருமுட்டையை தானம் செய்யும் பெண்களிலும் உண்டு. ஆனால், விந்தணு தானத்தில் தான் மரபணுக் குறைபாடுகள் கடத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. காரணம், ஒரு முறையில் வெளியாகும் 4மி.லீ அளவு விந்தில் சுமார் 500 மில்லியன் விந்தணுக்கள் காணப்படுகின்றன. இவற்றை தானம் செய்வதன் மூலம் எத்தனை நூறு குழந்தைகளையும் உருவாக்க முடியும். 500 மில்லியனிலும் ஒன்று மட்டுமே சினை முட்டையுடன் சேரும். எது சேர வேண்டும் என்பதை இறைவனே தீர்மானிக்கிறான். அது ஆரோக்கியமான விந்தாக இருக்கும். செயற்கையாக விந்தூட்டல் மேற்கொள்ளும் போது 500 மில்லியனிலும் எது ஆரோக்கியமானது என்பதை எவ்வாறு மனிதனால் தேர்வு செய்ய முடியும்? எனவே, ஆரோக்கியமற்ற விந்துகள் மூலம் நோயுள்ள சந்ததிகள் பிறக்க வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

பெண்கள் தமது கருமுட்டை தானம் செய்வதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் உடலுக்கு வெளியில் ஆய்வகத்தில் விந்தணுக்களுடன் கருவடையச் செய்வதற்காகவும் (invitro fertilization, artificial insemination) பெண்களின் முட்டையை அதிகளவில் உற்பத்தி செய்து மாதவிடாயின் போது பிரித்தெடுப்பதற்காகவும் ஒருவகை ஹோர்மோன் ஊசி மூலம் ஏற்றப்படுகின்றது. இதனால் ஈஸ்ட்ரோஜன் எனப்படும் ஹோர்மோனின் அளவு சாதாரன அளவை விட பதின்மூன்று மடங்கு அதிகமாகிறது. இள வயதில் இத்தகைய ஹோர்மோன் ஊசி கொடுக்கப்படும் பெண்களுக்கு அடுத்து 16 வருடங்களில் மார்பகப் புற்றுநோய் வர அதிக வாய்ப்பிருப்பதாக ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

எனவே, தடுக்கப்பட்ட வழிமுறை மூலம் உருவாக்கிக் கொள்ளும் கருக்கள் அடுத்த பரம்பரையையே பாதிக்கும் மரபணு ரீதியான நோய்களைச் சுமந்து கொண்டு பிறக்கின்றன. இதனால் எதிர்காலத்தில் எத்தகைய சந்ததிகள் உருவாகுவார்கள் என்பது அச்சத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

## சமூக ஊடக செயலமர்வின் அதிர்வலைகள்...

ஜே.எம்.எப் ஊடக நிறுவனத்தினரால் தொடராக நடத்தப்பட்டுவருகின்ற ஒரு நாள் சமூக ஊடக செயலமர்வு கொழும்பு, புத்தளம், மாவனல்லை ஆகிய இடங்களில் ஆண்களுக்கு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 4வது செயலமர்வு பெண்களுக்கான விஷேட செயலமர்வாக, புத்தளம், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியில் கடந்த ஜூன் 24 அன்று நடைபெற்றது. இதில் கல்லூரியின் விடுகை வருட மாணவிகள் 28 பேர் பங்குபற்றினர்.

டாக்டர் ஏ.எம். அலி சஜா மற்றும் அஷ்ஷெய்க் ஜே.எம். அஸீம் (நளீமி) ஆகியோர் வளவாளர்களாகப் பங்குபற்றிய இச் செயலமர்வில், கலந்துகொண்டோரின் பின்னூட்டல்கள்:

01. "சமூக ஊடகங்களின் நலன்கள் மற்றும் பிரதிகூலங்களை மிகத் துல்லியமாக எடுத்துரைத்தனர். எமக்குத் தெரியாத பகுதிகளை விளக்கியமையும் விளக்கமளித்த முறையும் மிகவும் பிரயோசனமாக இருந்தது. நேரம் போதாமையால் விரிவான விளக்கத்தைப் பெற முடியாவிடினும், சமூக ஊடகம் பற்றிய அடிப்படையான அறிவையும் அது பற்றிய தேடலுக்கான ஆர்வத்தையும் இச்செயலமர்வு ஏற்படுத்தியது."

02. "அல்லாஹ்வின் அருளால் நான் எதிர்பார்த்ததைவிட அதிகளவான அறிவை இந்த சமூக ஊடக செயலமர்வு மூலம் பெற்றுக் கொண்டேன். தெரியாத பல புதிய விடயங்களை அறிந்து கொண்டேன். இதனை அழகான முறையில் முன்வைத்த உங்கள் அனைவருக்கும் இறைவன் அருள் புரிவானாக."

03. "இன்றைய அவசரமும் அவசியமான தேவையும் நீங்கள் செய்த இந்த செயலமர்வு மூலம் நிறைவு செய்யப்பட்டது. இதே செயலமர்வை இன்னும் சிறப்பாக வடிவமைத்து பல மட்டங்களிலும் உள்ளவர்களுக்கு ஏற்ப முன்னெடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்."

04. "இன்று சமூக ஊடகம் பற்றிய ஒரு தெளிவு கிடைத்தது. அத்துடன் இச் செயலமர்வு சமூகத்தை சீர்செய்வதற்காக நீங்கள் மேற்கொள்ளும் சிறந்த பணி என்பதை உணர்ந்து கொண்டேன். சமூக ஊடகங்கள் என்ற விரிந்த பரப்பை ஒரு நாள் பயிற்சி நெறியில் விளக்கமாக முன்வைக்க முடியாமல் இருந்திருக்கும். எனவே, இதனை 10 நாட்கள் கொண்ட பயிற்சிநெறியாக வடிவமைத்து நடத்தினால் பயனுள்ளதாக இருக்கும்."

05. "குறிப்பிட்ட நேரத்திற்குள் மிகச் சிறப்பாக, தங்களால் இயலுமானவரை Social Media தொடர்பாக வழிகாட்டினீர்கள். இஸ்லாமிய அடிப்படையுடன் இதனைக் கற்றுத்தந்தது மிக சிறப்பாக இருந்தது."

ஜே.எம்.எப். இன் சமூக ஊடக செயலமர்வை உங்கள் ஊரில், உங்கள் நிறுவனத்தில், உங்கள் கல்லூரியில் நடத்த விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு:**
**077 7871758, 071 9392121**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் நேற்று இன்று நாளை



கடந்த 246வது இதழ் தொடர்ச்சி

▸ அஷ்ஷெய்க் றவூப் ஸெய்ன்

இலங்கையின் வீட்டு வன்முறைகளில் (Domestic Vielonce) 80% இற்கு காரணமாக இருப்பதும் வீதி விபத்திற்குப் பெருமளவு பங்களிப்பதும் போதைப் பாவனையே (Alcoholism) என்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. எனவே, அறிவார்ந்த வழிமுறைகள் மூலம் போதைப் பொருள் பாவனையை ஒழிக்க முடியுமென்றால் இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் காத்திரமான பங்கினை ஆற்ற முடியும்.

துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் போதைப் பொருட்களைக் கடத்துவதிலும் விநியோகிப்பதிலும் வியாபாரம் செய்வதிலும் சில முஸ்லிம்களே முன்னிலையில் உள்ளமை கவலைக்கிடமானது.

பொருளாதார ஏற்றத்தாழ்வும் அதனால் விளைந்த வறுமையும் நவீன சமூகங்களில் புரையோடிப்போயுள்ள மற்றொரு சமூகப் பிரச்சினையாகும். இதற்கு ஸகாதும் வட்டி இல்லா வங்கியமைப்பும் உதவ முடியும் என்பதை முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு எடுத்துக் காட்ட வேண்டும். இங்கு முஸ்லிம்கள் ஸகாத்தின் தாற்பரியத்தை அதன் விரிந்த அர்த்தத்தில் புரிந்து கொள்ள வேண்டும். பிச்சைக்காரனுக்கு ஹதிய்யா கொடுத்தல் என்ற அமைப்பிலேயே இன்று பெரும்பாலான முஸ்லிம் தனவந்தர்கள் ஸகாத் கடமையை நிறைவேற்றுகின்றனர். இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்ப இந்த மனோநிலை தீர்வாகப் போவதில்லை. மாறாக ஸகாத் எப்படி ஒரு விரிந்த வருமானப் பங்கீடாகவும் விஷேஷமாக வறுமையை ஒழிப்பதை நோக்காகக் கொண்டது என்பதையும் கொள்கை ரீதியாக முஸ்லிம்கள் முன்னிறுத்த வேண்டும்.

வட்டியில்லா வங்கி முறையை சில தனிநபர்கள் ஒன்று சேர்ந்து தமக்குள் மாத்திரம் நடத்திச் செல்லும் ஒருவகைக் கூட்டு வியாபாரமாகவே இப்போது நாம் காட்டி வருகிறோம். அப்படியல்லாது அது எவ்வாறு நவீன நிதி நிறுவனமாக நின்று பொருளாதார சமன்பாட்டைக் காக்க பெரும் பணி புரிய முடியும் என்பதை கொள்கை ரீதியாகவும் செயல் ரீதியாகவும் நிறுவ வேண்டும். ஐரோப்பாவில் யூரோ வலய (Euro Zone) நாடுகள் உள்ளிட்டு உலகின் பல பிராந்தியங்களிலும் வட்டியை அடிப்படையாகக் கொண்ட வங்கியமைப்பின் தவிர்க்க முடியாத வீழ்ச்சியையும் இஸ்லாமிய வங்கிகளின் வெற்றியையும் இவ்விடத்தில் முன்னுதாரணமாகக் கொள்ளுதல் பொருத்தமானது.

அமைதியும் ஸ்திரத்தன்மையும் கொண்ட ஒரு சமூகத்தை எவ்வாறு ஆன்மிக உலகாயுத சமன்பாட்டின் மூலம் உருவாக்க முடியும் என்பதையும் இந்த நாட்டு மக்களுக்கு அழகாகவும் சொல்ல முடியும். இதற்கென அழகான இஸ்லாமியக் கிராமங்களை நாம் திட்டமிட்டு உருவாக்க வேண்டும். தலைமைக் கட்டுப்பாடு ஆன்மிக மேம்பாடு, பொருளாதாரச் செழிப்பு, பண்பாட்டு மேன்மை, உயர் வாழ்வு, கல்வி முன்னேற்றம் என்பவற்றைப் பிரதிபலிக்கும் இஸ்லாமியக் கிராமங்களை நாம் திட்டமிட்டு உருவாக்க வேண்டும். அது நம்மைச் சூழவுள்ள சிங்கள, தமிழ் கிராமங்களுக்கு நல்ல முன்னுதாரணங்களாக இருக்க முடியும். அடிமட்டத்திற்கு மேல் நோக்கிய (From Bottom to Top) சமூக மாற்றத்திற்கான உந்துகோலாக இது அமைய முடியும்.

முஸ்லிம் அல்லாதோருக்கு உதவும் பல்வேறு வழிமுறைகளை இஸ்லாம் எமக்குக் காட்டித் தந்துள்ளது. அவற்றைக் கருத்திற் கொள்வதன் மூலமும் இந்த நாட்டின் சிங்கள, தமிழ் சகோதரர்களின் மனங்களை வெல்லலாம். நல்லதோர் புரிந்துணர்வையும் பரஸ்பர நம்பிக்கையையும் கட்டியெழுப்பலாம். ஸூரதுல் மும்தஹ்னாவின் 8ஆம் வசனம் மற்றும் 76ஆம் அத்தியாயத்தின் 28ஆம் வசனம் என்பவற்றை ஆதாரமாக வைத்து ஸதகாவை முஸ்லிம் அல்லாதோருக்கும் வழங்கலாம் என இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர்.

அத்தியாயம் 76இன் 28ஆம் வசனம் பின்வருமாறு அமைந்துள்ளது. அவர்கள் உணவை விரும்பியபோதும் ஏழைக்கும் அனாதைக்கும் கைதிக்கும் அந்த உணவை வழங்குங்கள். இந்த வசனம் இறங்கியபோது மக்கா காலத்தில் முஸ்லிம்கள் அல்லாதோர் மட்டுமே கைதிகளாக இருந்தனர் என ஹஸன் போன்றோர் உறுதி செய்துள்ளனர்.

காலித் பின் வலீத் ஈராக் பிரதேச கிறிஸ்தவர்களுக்கு வழங்கிய காப்புறுதித் திட்டமும் எமக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க முடியும். உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹிமஹுல்லாஹ்) பஸராவின் அப்போதைய கவர்னர் அதீஃ இப்னு அத்ரஃ, முஸ்லிம் அல்லாதோரிடையே உள்ள வயதான சம்பாதிக்க முடியாதவர்களைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

ஸதகதுல் பித்ர் போன்வற்றை முஸ்லிம் அல்லாதோருக்கும் வழங்கலாம் எனும் கருத்தை இமாம் அபூஹனிபா, இமாம் ஸுஹ்ரி, இமாம் முஹம்மத் போன்றோர் கொண்டுள்ளமையும் இங்கு கவனிக்கத்தக்கது. பகராவின் 271ஆம் வசனம் நீங்கள் ஸதகாக்களை பிறருக்குத் தெரியும் வண்ணம் கொடுத்தால் அது நல்லது. அவற்றை மறைத்து ஏழைகளுக்குக் கொடுத்தால் அதுவும் உங்களுக்கு நல்லதே என வருகின்ற இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் ஸதகாக்களில் ஸதகதுல் பித்ரும் உள்ளடங்குவது போன்று ஏழைகளில் முஸ்லிம் அல்லாதோரும் அடங்குவர் என மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் விளக்கமளித்துள்ளனர். எமது இலங்கைச் சூழலில் இக்கருத்தை நாம் கவனத்திற் கொள்ள முடியும்.

இலங்கை உள்ளிட்டு இன்று உலகம் முழுவதும் எதிர்கொள்ளும் மற்றொரு சவாலே சுற்றாடல் நெருக்கடி (Ecological Crisis). இது குறித்து இஸ்லாத்திற்கென்று தனியானதொரு பார்வையும் அதற்குரிய வழிகாட்டல்களும் உள்ளன. அவற்றைப் பிரயோகித்து இலங்கையில் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான ஒரு கொள்கைச் சட்டத்தை (Policy Frame Work) வரைவதற்கு முஸ்லிம்கள் பங்களிக்கலாம். முஸ்லிம்கள் இதில் முன்மாதிரியாக இருந்தும் வழிகாட்டலாம்.

நான் இங்கு பரிந்துரைக்கும் இவ்வழிமுறைகளை வெறும் கருத்தாக முன்வைக்காமல் இத்தகைய பண்பாடுகளைக் கொண்ட சமூகத்தை மிகச் சிறிய அமைப்பிலாவது நாம் உருவாக்கியும் காட்ட வேண்டும்.

முஸ்லிம்கள் வெறுமனே அரசியல் போராளிகளுமல்லர் அல்லது உரிமைகள், சலுகைகள் என்று அந்தப் போராட்டத்திலேயே மூழ்கி அழிகின்றவர்களுமல்லர். அவர்களுக்கென அழகானதொரு வாழ்வு முறை உள்ளது.

அதனை நம்மால் இயன்றவரை அவர்கள் வாழும் நாடு, சூழல், இடம் என்பவற்றுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்திக் காட்டுவார்கள். அது அடுத்த சமூகங்களுக்குப் பயனுள்ளதாவே அமையும். அதில் தீவிரவாதமோ, வன்முறையோ, பயங்கரவாதமோ எதுவும் கிடையாது. மாறாக, அரும் பயனும் நல்ல விளைவுகளுமே இருக்கும் என்பதை இயன்றவரை நிறுவுவார்கள். இதுதான் சிறுபான்மை நாடொன்றில் ஷஹாதத்தை நிறைவேற்றல் என்பதன் தெளிவான அர்த்தம். அதாவது, இந்த தாருஷ் ஷஹாதாவில் நாம் முற்றிலும் வேறுபட்ட ஒரு கொள்கைவாத உம்மா என்பதனை வெளிக்காட்டும் பிரத்தியட்சமான கருத்தாக அமைய முடியும். அல்லாஹ்வே யாவற்றையும் அறிந்தவன்.

(முற்றும்)

# 21 ஆம் நூற்றாண்டுக் கல்வி இலக்கு: முஸ்லிம் கல்வித்துறை மீதான பார்வை



கடந்த 246வது இதழ் தொடர்ச்சி...

ஏ.எல். நௌபீர்

21ஆம் நூற்றாண்டுக்குள் நுழையும் மாணவச் செல்வங்களுக்கு அறிவு, திறன், மனப்பாங்கு மட்டும் போதாது பின்வரும் மறைக் கலைத்திட்டச் செயற்பாடுகளிலும் அவர்கள் சிறந்து விளங்க வேண்டும்:

- சிறந்த தொடர்பு கொள்ளும் ஆற்றல்
- வாசிப்பு, எழுத்து, பேச்சு, கிரகித்தல்
- சுயமாகக் கற்கும் சமூகத் திறன்
- ஒழுக்கம், நேரச் சிந்தனை, நடத்தை (*Positive attitude*), பொறுப்புக் கூறும் திறன் (*Responsibility*)
- குழுச் செயற்பாடுகள் கூடிக் கற்கும் ஆற்றல், வலையமைப்பு அறிவு (*Net working*), மாற்றங்களை உள்வாங்கும் ஆற்றல்
- சிந்திக்கும் ஆற்றல் (பிரச்சினை தீர்த்தல், விமர்சனம், தர்க்கம், எண்ணறி ஆற்றல்)
- அறிவுப் பயண முயற்சியாண்மை (சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் ஆற்றல்)
- டிஜிடல் அறிவு (*Digital Literacy*)

**எமது கல்வி வேண்டி நிற்கும் மாற்றம்**

இலங்கையின் பிரபல்யமான பாடசாலைகள் உட்பட எல்லாப் பாடசாலைகளும் 21ஆம் நூற்றாண்டின் சமூக மாற்றத்தை எதிர்கொள்வதற்கான கல்வித் திட்டத்திற்குள் தங்கள் செயற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும். இம்மாற்றம் தனிப்பட்ட, பிராந்திய ரீதியாக, மொழி ரீதியாக இல்லாது நிறுவனமயப்பட்டதாக எழ வேண்டும். குறிப்பிட்ட பகுதியளவில் நிகழும் மாற்றம் எவ்விதமான பலனையும் ஏற்படுத்த வாய்ப்பில்லை. அமெரிக்கக் கல்வியியலாளர் ஸ்டீபன் கொன்வே (*Stephen Convey*) இம்மாற்றம் பற்றிக் கூறும்போது, ஏழு முக்கிய பண்புகளைக் கூறுகின்றார். அவர், "நாம் மாற்றத்தை நோக்கிப் பயணிக்கும்போது அடிப்படையிலிருந்து சிந்திக்க வேண்டும்" என்கிறார். சமூகத் தளத்திலுள்ள சிவில் நிறுவனங்களான கோயில்கள், விகாரைகள், மஸ்ஜித்கள் முன்வந்து புதிய மாற்றங்களை உள்வாங்க வேண்டும். அவை தமது பழைய பல்லவிகளை உடன் நிறுத்திவிட வேண்டும். நாங்கள் இதை இந்த வழியில்தான் எப்போதும் செய்கிறோம் (*We have always done it this way*) என்ற மனோநிலை மாற வேண்டும்.


கடந்த காலத்தை மையமாக வைத்து எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டும். பிரபல்யமான பாடசாலைகளும் அவற்றின் கடந்த காலப் பணிகள் பற்றி பின் நோக்கிப் பார்க்க வேண்டும். இது நிகழ் காலத்தைத் திட்டமிடவும் செயற்படவும் உதவும். இன்று எல்லாப் பாடசாலைகளுமே மறைக் கலைத் திட்டத்தை (*hidden Curriculum*) இழந்ததாகவே காணப்படுகின்றன. குறிப்பாக, கல்வி அமைச்சின் பாடசாலைத் தரப்படுத்தலில் அது பெற்ற பெறுபேற்றின் நிலை உட்படுத்தப்பட்டுள்ளதுடன் மறைக் கலைத் திட்டச் செயற்பாடுகளை உள்வாங்கவில்லை. பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் கூட வெறும் கடமைக்காகவே நடைபெறுகின்றன. இந்த விளையாட்டுக்களால் என்ன பயன்; அவற்றைவிட பாடங்களை நடத்தலாம் அல்லவா? பரீட்சையில் நல்ல பெறுபேறு கிடைக்கும் என்று பெற்றோர் மத்தியிலும் கதையாடல்கள் உள்ளன. இன்றைய குறிப்பெழுதும் பெறுபேற்றை மையப்படுத்திய தனியார் போதனைத் தளத்தைக் கொண்ட எமது கல்வி முறைமையில் (*Note taking- grades seeking private tuition based education system*) மறைக் கலைத் திட்டம் மங்கி விட்டதாகவே உள்ளது.

**பாடசாலைகளுக்கு நோக்கு (*Vision*) அவசியம்**

நல்லதொரு நோக்குள்ள மனிதன் என்றும் நினைவு கூறப்படுகிறான். நோக்கற்ற மனிதனுக்கு சமூகத்தில் எந்தப் பெறுமானமும் இல்லை. நோக்கு எம்மைத் தூரநோக்குடன் (*Farsightedness*) செயற்படத் தூண்டுவதுடன், குறுகிய நோக்கை (*Nearsightedness*) இல்லாது ஒழிக்கிறது. சிறந்த நோக்கு இடையூறுகளை இல்லாது ஒழிப்பதுடன், இரண்டு விடயகளையும் கண்காணிக்கும் தன்மை கொண்டதாக இருக்கும். அத்துடன் இலக்கை அடைய உறுதுணையாக அமையும்.

(மீதி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 13ஆவது திருத்த சட்டத்தை பலவீனப்படுத்தும் எந்த முயற்சியையும் ஒருபோதும் ஏற்க மாட்டோம்

**ரி.எம்.வி.பி. தலைவர் சி. சந்திரகாந்தன்**

*காத்தாங்குடி நிருபர்*

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபையை ஏற்று அதனை முதன் முதலில் கிழக்கில் நிருவகித்தவன் என்ற அடிப்படையில் அத்திருத்த சட்டத்தை பலவீனப்படுத்தும் எம் முயற்சியையும் ஒருபோதும் எற்றுக் கொள்ள முடியாது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

சி. சந்திரகாந்தன் அவர்களின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தின் எல்லையில் சுமார் 180 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ரெஜி கலாசார மண்டபத்தை பிரதம அதிதியாகக் கலந்து, திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்:

சமகால அரசியலில் மிகவும் பேசப்படுகின்ற ஒரு முக்கிய அம்சமாக 13ஆவது திருத்தச் சட்டம் திகழ்கிறது. அதாவது 13ஆவது திருத்த சட்டத்தை முற்றாக அகற்றுதல் அல்லது அதனுடைய முக்கிய சரத்துக்களை நீக்குதல் என்ற விடயம் பல விமரிசனங்களைக் கொண்டுள்ளன.

இது தொடர்பில் பல அரசியல் வாதிகளும் பலதரப்பட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள். குறிப்பாக, ஒரு சில பொறுப்புமிக்க ஆளுங்கட்சி அமைச்சர்கள் இதற்கு எதிராக கருத்து தெரிவிப்பது சிறுபான்மை மக்களின் ஒரு முக்கியஸ்தன் என்ற வகையில் மிகவும் வேதனையளிக்கிறது. இவ்வாறான கருத்தானது உண்மையில் பல்லின மக்களைக் கொண்ட இலங்கைத் தேசத்தின் சமூக நல்லிணக்கத்தோடு கூடிய அபிவிருத்திற்கு தடையாக அமைவதோடு ஆரோக்கியமற்றதாகவும் காணப்படுகிறது.

அரசுடன் ஒரு பங்காளிக் கட்சியாக நாம் இணைந்திருந்தாலும் எமது மக்களின் அரசியல் உரிமைகளை பலவீனப்படுத்துகின்ற எந்த செயற்பாட்டையும் நாம் ஏற்க மாட்டோம். மாறாக இந்த சமாதான காலத்தில் எமது மக்களின் அரசியல் அதிகாரங்களையும் அரசியல் அடிப்படை உரிமைகளையும் வென்றெடுக்க இதனோடு ஒருமித்த கருத்துடையவர்களுடன் நாமும் இணைந்து செயலாற்ற என்றும் தயாராகவே உள்ளோம்.

தென்னிலங்கையில் இருந்து கொண்டு இன வாத விசத்தைக் கக்குகின்றவர்களுக்கு எதி ராகவும் எமது சிறுபான்மை மக்களது அரசியல் உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படுகின்ற, உண்மையான உள்ளங் கொண்ட அரசியல் தலைவர்களுடன் இணைந்து கரம் கோர்த்து செயற்பட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்றுமே தயாராக இருக்கின்றது எனவும் அவர் தனதுரையில் தெரிவித்தார்.

கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் சிஹாப்டீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக பிரதேச செயலாளர் எஸ். தனபாலசுந்தரம், மட்டக்களப்பு மாவட்ட கட்டிடத் திணைக்களங்களின் பொறியியலாளர் ஞானப்பிரகாசம், அரசியல் பிரமுகர்கள் மற்றும் முன்னாள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் போராளிகள், எனப் பலரும் கலந்து கொண்டார்கள்.

ஓர் அரிய சந்தர்ப்பம்
கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை (Cataract Surgery)
விஷேட வில்லையுடன் நவீன சிகிச்சை முறையில்
கட்டணம் ரூபா 15000.00
குவைத் வைத்தியசாலை, புத்தளம்
தொடர்புகளுக்கு:
0322266480, 0777272107, 0773171720
மாதம் இருமுறை கத்னா செய்யப்படும் 2950.00 மட்டுமே
ஜூலை 28ஆம் திகதிக்கான பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

## ஊரைச் சுற்றி...

# மீட்டர் ஆட்டோவிலும் களவு நடக்கிறது!

## போட்டு உடைக்கிறார்' ஆட்டோ பாட்ஷா'

"பிஸ்னசில் லொஸ்ட் ஆகி பொருளாதார சிக்கலில் விழுந்த என்னைத் தூக்கி விட்டது இந்த ஆட்டோதான். கடந்த பன்னிரெண்டு வருடங்களாக என் குடும்ப வண்டியை இழுத்துக் கொண்டு போவதும் இந்த ஆட்டோ வண்டிதான்"

என்று கூறி பெருமைப்படுகிறார் கொழும்பு மருதானை பகுதியில் ஆட்டோ ஓட்டும் ஆட்டோ பாட்ஷா.

கடந்த 13 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் பிஸியாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு புடவை வியாபாரிதான் இந்த பாட்ஷா. நண்பர் ஒருவரின் பேச்சைக் கேட்டு மொத்த முதலையும் முடக்கி வியாபாரத்தில் நஷ்டமடைகிறார். பின்னர், முதலாளி ஒருவரின் ஆட்டோவை வாடகை அடிப்படையில் பெற்று தொழிலைத் தொடர்ந்தயிவர் இன்று, சொந்த ஆட்டோவில் வலம் வருகிறார். மருதானையைக் கலக்கும் அவரது ஆட்டோவுக்குப் பின்னாலுள்ள சுவாரஷ்யங்கள் பலவற்றை எங்கள் தேசம் வாசகர்களோடு இப்படி பகிர்ந்து கொள்கிறார்:

"குடும்பத்தை இழுத்துக் கொண்டு போக என்ன செய்யலாம் என்று யோசித்த எனக்கு கூலிக்கு ஆட்டோ ஓடலாம் என்ற எண்ணம் வந்தது. ஆனால், என்னிடம் லைசன்ஸ் இருக்கவில்லை. லைசன்ஸ் இல்லையென்றால் ஆட்டோவை தரமாட்டார்கள் எனவே, அதை காட்டிக் கொள்ளாமல் ஆட்டோவைக் கைப்பற்றினேன்.

ஆட்டோ உரிமையாளருக்கு பஜிரோவைத் தந்த நினைப்பு! பல கண்டிஷன்கள் போட்டார். அதாவது, காலை 7மணிக்கு ஆட்டோவைப் பொறுப் பெடுக்க வேண்டும். இரவு 9 மணிக்கெல்லாம் ஒப்படைத்து விட வேண்டும். ஹயர் கிடைக்கிறதோ இல்லையோ ஒரு நாளைக்கு 200 ரூபாய் கொடுத்து விட வேண்டும். அந்தக் காலத்தில் 200 ரூபாய் என்பது பெரிய காசு! சனி– ஞாயிறு தினங்களில் 150 ரூபாய்தான் கேட்பார். அந்நாட்களில் ஹயர் குறைவு என்பது அவரது எண்ணம். ஆனால், சனி–ஞாயிறு தினங்களில்தான் நல்ல ஹயர் கிடைக்கும்."

பாட்ஷா, இன்னுமோர் உண்மையையும் சொல்கிறார் கேளுங்கள்;

"இப்போதெல்லாம் சனி–ஞாயிறு தினங்களில் ஆட்டோ காய்கிறது, ஹயரே இல்லை, பாருங்களேன். யுத்த காலத்திலெல்லாம் கொழும்பு மக்கள், 'கோல்பேஸ்' என்றும் 'ஷீ' என்றும் குடும்பம் குடும்பமாக போவார்கள், எங்களுக்கும் வாசிதான். ஆனால், இப்போது அப்படி பெமிலி ஹயர் போவதெல்லாம் குறைந்து விட்டது. தேவைகளின் நிமிர்த்தம் கொழும்பு வரும் வெளியூர் காரர்களுக்குத்தான் அதிக ஹயர் ஓடுகிறோம். சனி–ஞாயிறு தினங்களில் காரியாலயங்கள் இயங்காமையால் வெளியூராக்கள் கொழும்பில் நிற்பது குறைவு. அதனால், கொழும்பே வெறிச்சோடிப் போய் விடுகிறது. இப்படி இருக்கும் போது எங்களுக்கு ஹயர் எப்படிக் கிடைக்கும்?

இப்போதெல்லாம் குடும்பத்தோடு பொழுதைக் கழிப்பது குறைந்து விட்டது. பொடியன்மாரெல்லாம் ஆட்டோவுக்கு கொடுக்கும் காசிக்கு கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டு படம் பார்க்கப் போகிறார்கள்..." என்று சொல்லி சிரிக்கிறார் பாட்ஷா.

"சரி, கொழும்பில் எங்கும் மீட்டர் ஆட்டோக்களே ஓடுகிறது. நீங்களும் மீட்டர் பூட்டியிருக்கிறீர்கள். ஏற்கனவே உள்ள வருமானத்துக்கும் மீட்டர் பொருத்திய பின்னருள்ள வருமானத்துக்கும் வித்தியாசம் இருக்கிறதா?" என்று கேட்டோம்.

சிரித்துக் கொண்டு, "அது பெரிய கதை" என்றவர் ஓர் உண்மையைப் போட்டு உடைத்தார் பாட்ஷா.



"கொழும்பில் மீட்டர் டெக்ஸி அறிமுகமாகி 2 வருடங்கள் ஆகின்றன. நான் சில மாதங்களுக்கு முன்னர்தான் மீட்டர் பொருத்தினேன். ஆரம்பத்தில் மீட்டர் ஆட்டோவுக்கு மட்டுமே கையைக் காட்டுவார்கள். மீட்டர் இல்லாவிட்டால் வரமாட்டார்கள். ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. நிறைய மீட்டர் ஆட்டோக்காரர்கள் மீட்டரில் களவு செய்கிறார்கள். ஒரு கிலோ மீட்டருக்கு 50 ரூபா என்றால், முக்கால் கிலோ மீட்டர் செல்லும் போதே 50 ரூபா விழுந்து விடுகிறது. ஆட்டோவில் ஏறுபவர்கள் தூரத்தை அளந்து பார்த்துக் கொண்டா இருப்பார்கள்? தவிர, இந்த ஆட்டோ மீட்டர்களை பரிசோதிக்கும் நடைமுறை ஒன்றும் இங்கில்லை. எனவே, மீட்டர் ஆட்டோவில் களவு நடக்கிறது. இதனால் மீட்டர் பொருத்தாத ஆட்டோவுக்கு கை காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்" என்கிறார் பாட்ஷா.


"பிடகொடுவ போகனும் ஆட்டோ வருமா" என்று கேட்ட ஒருவரை "ஏறுங்கள்" என்று கூறி எங்களுக்கு 'பீப்' அடித்து விட்டு செல்லும் ஆட்டோ பாட்ஷாவிடம் இருக்கும் இன்னும் பல நூறு சுவாரஷ்ய தகவல்களை சந்தர்ப்பம் கிடைத்தால் சொல்கிறோம்.

அடுத்த இதழில் யார் என்று காண கொஞ்சம் பொறுத்திருங்கள்.

— ப்லெச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துபாயில் அல்குர்ஆனிய பூங்கா நிர்மாணம்



துபாயில் புனித அல்குர்ஆன் பூங்காவை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 60 ஹேக்டெயர் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டிருப்பதுடன் அல்குர்ஆன் கூறுகின்ற தாவரங்கள் இப்பூங்காவில் உள்ளடக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இப்பூங்கா துபாயிலுள்ள அல்கவானிஜ் பகுதியில் வித்தியாசமான முறையில் நிர்மாணிக்கப்படவுள்ளது. அல்குர்ஆனிய அற்புதங்களை அறிமுகப்படுத்தும் நோக்கமும் இதில் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் இத்திட்டம் 2014 செப்டெம்பரில் பூரணமாக முடிவடையும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இப்பூங்கா கவர்ச்சிகரமான பிரதான நுழைவாயில், நிர்வாகக் கட்டிடம், இஸ்லாமிய பூங்கா, சிறுவர் விளையாட்டுப் பகுதிகள், திரையரங்கு, குர்ஆனிய அற்புதப் பகுதி, குளம், கண்ணாடிக் கட்டிடம், பாலைவனப் பூங்கா, சைக்கிள் ஓட்டப் பந்தயப் பாதை எனப் பல வித்தியாசமான வசதிகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அல்குர்ஆன் 54 தாவரங்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. குர்ஆனிய அற்புதங்கள், பூரண குளிரூட்டப்பட்ட வசதியுடன் சுரங்கப் பாதையில் அமையவுள்ளது. இந்தப் பூங்கா விற்காக 27 மில்லியன் திர்ஹம் (7.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) செலவில் நிர்மாணிக்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ரோம் நகரில் தொழிலாளர் அமைப்புகள் ஊர்வலம்

இத்தாலியின் தலைநகர் ரோமில் கடந்த வாரம் லெட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் மற்றும் வேலையற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தொழிலின்மைப் பிரச்சினை மற்றும் பிரதமர் என்றிகோ லேட்டாவின் புதிய அரசுக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இவ் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டம் CGIL, CISL, GIL போன்ற இத்தாலியின் பிரசித்தி பெற்ற தொழிலாளர் அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்தாலியில் கடந்த ஏப்ரலில் 12% தொழிலின்மை பதிவாகியுள்ளது. இதில் 24 வயதுக்குட்பட்டோர் 40% அடங்குவதாக கூறப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாட்டின் வளர்ச்சி அளவீடுகள், ஓய்வூதியம் வழங்கப்படாது வேலையிலிருந்து அனுப்பப்பட்ட வேலையாட்கள் பற்றியும் இந்தப் பிரச்சினை தொடர்பாக அதிபர் லெட்டாவின் செயற்பாடு தாமதமடைந்தமை ஆகியவற்றுக்கு எதிராகவும் குரலெழுப்பினர்.

கடந்த வாரம் அரசு 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை 30 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முகமாக கீழ் கட்டுமானத் திட்டங்களை முன்னெடுக்க அரசினால் தீர்மானிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதிபர் லெட்டா அமைச்சரவைக் கூட்டத்தில், தொழிலின்மை தொடர்பான புதிய திட்டமிடலை மேற்கொள்ள உள்ளதாகவும் புதிய அளவீடுகள் அரசினால் அறிமுகம் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

# சிரியா விடயத்தைத் தீர்மானிக்க யாரையும் அனுமதிக்க மாட்டோம்

## ஈரான் வெளிவிவகார அமைச்சர்



சிரியா தொடர்பான தீர்மானத்தில் எந்த வெளிநாட்டினரது முடிவினையும் எமது நாடு அனுமதிக்காது என ஈரான் வெளிவிவகார அமைச்சர் அலி அக்பர் சாலிஹ் தெரிவித்துள்ளார். கட்டார் நாட்டின் தோஹாவில் நடைபெற்ற 'சிரியாவின் நண்பர்கள்' ஆறாவது மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற இம்மாநாட்டில் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களும் சில பொது அமைப்புகளின் உறுப்பினர்களும் கலந்து கொண்டதுடன், சிரிய விவகாரம் பற்றியும் கலந்துரையாடினர்.

சிரியா அரசுக்கு எதிராகப் போராடும் குழுவுக்கு ஆயுத உதவி வழங்குவது என இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதேவேளை, ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஈரான் போராளிகள் அவசரமாக சிரியாவிலிருந்து நாடு திரும்ப வேண்டும் எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில், "ஆயுதம் வழங்குவதுதான் சில வேளை சமாதானத்தை அடைய முடியுமான வழி" என கட்டார் முன்னாள் அமீர் ஷெய்க் ஹமாத் தெரிவித்தார். சிரியா அரசு இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி சட்டத்தை மீறுவதாக அமெரிக்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்தார். அதே நேரம் ஐக்கிய ராஜ்யத்தின் செயலாளர் வில்லியம் ஹேறஜ்: "நாங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சிரிய மக்களின் வாழ்க்கைக்கு உதவ வேண்டும்" என அம்மாநாட்டில் தெரிவித்தார்.

இரண்டு வருட கால சிரியப் போரில் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மரணமடைந்துள்ளனர். இந்த சிரிய நண்பர்கள் அமைப்பில் எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜோர்தான், கட்டார், சவூதி, துருக்கி, ஐக்கிய அரபு இராஜ்யம், அமெரிக்கா போன்ற நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபை, அரபு லீக், ஐரோப்பிய ஒன்றியம், வளை குடாவுக்கான ஒருங்கமைப்பு சபை போன்ற அமைப்புகளும் அங்கத்துவம் வகிக்கின்றன. இவ்வமைப்பின் முதலாவது கூட்டம் 2012 பெப்ரவரி 24ஆம் திகதி டியூனீசியாவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# யெமன் எதிர்நோக்கியுள்ள சிறுவர் தொழிலாளர் பிரச்சினை

சிறுவர் உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியாகக் குரல்கள் எழுந்துள்ள நிலையில் யெமன் அரசு தனது நாட்டு சிறுவர் தொழிலாளர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர தீர்மானித்துள்ளது.

ஒரு மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள் யெமனில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில்களில் ஈடுபடுகின்றனர். யெமனில் நிலவும் வறுமை நிலையே இவ்வாறு சிறுவர்கள் வேலையில் ஈடுபடக் காரணம் எனக் கூறப்படுகின்றது. அதிகமான குடும்பங்கள் தமது குடும்ப வருமானத்திற்காகப் பிள்ளைகளை பாடசாலையிலிருந்து இடை விலக்கி வேலைக்கு அனுப்புவதாகக் கூறப்படுகிறது. இதில் 90 வீதத்திற்கும் அதிகமான சிறுவர் தொழிலாளர்கள் கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்களே.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) அறிக்கையின் படி, 1.3 மில்லியன் யெமன் பிள்ளைகள் இவ்வாறு வேலையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதுடன் இவர்களில் 5-14 வயதுக்குட்பட்டோர் அடங்குவதாகவும் கூறுகின்றது. யெமன் சனத்தொகையில் 40% இற்கும் அதிகமானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதால் பிள்ளைகள் கல்வியை விட்டும் தொழிலில் ஈடுபடுவதாக கூறப்படுகின்றது.

# ஆப்கானில் ஜனாதிபதி வாசஸ்தலத்தில் தாக்குதல்

ஆப்கானிஸ்தான் காபுலில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை பிரதேசத்தில் அண்மையில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் நான்கு ஆயுததாரிகள் மரணம் அடைந்தனர். இதற்காக பலமான ஆயுதங்கள் மற்றும் கைக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாகவும் மாளிகையின் கிழக்கு வாசலினூடாகவே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இத்தாக்குதலுக்கு தலிபான்கள் உரிமை கோரியுள்ளதுடன் அமெரிக்க மற்றும் ஆப்கான் படை வீரர்களை இலக்காக வைத்தே இத்தாக்குதலை நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதல் ஆப்கான் உள்நாட்டு நேரப் படி காலை 6.30 இற்கு ஆரம்பித்து 2 மணி நேரம் தொடராக இடம்பெற்றுள்ளது. இத்தாக்குதல் சம்பவம் நிகழும் போது ஜனாதிபதி கமீத் கர்ஸாயி ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்ததாகவும் அமெரிக்க ராஜாங்க தூதுவர்களும் அங்கிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

இதன்முன் ஆப்கான் அரசு, தலிபான்களின் அரசியல் தலைமைக் காரியாலயம் கட்டார் தோகாவில் அமைவதையிட்டு அதிருப்தி தெரிவித்ததுடன் அதன் கொடி மற்றும் பெயர், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தை தொடர்பிலும் ஆப்கான் அரசு எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.

ஜனாதிபதி மாளிகை அருகே ஆப்கான் பாதுகாப்பு அமைச்சு, அமெரிக்கா உளவுப் பிரிவு அலுவலகம் மற்றும் நேட்டோ தலைமையகம் என்பன அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கட்டாரின் புதிய அமீராக ஷெய்க் தமீம் பின் ஹமாத் பதவியேற்பு



கட்டார் நாட்டின் புதிய அமீராக ஷெய்க் தமீம் பின் ஹமாதி அல்தானி அண்மையில் பதவியேற்றார். ஷெய்க் ஹமாத் பின் ஹலீபா அல்தானி அமீராக இதுவரை பதவி வகித்து வந்தார். ஷெய்க் ஹமாத் 1995 இலிருந்து அமீர் பதவியை வகித்து வந்ததுடன் கட்டார் நாட்டை பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாக பொருளாதாரம் மற்றும் அரசியல் வளர்ச்சிக்கு இட்டுச் செல்வதில் அதிக பங்காற்றியவர். 8 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த பொருளாதாரத்தை 174 பில்லியன் டொலராக மாற்றிய இவர், அல்ஜஸீரா தொலைக்காட்சி நிறுவனத்தையும் நிறுவினார்.

ஷெய்க் தமீம் அல்தானி, ஷெய்க் ஹமாதின் இரண்டாவது மனைவியான மூஸா பின்த் நஸீரின் இரண்டாவது மகனாவார். இவர் முன்னர் பாதுகாப்புப் படையின் கட்டளையிடும் துணைத் தளபதியாகவும் தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவராகவும் 2020இல் கட்டார் நாட்டில் நடைபெற உள்ள உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டியின் உயர் குழுத் தலைவராகவும் அதிகாரம் மிக்க கல்விக் குழு மற்றும் தொலைத் தொடர் பாடல், தொழில்நுட்பக் குழுத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

புதிய மன்னரின் பதவியேற்பையடுத்து பல புதிய மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. 33 வயதுடைய இவர் அரபுலகில் மிக வயது குறைந்த தலைவராக வும் பதவியேற்றுள்ளார்.

# சர்வதேச விஞ்ஞான மற்றும் கணிதப் போட்டியில்

## சவூதி அரேபிய மாணவர்களுக்கு 8 விருதுகள்

இன்டல் நிறுவனத்தால் நடத்தப்படும் வருடாந்த சர்வதேச விஞ்ஞான மற்றும் கணிதப் போட்டியில் சவூதி அரேபிய உயர் பாடசாலை மாணவர்கள் 8 விருதுகளைப் பெற்றுள்ளனர். இப்போட்டி அமெரிக்காவின் அரிசோனாவிலுள்ள பொனிக்ஸ் வளாகத்தில் நடைபெற்றுள்ளது. இப்போட்டியில் சவூதி அரேபியா சர்வதேச ரீதியாக 3ஆவது இடத்தைப் பெற்றது. கனடா மற்றும் அமெரிக்கா முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

போட்டியில் வெற்றிபெற்ற சவூதி மாணவர்கள் ஜித்தா, ரியாத் மற்றும் தமாம் ஆகிய பிரதேசங்களிலுள்ள தனியார் மற்றும் அரச பாடசாலைகளில் கற்பவர்களாவர். இப்போட்டி சர்வதேச ரீதியாக நடத்தப்பட்ட மிகப் பெரிய போட்டியாக கருதப்படுகின்றது. சவூதியிலிருந்து 22 மாணவர்கள் 18 வித்தியாசமான கல்வித் துறைகளிலும் செயற்திட்டங்களிலும் போட்டியிட்டனர். இப்போட்டியில் 70 நாடுகளிலிருந்து 1500இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.






# இஸ்தான்பூல் எரிந்தது, தணிந்தது பின்னணி என்ன?

துருக்கியின் தலைநகரம் இஸ்தான்பூலில் குறிப்பாகவும், ஏனைய பல நகரங்களில் பொதுவாகவும் இடம்பெற்று வந்த தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தன. மேற்கு நாடுகளையே அதிசயிக்கத் தக்க அளவுக்கு பொருளாதார ரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் சாதனைகளைப் படைத்து வரும் நாடு துருக்கி. மேலும், துருக்கி சர்வதேச அளவில் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க ஒரு தேசம் என அண்மைக் காலமாக ஊடகங்கள் எழுதியும் பேசியும் வந்தன. இந் நிலையில், அங்கு இரண்டு வாரங்களாக நடைபெற்று ஓய்ந்த ஆர்ப்பாட்டங்கள் எந்தப் பின்னணியில் நடைபெற்றது, எதனை அடைந்து கொள்வதற்காக நடைபெற்றது? என்பது பற்றிய சந்தேகங்கள் பலரையும் ஆட்கொண்டிருக்கின்றன. இன்னும் குறிப்பாகச் சொன்னால், சர்வதேச ஊடகங்கள் அவ்வார்ப்பாட்டங்கள் பற்றி வெளியிட்ட தகவல்களும் கூட நியாயமற்றவையாகவும் பக்க சார்பானவையாகவுமே காணப்பட்டன.

துருக்கியின் தலைநகர் இஸ்தான்பூலை புனர் நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டங்களை பரவலாக அர்த்தோகான் தலைமையிலான நீதிக்கும், அபிவிருத்திக்குமான அரசு மேற்கொண்டு வருகின்றது. அக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதாகத் தெளிவாக விளக்கப்படுத்தியே மக்களின் ஆதரவைப் பெற்றது. எனவே, கடந்த பத்து ஆண்டுகளாக இஸ்தான்பூல் நகரம் அதிசயிக்கத்தக்க அபிவிருத்தியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்த வகையில், இஸ்தான்பூல் நகரில் அமைந்துள்ள காஸி தக்ஸீம் என்ற 70 வருடங்கள் பழமையான பொது இடமொன்றை அபிவிருத்தி செய்வதற்கு இஸ்தான்பூல் நகர சபை ஒப்புதல் அளித்தது. இதனால், அவ்விடத்தில் ஒரு பாரிய பொதுச் சந்தையொன்றையும் மஸ்ஜித் ஒன்றையும் அமைப்பதாக 2012ஆம் ஆண்டு முடிவாகியது. சர்வதேச ஊடகங்கள் கூறியதுபோல், இத்தீர்மானம் அரசின் பலாத்காரத்தால் நிறைவேற்றப்படவில்லை. மாற்றமாக, இஸ்தான்பூல் நகர சபையின் அனைத்து அங்கத்தவர்களும் ஏகமானதாக இத்திட்டத்திற்கு வாக்களித்ததன் பின்னரே முடிவாகியது. அதிலும் விஷேடமாக, இஸ்தான்பூல் நகர சபை நீதிக்கும், அபிவிருத்திக்குமான அரசின் அதிகாரத்தின் கீழ் இருந்தாலும் கூட, சந்தையொன்றையும் மஸ்ஜித் ஒன்றையும் அமைப்பதற்கு மதச் சார்பற்ற எதிர்க் கட்சிகளும் கூட 100 வீதம் சார்பாக வாக்களித்தன.



சென்ற மாதம், இஸ்தான்பூல் நகரை மீள் நிர்மாணம் செய்யும் திட்டத்தில் காஸி தக்ஸீம் என்ற பொது இடத்தை அகற்றி, பாரிய மஸ்ஜித் உட்பட பொதுச் சந்தையை அமைப்பதற்கான முதல் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட இருந்தன. அதைத் தொடர்ந்து அகற்றப்பட இருந்த காஸி தக்ஸீம் பொது இடத்தில் இருந்த மரங்கள் அகற்றப்படுவதை எதிர்த்து சூழல் பாதுகாப்பில் அக்கறை காட்டும் சிலர் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். இங்கு தெளிவாக புரியப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், இஸ்தான்பூல் நகரில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதாக இருந்தால், முன்னதாகவே அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சூழல் விரும்பிகளது இவ்வார்ப்பாட்டம் எவ்வித அனுமதியும் பெறப்படாமலேயே இடம்பெற்றது. இதனால், இஸ்தான்பூல் நகர மேயர் உட்பட, உப ஜனாதிபதி ஆகியோர் இவ்வார்ப்பாட்டத்தை கலைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் போது, பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தினர். இச்சந்தர்ப்பத்தைத் தனது பழைய பகையைத் தீர்த்துக் கொள்வதற்காக துருக்கி அரசுக்கு எதிரான இடதுசாரி மதச்சார்பற்ற குழுக்கள் பயன்படுத்திக் கொண்டன. அதாவது, மக்களை அரசு ஒடுக்குகிறது என்ற பெயரில் அரசுக் கெதிராக அணி திரளுமாறு மக்களை அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

பின்னர் அரசுக்கு எதிரான வேறு பல குழுக்களும் இடதுசாரி கட்சிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டன. அவர்கள் மக்களைத் தூண்டி விட்டனர். பல வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டனர். அரசை சர்வதிகார சக்தியாகவும், ஜனநாயகத்தின் பெயரால் இஸ்லாத்தை ஆதிக்க சக்தியாக மாற்றுவதற்கு அரசு முற்படுவதாகவும் போலியாக செய்திகள் பரப்பப்பட்டன.

பொலிஸார் இவ்வன்முறைகளைக் கடுமையாக எதிர் கொண்டது உண்மை. ஆனால், புரிந்து கொள்ளப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், இடதுசாரி ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் வாசஸ்தலத்தை நோக்கி வன்முறையை நகர்த்த முற்பட்ட போதே, பொலிஸார் உஷாரானார்கள். இதன் போது, கடுமையாக கைகலப்பு இடம்பெற்றது. இச்செய்தி சர்வதேச ஊடகங்களில் சூட்சுமமாக மறைக்கப்பட்டது. மாற்றமாக, பொலிஸார் கடுமையாக நடந்து கொண்ட காட்சிகள் மாத்திரம் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டன. இதற்கிடையில், இஸ்தான்பூலில் வசிக்கும் அலவியத் பிரிவைச் சேர்ந்தவர்களும் கூட இடதுசாரி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து பிரதமர் அர்த்தோகான் உட்பட, நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சிக்கு எதிரான சுலோகங்களை ஏந்தி வன்முறையை இன்னும் கொழுத்தி விட்டனர். காரணம், இடதுசாரி மதச் சார்பற்ற வாதத்தை விதைத்த முஸ்தபா அதாதுர்க் குர்திஷ்களை, ஆர்மேனியர்களை ஒதுக்கித் தள்ளினார். ஆனால், அலவியத் பிரிவினரை தன்னோடு வைத்துக் கொண்டார். காரணம், அடிப்படையில் அவர்கள் மதச்சார்பற்ற கொள்கையையே கொண்டிருந்தமையாகும். இன்னும், சிரியப் புரட்சியில் அரசு அலவியத் நாயகா அஸாதின் சர்வதிகாரத்திற்கு எதிராக களமிறங்கியதால், அதற்கு பலி தீர்க்க அலிவியத்கள் அர்த்தோகானை சர்வதிகாரியாக சித்திரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் 3 விதமான சாரார் பங்கு கொண்டனர். முதலாவது சாரார், தூய்மையாக சூழல் பராமரிப்பை கருத்திற் கொண்டு பங்கு கொண்டவர்கள். ஆனால், நகர ஒழுங்கைப் பேணி இவர்களது ஆர்ப்பாட்டம் இடம்பெறவில்லை. இரண்டாவது சாரார், மேற்குறிப்பிட்டவர்களின் ஆர்ப்பாட்டத்தை தமது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்த நினைத்த இடதுசாரி மதச் சார்பற்ற கமாலிஸ்டுக்கள்.

(18ஆம் பக்கம் பார்க்க)

பொலிஸார் இவ்வன் முறைகளைக் கடுமையாக எதிர் கொண்டது உண் மை. ஆனால், புரிந்து கொள்ளப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், இடதுசாரி ஆர்ப்பாட் டக்காரர்கள் பிரதமர் வாசஸ்தலத்தை நோக்கி வன்முறையை நகர்த்த முற்பட்ட போதே, பொலிஸார் உஷாரானார்கள். இதன் போது, கடுமையாக கைகலப்பு இடம்பெற்றது. இச்செய்தி சர்வதேச ஊடகங்களில் சூட்சும மாக மறைக்கப்பட்டது. மாற்றமாக, பொலி ஸார் கடுமையாக நடந்து கொண்ட காட்சிகள் மாத்திரம் பரவலாக விளம்பரப்படுத்தப்பட்டன.

ஸகி பவ்ஸ் (நளீமி)
விரிவுரையாளர் இஸ்லாஹிய்யா
அரபுக் கல்லூரி, மாதம்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தேசம்





**இவ்வார சிந்தனைக்கு**

**நேரத்தை தள்ளிப் போடாதே. தாமதங்கள் அபாயமான முடிவைக் கொண்டுள்ளன.**

-ஷேக்ஸ்பியர்-

# செயற்கை மழையும் ஆபத்தும்

உலகின் பல்வேறு நாடுகளில் இன்று செயற்கை மழை வெற்றிகரமாக பெய்விக்கப்படுகிறது. நாடுகளின் பொருளாதாரத் தேவைகளுக்காக இவ்வகையான யுக்திகள் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**செயற்கை மழை ஏன் தேவை?**

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கிய அதிவேக தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவுகளின் ஒரு பங்காக பூமியின் காலநிலை பல்வேறு விதமாக மாற்றமடைந்துள்ளது. மழை பெய்ய வேண்டிய காலங்களில் மழை பெய்யாமல் விடுவதால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புறுகின்றன. சில இடங்களில் மழையும் வேறு சில இடங்களில் அதீத வறட்சியும் ஏற்படுவதால் மனித உயிர் இழப்புகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. சரியான நேரத்தில் மழையைப் பெய்விப்பது ஒன்றே சரியான தீர்வாக அமையும். ஆகவே, செயற்கை மழைக்கான தேவை எழுந்தது.

ஓரிடத்தில் பெய்ய வேண்டிய மழையை செயற்கை முறையில் இன்னோர் இடத்தில் பெய்விப்பதே செயற்கை மழை எனப்படுகிறது.

**செயற்கை மழை எப்படி சாத்தியமானது?**

செயற்கை மழைக்கான தேவை தொடர்பான எண்ணக்கரு 1903ஆம் ஆண்டளவில் விஞ்ஞானிகளிடையே விதைக்கப்பட்டது. எனினும், எந்த விதமான முன்னேற்றங்களும் சாத்தியப்படவில்லை. 1950களில் அவுஸ்திரேலியாவில் 'மழை உருவாக்கம்' என்ற பெயருடன் ஒரு குழு நியமிக்கப்பட்டு தீவிர தேடலில் இறங்கியது. அதன் விளைவாக 1957 ஆம் ஆண்டளவில் செயற்கை மழை தொடர்பான திடமானதோர் எண்ணக்கரு உருவாகி, 1960ஆம் ஆண்டில் முதலாவது செயற்கை மழை பெய்விக்கப்பட்டது.

இத்திட்டத்தில் அமெரிக்கா மற்றும் கனடா விஞ்ஞானிகள் தீவிரமாக செயற்பட்டார்கள். முக்கியமாக, ஸ்ஷேபர் மற்றும் அவருடன் பணியாற்றிய பெர்னார்டு, வென்னிகாட் ஆகிய விஞ்ஞானிகள் இத்திட்டத்தின் அடிப்படைக் காரணிகளை உருவாக்குவதில் வெற்றி பெற்றனர். பின்னர் வந்த அமெரிக்க விஞ்ஞானி சிம்சன் உறுதியான பல மாற்றங்களைச் செய்தார். நவீன மாறுதல்களை பிற்பட்ட காலத்தில் சீன நிபுணர் சாங்கியல் குழுவினர் செய்தார்கள்.

**செயற்கை மழை பெய்விப்பை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.**

முதலில், வானில் நகர்ந்து கொண்டிருக்கும் மேகங்களை மழை தேவைப்படும் இடத்திற்கு ஒன்று கூட்ட வேண்டும். அதற்கு அந்த பகுதியில் காற்றழுத்தத்தை உருவாக்க வேண்டும். கல்சியம் கார்பைட், கல்சியம் ஒக்சைட், உப்பும் யூரியாவும் சேர்ந்த கலவை, அமோனியம் நைட்ரேட் போன்ற கலவைகளை விமானங்கள் மூலம் அந்த பகுதியில் இருக்கும் மேகங்களின் மேல் தூவி அப்பகுதியில் காற்றழுத்தத்தை உருவாக்குவதன் மூலம் ஈரத் தன்மையை அதிகரித்து மழை மேகங்கள் உருவாக்குவார்கள்.

அடுத்தது, மழை மேகங்களின் கனத்தை அதிகரிக்க சமையல் உப்பு, யூரியா, அமோனியம் நைட்ரேட், உலர்பனி ஆகியவற்றைத் தூவி மேலும் அதிக அளவிலான மழை மேகங்களை ஒன்று கூட்டுவார்கள். (கல்சியம் குளோரைட்டும் பயன்படுத்துவதுண்டு) இது விமானம் மூலம் அல்லது பீரங்கிகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

இறுதியாக, வெள்ளி அயோடைட் மற்றும் உலர் பனி ஆகியவற்றை மேகங்களில் தூவுவதன் மூலம் மேகங்கள் குளிர்ச்சியாக்கப்படுகின்றன. குளிர்ந்த மேகங்களில் இருந்து நீர்த்துளி வெளியேறி மழை பெய்கிறது.

**செயற்கை மழையால் பாதிப்புண்டா?**


செயற்கை மழையால் உடலுக்கோ அல்லது தாவரங்களுக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை. இயற்கை மழையைப் போன்றதாகவே இருக்கும். துளிகளின் அளவும் சில வேளைகளில் பெரியதாக இருக்கலாம். ஆனால், ஓரிடத்தில் வலுக்கட்டாயமாக மேகங்களை கூட்டி மழையை பெய்விப்பதால் பல இடங்களில் இயற்கையாகப் பெய்ய வேண்டிய மழை பெய்யாது வறட்சி ஏற்படும்; காலநிலை மேலும் மோசமடையும்.

செயற்கையாக மழை பெய்விக்கத் தேவையான அனைத்தையும் செய்தும் சில நேரங்களில் மழை பெய்வதில்லை. சில நேரங்களில் எதிர்பார்த்ததை விட அதிகமாக மழை பெய்து அழிவை ஏற்படுத்தும்.

செயற்கை மழை பரிசோதனையில் கனடாவின் கியூபிக் நகரில் மூன்று மாதங்களில் சுமார் 60 நாட்கள் மழை பெய்து அழிவை ஏற்படுத்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தற்போது உலகில் சீனா அதிகமாக செயற்கை மழையை பெய்விக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தவளையின் உடலில் இருந்து தோன்றிய முதல் மின்கலம்




இத்தாலியின் இயற்பியலாளர் அலெக்ஸான்ரோ வோல்டா 1800இல் முதல் மின்கலத்தை (Battery) கண்டு பிடித்தார்.

இவர் கண்டு பிடித்த இந்த பேட்டரி பார்ப்பதற்கு நிறுத்தி வைக்கப்பட்ட குழாய் துண்டு போல் காட்சி அளிக்கும். சம அளவில் இருக்கும் வட்ட வடிவ தாமிர (Copper) மற்றும் துத்தநாக (Zinc) தகடுகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இவற்றின் இடை இடையே உப்புத் தண்ணீரால் தேய்க்கப்பட்ட காகிதங்கள் வைக்கப்பட்டு, ஒவ்வொரு உலோகத் தகடும் கெட்டியான உலோக கம்பியால் இணைக்கப்பட்டு இருக்கும்.

அலெஸான்ரோ வோல்டா இந்த பேட்டரியை கண்டு பிடிப்பதற்கு இன்னுமொரு நிகழ்வு தூண்டுதலாக இருந்தது.

லூகி கால்வானியின் (Lugi Galvani) பரிசோதனைக் கூடத்தில் தாமிர கம்பியில் தொங்கவிடப்பட்ட ஓர் இறந்த தவளையின் காலருகில் கொண்டு செல்லப்பட்ட மெல்லிய இரும்புத் தகடு அதன் காலில் அசைவை ஏற்படுத்தியது எப்படி? என்ற சிந்தனையே வோல்டாவிற்கு பேட்டரியை கண்டு பிடிக்க தூண்டுதலாக இருந்துள்ளது.

இதே போல வோல்டா ஏற்படுத்திய முதல் மின் தூண்டல் பின்னாளில் 1821 இல் மைகேல் பரடேவிற்கு மின் மோட்டரை கண்டு பிடிக்க ஏதுவானது.





# துணுக்குச் செய்திகள்

தொகுப்பு: எஸ்.எம். அர்ஷத்தீன்



2028ஆம் ஆண்டளவில் சீனாவை விஞ்சி உலகின் அதிக சனத்தொகை கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும் என ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது. அப்போது இந்தியா-சீனா ஆகிய இரண்டு நாடுகளின் சனத்தொகையும் 145 கோடியாக இருக்கும் என்று அவ்வறிக்கை தெரிவிக்கிறது. எதிர்வரும் காலங்களில் சீனாவின் சனத்தொகை மெதுவாகக் குறைந்து கொண்டு வரும். ஆனால், இந்தியாவின் சனத்தொகையானது 2050 ஆம் ஆண்டு வரை அதிகரித்துக் கொண்டே போகும் என இந்த அறிக்கை தெரிவித்துள்ளது. தற்போது 700 கோடியாகவுள்ள உலகின் சனத்தொகை 2050 ஆம் ஆண்டளவில் 940 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




வடக்கையும் தெற்கையும் தரைவழியாக இணைக்கின்ற முக்கிய சாலையாகிய கண்டி-யாழ்ப்பாணம் A9 நெடுஞ்சாலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜூன் 15 அன்று வைபவரீதியாகத் திறந்து வைத்தார். இவ் வீதி புனரமைப்புக்கு சீன அரசு நிதியுதவி வழங்கியிருக்கின்றது.

KASPERSKY ANTI•VIRUS

உலகில் அதிக சைபர் தாக்குதல் (கணினி தாக்குதல்) கூடுதலாக இடம் பெறும் நாடுகளில், இலங்கை கஸ்பேஸ்கி (kasper sky) பட்டியலில் 8ஆவது இடத்திலுள்ளது. இலங்கையில் கணினி பயன் படுத்துவோரில் 51 சதவீதமானோர் இணையத் தாக்குதலுக்கு முகம் கொடுத்ததாக பாதுகாப்புநிறுவன மொன்று கூறியுள்ளது. இணைய உலக புள்ளி விபரங்களின் படி இலங்கையில் 15 சதவீதமான மக்கள் அதாவது, 3.2 மில்லியன் மக்கள் இணையத்தை கடந்த வருடம் பயன்படுத்தியுள்ளனர்.




அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன், தாம் ஓய்வு பெறப்போவதாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். இதன் பிரகாரம் ஒக்டோபர் 6ஆம் திகதி நிறைவடையும் சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாட எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார். அத்துடன் இங்கிலாந்தின் சரே அணிக்காக எதிர்வரும் ஜூலை மாதம் வரை விளையாடவுள்ளதாக ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்தப்படியாக அதிக ஓட்டங்களைப் பெற்றுள்ள ரிக்கி பொண்டிங், 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

சங்க இலக்கியத்திலுள்ள 18 நூல்களில், பன்னிரெண்டை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தற்காக தமிழகத்தின் தூத்துக்குடியைச் சேர்ந்தவரும் தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வருபவருமான வைதேகி ஹெர்பர்ட் அவர்களுக்கு கனடாவின் டொரண்டோ பல்கலைகழகமும் தமிழ் இலக்கிய வட்டமும் இணைந்து விருது ஒன்றை வழங்கி கௌரவித்துள்ளன. இதுவரை சங்க இலக்கியத்தின் பன்னிரெண்டு படைப்புகளை மொழி பெயர்த்துள்ள வைதேகி, இதர ஆறு படைப்புகளையும் அடுத்த ஆண்டு (2014) இறுதிக்குள் முடித்துவிட திட்டமிட்டுள்ளதாகவும் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் தலைமைத்துவம்



**தமது அரசியல் கருமங்களுக்காக முஸ்லிம்கள் சிங்கள மக்களால் நிருவகிக்கப்படுகின்ற சிங்கள கட்சிகளுக்கு ஆதரவை வழங்குவதன் மூலமாக தமது சமூக பொருளாதார நலன்களை காத்து வந்தனர். இத்தகைய முஸ்லிம்களின் ஆதரவுக்கு பகரமாக சிங்கள அரசாங்கமும் முஸ்லிம்களுக்குத் தனியான பாடசாலைகள், கல்விக் கல்லூரிகள், சமய பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியர்கள், அரபு மொழி ஆசிரியர்கள் முதலியவற்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தது. இத்தகைய நடவடிக்கைகள் மூலமும் சிங்கள அரசாங்கங்கள் முஸ்லிம்களிடத்திலிருந்து மேலும் பல இலாபங்களைப் பெற்றுக் கொள்ள முனைந்தன என்பதும் ஓர் இரகசியமான விடயமல்ல.**

▸ சட்டத்தரணி ஸகி இஸ்மாயில்

(சென்ற இதழின் தொடர்)

முஸ்லிம் தலைவர்கள் 1930 மற்றும் 40ற்கு இடைப்பட்ட காலங்களில் சிங்கள அரசியல் தலைமைகளுடன் உடன்பட்டவாறே தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். தமக்கு சிங்கள மக்களால் (1915இல்) இழைக்கப்பட்ட துரோகத்தனத்தை மறந்து பதவிகளுக்கும் பட்டங்களுக்குமாக 1940களில் முஸ்லிம் தலைமைகள் சேனாநாயகாவுடன் மீண்டும் கூட்டுச் சேர்ந்ததைக் குறிப்பிடலாம். முஸ்லிம் தலைமைகளும் அதன் உயர் வர்க்கத்தினரும் அன்று இத்தகைய முடிவுக்குச் செல்லக் காரணம், தமக்கு எதிராக செயற்பட்ட கட்சியினர் சுதந்திரத்திற்கு பின்பு ஆளும் கட்சியில் இருந்ததினாலாகும்.

மறுபக்கம், முஸ்லிம்களின் அரசியல் வர்க்கமும் அதனுடன் ஒன்றிணைந்து சமய அடிப்படையிலான அமைப்புக்களும் முஸ்லிம்களை இஸ்லாத்தின் அடிப்படையில் ஒரு குடையின் கீழ் ஒற்றுமைப்படுத்துவதற்காக முற்பட்டனர். இத்தகைய முயற்சியை தமிழ் தலைமைகள் எதிர்த்ததுடன் முஸ்லிம்களை அவர்கள் இஸ்லாமிய தமிழர்களாக வர்ணித்தனர். தமிழர்களின் இத்தகைய







முடிவுக்கு பின்புலமாக இருந்தது 19ஆம் நூற்றாண்டில் ராமநாதனால் முன்வைக்கப்பட்ட வாதமாகும். தமிழ் அரசியல் தலைமைகளால் தொடர்ச்சியாகப் பேணப்பட்ட தமிழ்-முஸ்லிம் உறவு முறுகல் நிலையின் காரணமாக குறிப்பிட்ட முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமிழ் மக்களின் தேசிய போராட்டத்தையும் அதன் பின்னாலிருந்த சுயாட்சியையும் நிராகரித்தே வந்தனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்களின் குறிப்பிட்ட அரசியல் தலைமைகள் முஸ்லிம்களின் அரசியல் அடையாளத்தை இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையில் உருவாக்க குரல் கொடுத்து வந்தனர்.

1980 காலப்பகுதி வரையில் முஸ்லிம்களில் செல்வாக்குடன் இருந்தோருக்கு இன ரீதியாகவும் சமயம் சார்ந்ததாகவும் அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்துக் கொள்வதென்பது மிகவும் கடினமானதாகவே இருந்து வந்தது. உண்மையில், இலங்கையின் தென்புறத்தில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு தனியான அரசியல் கட்சி ஒன்றிற்கான தேவையோ அல்லது தேசிய ரீதியில் அழுத்தம் மேற்கொள்ளக் கூடிய வகையில் தமக்கென அரசியல் கோரிக்கைகளையோ முன்வைக்க வேண்டிய தேவைப்பாடு எதுவுமே அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்களுக்கு தேவையாக இருந்ததெல்லாம் சிங்கள மக்களுடனான சகவாழ்வும் தமது வியாபார நடவடிக்கையில் அதிக இலாபம் அடைவதும்தான். இருப்பினும், தமது அரசியல் கருமங்களுக்காக முஸ்லிம்கள் சிங்கள மக்களால் நிருவகிக்கப்படுகின்ற சிங்கள கட்சிகளுக்கு ஆதரவை வழங்குவதன் மூலமாக தமது சமூக பொருளாதார நலன்களை காத்து வந்தனர். இத்தகைய முஸ்லிம்களின் ஆதரவுக்கு பகரமாக சிங்கள அரசாங்கமும் முஸ்லிம்களுக்குத் தனியான பாடசாலைகள், கல்விக் கல்லூரிகள், சமய பாடங்களை கற்பிப்பதற்கான ஆசிரியர்கள், அரபு மொழி ஆசிரியர்கள் முதலியவற்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தது. இத்தகைய நடவடிக்கைகள் மூலமும் சிங்கள அரசாங்கங்கள் முஸ்லிம்களிடத்திலிருந்து மேலும் பல இலாபங்களைப் பெற்றுக் கொள்ள முனைந்தன என்பதும் ஓர் இரகசியமான விடயமல்ல. இத்தகைய நிலையில் சிங்கள அரசாங்கத்திற்கு முஸ்லிம்களிடத்தில் இருந்த எதிர்பார்ப்புக்களில் இரு விடயங்களை முக்கியமாக கருதலாம்.

1. அரபு நாடுகளுடன் பொருளாதார ரீதியில் நட்புறவை வளர்த்துக் கொண்டு, இராணுவ ஆதரவைப் பெற்றுக் கொள்ளல்.

2. தமிழர் பிரச்சினையை தொடர்ந்தும் எதிர்க்கும் வகையில் முஸ்லிம்களை அப்படியே தன் பக்கமாக வைத்துக் கொள்வது.

புள்ளிவிபர கணிப்பின்படி 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரபு நாடுகள் 317மில்லியன் தொகையை இலங்கைக்கு உதவியாக வழங்கியிருந்தன. இக்காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகள் இலங்கையில் இருந்து அதிகளவில் தேயிலை இறக்குமதியைச் செய்து வந்தன. 1978-80க்கு இடைப்பட்ட காலங்களில் 75000 நபர்கள் மத்திய கிழக்கில் தொழில் வாய்ப்பிற்காகச் சென்றனர்.

மேலும், இலங்கைக்கு தேவையான இராணுவ உதவிகளில் பெரும் பங்கு முஸ்லிம் நாடுகளால் வழங்கப்பட்டு வந்துள்ளமையை நாம் அவதானிக்கலாம். 2006ஆம் ஆண்டில் ராஜபக்ஷவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை இந்தியா புறந்தள்ளிய போது இச்சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட பாக்கிஸ்தான் சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆயுத தளபாடங்களை இலங்கைக்கு வழங்கியிருந்தது. மேலும் இந்தியாவின் புலனாய்வு அதிகாரிகளின் கருத்துப்படி, இலங்கை இராணுவத்தின் வான் படைக்கு பயிற்சிகளை வழங்குவதில் பாக்கிஸ்தான் அரும் பங்காற்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும், பாக்கிஸ்தான் நாட்டின் உயர் ஸ்தானிகர் ஆலயமானது விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்தவொரு உதவியையும் பாக்கிஸ்தான் இலங்கைக்கு வழங்கவில்லை என கருத்து தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இராணுவ மற்றும் பொருளாதார அம்சங்களுக்கு அப்பால் இலங்கை அரசு ஏன் முஸ்லிம்கள் மத்தியில் அப்படி ஓர் அக்கறையாக இருந்தது என்பதற்குப் பின்னால் அரசியல் காரணிகளும் இருந்தன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு முஸ்லிம்களும் தமது ஆதரவை வழங்குவார்களாக இருப்பின், அது இலங்கை அரசுக்கு எப்படியான சவாலாக அமையும் என்பதை அரசாங்கம் அதிகம் தெரிந்து வைத்திருந்தது. இதனால், தமிழர்களின் விடுதலைப் போரட்டத்திற்கு, முஸ்லிம்களின் ஆதரவு மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளால் தேர்தலில் வெற்றி ஈட்டுதல் என்ற இரு விடயங்களின் காரணமாக அன்றிருந்த முஸ்லிம் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு நிறையவே கிராக்கி நிலவியது என்றால் மிகையல்ல.

### தலைமைத்துவமும் அதன் தெரிவுகளும்

இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தமக்கென உருவாக்கிக் கொள்கின்ற அரசியல் தலைமைகள் தமது சமூகத்தின் நலன் காக்கும் பொருட்டு இலங்கையில் காணப்படுகின்ற பெரும்பான்மை சிங்கள கட்சிகளான ஐ.தே.க. அல்லது இலங்கை சுதந்திர கட்சி என்பவற்றில் இணைந்து அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டனர். 1956 ஆம் ஆண்டில் சிங்கள மொழிச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட போது அதனை பாரபட்சமாக கருதிய தமிழர்களின் கருத்துடன் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் ஒன்றித்து அவர்களுக்கு ஆதரவு வழங்கினர். அப்போது இலங்கை சுதந்திர கட்சியின் ஸ்தாபக தலைவர்களாக இருந்தவர்களில் அதிகமானோர் முஸ்லிம்களாவர்.

1980களில் தமிழர்களின் போராட்டம் இராணுவ மயப்பட்ட வேளை, வடக்கு கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம் இளைஞர்களில் சிலரும் விடுதலை புலிகளுடன் இணைந்து கொண்டனர். இருப்பினும் பின்னர், தமிழர்கள் முஸ்லிம்களை தமது சமூகத்திற்குள் ஒருங்கிணைத்துக் கொண்டு ஓரினமாகக் காட்ட முற்பட்ட போது வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ்-முஸ்லிம்களுக்கு இடையில் காணப்பட்ட உறவில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. இந்த முறுகல் நிலை 1990களில் விடுதலைப் புலிகளால் வடக்கு முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்ட போது மேலும் உக்கிரமடைந்தது. இந்நிலைமை முஸ்லிம்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள சிங்கள பெரும்பான்மையிடம் அடைக்கலம் பெற்றுக் கொள்ள வாய்ப்பான ஓர் அரசியல் காரணமாக அமைந்தது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது வியாபார தொழிற்துறையில் அதிக அக்கறை செலுத்தியதால் தமது சமூகத்தின் அடையாளத்தை மொழி ரீதியாக அல்லாமல் சமய அடிப்படையிலேயே உருவாக்கி கொள்ள முற்பட்டனர். இது தமிழர்கள் முஸ்லிம்கள் தொடர்பில் அதிகம் அதிருப்தியடைய வழி வகுத்தது. இதன் விளைவாக, அன்று வரை தமிழ், முஸ்லிம் மக்களிடம் இருந்து வந்த மொழி ரீதியான ஒட்டும் உறவும் விரிசலடைய ஆரம்பித்தது. இதன் பின்னர், 1985களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தாபித்த எம்.எச்.எம். அஷ்ரப் கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்கள் மத்தியில் தனது அரசியல் காரணங்களுக்காக சமய அடிப்படையில் அமைந்த தேசியவாத சிந்தனையை உற்பத்தி செய்தார். அப்போது இக்கட்சியின் கோரிக்கை பின்வருமாறு விபரிக்கப்பட்டது: இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்களின், குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இதனால் இலங்கை அரசியலில் முஸ்லிம்களுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடுகள் கிழக்கில் மத்திமப்படுத்தப்பட்டதன் காரணமாக அன்று வரை கொழும்பை தளமாகக் கொண்டு முஸ்லிம்களின் அரசியலை நகர்த்தி வந்த சில முஸ்லிம் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு அது பெரும் சவாலாகவே அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கு அடித்தால்...

(03ஆம் பக்கத் தொடர்)

பாகிஸ்தான் இராணுவத் தளபதி இலங்கை இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவை சந்தித்ததுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடி இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய பாதுகாப்பு குறித்து பேசவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின.

*13 விடயத்தில் இந்தியாவின் வாயை அடைக்க இலங்கை தக்க தருணத்தில் கொடுத்திருக்கும் இந்த அடிகள் இலங்கை அரசாங்கத்தின் ராஜ தந்திரத்தையே காட்டுகிறது.*

இவ்விவகாரங்கள் இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது இச்சம்பவங்களுக்கு முன்பாக மத்திய அரசின் அறிக்கைகளிலிருந்து அறிய முடிந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்டிருந்த இந்திய கைத்தொழில் வாணிபத்துறை இணை அமைச்சர் சுதர்ஷன நாச்சியப்பன்: இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் பட்சத்தில் அது இந்தியாவுக்கே பாதகமாக அமையும். இதனை சீனா பயன்படுத்திக் கொள்வதுடன் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சியளிக்க முன்வரும் அதேவேளை, இலங்கையில் இன்னொரு பாகிஸ்தானை உருவாக்க சந்தர்ப்பமும் கிடைத்து விடும் எனவும் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

*13இல் கை வைத்து அதனை 'உண்டு -இல்லை' என்று ஆக்கும் வரை இந்தியாவுக்கு இலங்கை வழங்கும் இவ்வாறான அடிகள் பலவற்றை எதிர்பார்க்கலாம்.*

## பல்கலைக்கழக...

(03ஆம் பக்கத் தொடர்)

சக மாணவர்களையும் ஆசிரியர்களை யும் திடீரென சரமாரியாக சுட்டுத்தள் ளுவது. இது அங்குள்ள பாடசாலைகளில், கல்லூரிகளில் அடிக்கடி நடக்கும் நிகழ்வு. இது ஆரோக்கியமானதா?

கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் கூட மாணவர்களிடம் செயற்திட்டங்களும் ஒப்படைகளும் கோரப்படுவது வழக்கம். அது மாணவர்களால் உரிய நேரத்தில் கையளிக்கப்படாத போது, குறித்த மாணவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுவதும் இயல்பானதுதான். இதற்காக கற்றுத் தருகின்ற ஆசான்களை இலக்கு வைத்து தாக்குவதென்பது எவ்வளவு பெரிய மடமை. அதற்குரிய முடிவு இதுவல்ல.

உளரீதியான ஏதாவது பாதிப்புக்குள்ளாகும் போது அதற்குப் பழிவாங்கும் நோக்கில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். பாடசாலைகளாக இருக்கட்டும் பல்கலைக்கழகங்களாக இருக்கட்டும் எதுவாகினும் ஒரு மாணவன் செய்யும் இது போன்ற செயலானது அவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் ஏனைய மாணவர்களுக்கும் முன்னுதாரணமாக அமைந்து, அவர்களும் இவ்வாறான செயற்பாடுகளின்பால் தூண்டப்படுகின்றனர். இது போன்ற நிகழ்வுகளை ஊடகங்கள் வாயிலாகக் காணும் பிஞ்சுகள் அதனை பரீட்சித்துப் பார்க்க துணிந்து விடுவர்.

இந்தக் கொலை மற்றும் தற்கொலை முயற்சியின் விளைவு இலங்கையிலுள்ள கல்வி நிலையங்களில் இளம் மாணவ சமுதாயத்துக்கு ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தக் கூடாது. இதற்குத் தகுந்தாற் போல் குறித்த சம்பவம் மீதான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படல் வேண்டும். அந்நடவடிக்கை ஏனைய மாணவர்களுக்கு படிப்பினையாகவும் இருக்க வேண்டும்.

## பதின்மூன்று...

(07ஆம் பக்கத் தொடர்)

தட்டி வைக்க மேற்கொண்ட ஒரு முயற்சியின் அங்கமாகவும் மாகாண சபை ஒழிப்புக்கான கோரிக்கை இருக்க முடியுமோ என எண்ணத் தோன்றுகின்றது. இச்சந்தேகத்துக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவே NFF, JHU போன்றோரின் வரலாறுகளும் காணப்படுகின்றன. இவர்கள் ஆரம்பம் முதலே இந்தியாவுடனான உறவை எதிர்த்து வந்துள்ளதுடன் சீனாவுடனான நெருக்கத்தையும் வலியுறுத்தி வந்துள்ளனர். புலிகளின் வான் தாக்குதலை இலங்கை வான் படையினால் முறியடிக்க முடியாமல் போனமைக்கும் இந்தியா வழங்கிய ராடர்தான் காரணமுமாகும் என விமர்சித்ததோடு, புலிகளுடனான யுத்த வெற்றியில் பிரதான பாத்திரம் வகித்தது சீனாவின் ஆயுத உதவியே என நியாயம் கற்பித்தவர்களும் இவர்களே. இவர்கள் விரும்பியது போன்றே இலங்கையும் சீனாவின் வலையில் என்றுமில்லாதவாறு வீழ்ந்து விட்டது.

இச்சந்தர்ப்பத்திலேயே இந்தியாவை வீழ்த்த தருணம் பார்த்துக் காத்திருக்கும் சீனா தனது சகாக்களைக் கொண்டே இலங்கையை விட்டும் இந்தியாவை விரட்டுவதன் மூலம் அதன் வெளியுறவுக் கொள்கையை கேள்விக்குட்படுத்தவும் அதனது நேச சக்திகளுக்கு ஓர் எச்சரிக்கையை வழங்கவும் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்துகின்றதா எனும் பலத்த சந்தேகமும் எழாமலில்லை. நிலைமையின் ஆபத்தை உணர்ந்ததால்தான் என்னவோ, இந்தியா அவசர அவசரமாக தனது பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பி 13ஆம் திருத்தத்தில் எத்தகைய மாற்றங்களும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனும் காட்டமான அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுத் தனது பலமான எதிர்ப்பையும் கொழும்பிடம் தெரியப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் வழமை போன்றே இவ்விடயத்திலும் இரு தேசங்களையும் திருப்திப்படுத்தும் நடவடிக்கையையே மேற்கொண்டுள்ளது. சீனாவினதும் அதனது ஆதரவுச் சக்திகளான தனது பங்காளிக் கட்சிகளினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இக்கட்டான பல சந்தர்ப்பங்களில் தனக்கு ஒட்சிசன் ஏற்றிய இந்தியாவை நேரடியாக பகைக்காத வண்ணமும் 13ஆம் திருத்தச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. அருகருகே உள்ள இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களோ ஒன்றிணைந்து தனி ஒரு மாகாணமாக மாறுவதைத் தடுப்பதும், பாராளுமன்றம் மாகாணங்களுக்கான சட்டமியற்றலின் போது அனைத்து மாகாணங்களின் ஒப்புதலையும் பெற வேண்டும் எனும் நிபந்தனையை நீக்கி பெரும்பான்மை மாகாணங்களின் ஒப்புதலை போதுமாக்குவதுமாக இத்திருத்தங்கள் அமைகின்றன.

இவ்விடயத்திலேயே ராஜபக்ஷ அரசாங்கத்தின் அரசியல் முதிர்ச்சியும் சாணக்கியமும் தெளிவாக புலப்படுகின்றது. இவ்விரண்டு திருத்தங்களிலும் காணி, பொலிஸ் எனும் சொற்களையோ, காணி, பொலிஸ் அதிகாரத்தை நீக்குதல் எனும் சொற்றொடரையோ காண முடியாது. ஆனால், விரும்பிய நேரத்தில் அவை அனைத்தையும் நீக்கும் அதிகாரம் மறைமுகமாக பாராளுமன்றத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் சொல்வது போன்று, மாகாண சபைகள் கொண்டிருக்கும் சட்டமியற்றும் அதிகாரத்தையே தங்கு தடையின்றி தன் வசப்படுத்திக் கொள்ளும் அதிகாரமும் இத்திருத்தம் மூலம் வழங்கப்படுகின்றது. இதுவே இவ்வரசாங்கத்தின் மற்றுமோர் 13பிளஸ் பரிசு.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சாணக்கிய மிக்க அரசியல் தலைவர்தான். ஆனால், ஒரே நேரத்தில் பலரையும் திருப்திப்படுத்தத் தெரிந்த அவருக்கு மூன்று தசாப்தமாய் போராடிப் போராடி மாய்ந்து கொண்டிருக்கும் இச்சிறுபான்மை சமூகத்தை மாத்திரம் திருப்திப்படுத்த முடியாமல் போனதன் மர்மம்தான் இன்னும் புரியாத புதிராக உள்ளது.

## இஸ்தான்பூல்...

(15ஆம் பக்கத் தொடர்)

மூன்றாவது சாரார், சட்டபூர்வமற்ற கடும்போக்கு மதச்சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவாளர்களும் இவர்களின் தூண்டுதலில் இயங்கிய அலவியத்களும்.

**மதச்சார்ப்பற்ற சக்திகளது நோக்கங்கள்**

இவ் ஆர்ப்பாட்டத்தை இடதுசாரி மதச்சார்பற்ற கமாலிஸ்ட்டுக்கள் தமது அரசியல் இலாபங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டதன் பின்னணியைப் பொறுத்தவரை, உடனடிக் காரணம் ஒன்றும் பல நீண்டகாலக் காரணிகளும் காணப்படுவதாக அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். உடனடிக் காரணத்தைப் பொறுத்தவரை, இவ்வார்ப்பாட்டத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் துருக்கியின் சிரிய எல்லைப் புறத்தில் பாரிய குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது. அதில் கிட்டத்தட்ட 42 துருக்கியர்கள் மரணித்தனர். அதைத் தொடர்ந்து மதச் சார்பற்ற கமாலிஸ்ட்டுக்கள் அர்த்தோகானின் அரசுக்கு எதிராக அறிக்கைகளை விட்டனர். அதாவது, சிரியப் புரட்சியில் துருக்கிய அரசு சிரிய புரட்சிப் படைக்கு ஆதரவளிப்பது தெரிந்த விடயம். மறுபுறத்தில், கமாலிஸ்ட்டுக்கள் தெளிவாகவே அஸதுக்கு தாம் ஆதரவளிப்பதாக தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், துருக்கி-சிரிய எல்லையில் நிகழ்ந்த அசாதாரண நிலையை ஆதாரம் காட்டி, அரசு துருக்கியை பாதுகாப்பற்ற தேசமாக மாற்ற முற்படுகிறது என குற்றம் சாட்டியது. பின்னர், துருக்கியின் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரனையின் போது பல திகில் நிறைந்த மர்மங்கள் வெளிப்பட்டன. அதாவது, துருக்கியின் மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளுக்கு அக்குண்டு வெடிப்புடன் தொடர்பிருப்பதாக விசாரணையின் போது தெளிவானது. இதனோடிணைந்த வகையில், அக்குண்டு வெடிப்பிற்கு சில வாரங்களுக்கு முன்னர் துருக்கியின் மதச்சார்பற்ற கமாலிஸ்டுக்கள் அஸதுடனும், அஸதின் புலனாய்வுப் பிரிவுடனும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் கசிந்தன. எனவே, மதச்சார்பற்ற கமாலிஸ்டுக்களை விசாரணைக்கு எடுப்பது பற்றி துருக்கியின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆராய்ந்தனர். இந்தருணத்தில்தான் காஸி தக்ஸீம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதனை மதச் சார்பற்ற கமாலிஸ்டுக்கள் தம்மீதான குற்றச்சாட்டிலிருந்து அரசின் கவனத்தைத் திருப்பி விடுவதற்காக பயன்படுத்தினர். இதுவே வேகமாக கமாலிஸ்டுக்கள் இவ்வார்ப்பாட்டத்தை தூண்டியதற்கான காரணம் என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அடுத்ததாக, துருக்கியின் தற்போதைய அரசின் அபரிமிதமான மக்கள் ஆதரவினால், மதச்சார்பற்ற சக்திகள் தமது அரசியல் எதிர்காலம் தொடர்பாக நம்பிக்கை இழந்துள்ளதையே காஸி தக்ஸீம் ஆர்ப்பாட்டம் படம் பிடித்துக் காட்டுவதாக அரசியல் ஆய்வாளர்கள் எழுதுகின்றனர்.

இஸ்தான்பூலில் வாழும் மதச்சார்பற்ற சக்திகள் தமது நாடு ஜனநாயக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் முன்னேறுவதைக் கண்டு அச்சம் அடைந்துள்ளனர். அதே வேளை, மதச்சார்பற்ற துருக்கியைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த வேண்டும் என்ற தமது கோரிக்கைகளை வெளிப்படுத்துவதற்கு அவர்களிடம் அரசியல் செயற்திட்டங்களோ, பொறிமுறைகளோ இல்லை. இன்னும், தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும் வலுவிழந்து விட்டன. அதன் தலைவர்கள் சிதறிவிட்டனர். இதற்கு மேலதிகமாக, இராணு வத்தை அரசு கட்டுப்படுத்திய போதும், நீதித் துறை விவகாரங்களில் தலையிடுவது கட்டுப்படுத்தப்பட்ட போதும், குர்திஷ் பிரச்சினையின் போதும் தம்மைப் பிரிதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் எந்தவொரு எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. இத்தகைய தொடர் தோல்விகளையே மதச்சார்பற்றவர்கள் ஆர்ப்பாட்டத்தினூடாக வெளிக்காட்டினார்கள். எனவே, மதச் சார்பற்றவர்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்பதை விட, மதச்சார்பற்ற அரசியல் கட்சிகளை தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் தெம்புள்ள கட்சிகளாக இருக்குமாறு வேண்டிக் கொண்டதே காஸி தக்ஸீம் ஆர்ப்பாட்டம் எனவும் கூறலாம். இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், மதச்சார்பற்ற கமாலிஸ்டுக்களின் அரசியல் வங்கரோத்து நிலைக்கு கிடைத்த அடியே காஸி தக்ஸீம் ஆர்ப்பாட்டம்.

அத்துடன், மதச்சார்பற்ற சக்திகள் கிளர்ந்தெழுவதற்கு வெளிச்சத்திற்கு வராத இன்னொரு நோக்கமும் காணப்படுகிறது. அர்த்தோகானின் பொருளாதார அபிவிருத்தியின் வீச்சில் முழு துருக்கி மக்களும் நனைந்துள்ளனர். பெரும் பெரும் தொழிலதிபர்கள் தலைநகரத்திற்கு வெளியிலிருந்து வியாபார உலகில் காலடி வைக்க ஆரம்பித்துள்ளனர். சில பெண் தொழிலளதிபர்கள் தலையை மூடிய நிலையில் பொருளாதார உலகில் வலம் வர ஆரம்பித்து விட்டனர். இதனை இஸ்தான்பூலை ஆட்டிப்படைத்த முதாலாளித்துவ பண முதலைகளுக்கு தாங்கிக் கொள்ள முடியவில்லை. தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமும் கடந்த 10 வருடங்களாக வாய்க்கவில்லை. காஸி தக்ஸீம் ஆர்ப்பாட்டத்தினூடாக அவர்களும் தங்களது உணர்வுகளைத் தீர்த்துக் கொள்ள முற்பட்டனர். காஸி தக்ஸீம் ஆர்ப்பாட்டம் ஓரளவு தீவிரமடைந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். இறுதியாக, மதச்சார்பற்ற அரசியல் சக்திகளின் இத்தகைய திரு விளையாடல்களை அர்த்தோகான் எவ்வாறு நோக்குகிறார் என்பது பற்றி ஊடகவியலாளொருவர் குறிப்பிடும் போது, அர்த்தோகான் இஸ்தான்பூலைக் கட்டியெழுப்பியவர். அவருக்குத் தெரியும் எதற்கு, எப்படி பதில் கொடுக்க வேண்டும் என்று என்கிறார்.

## இ.தொ.கா. வின் நிலைப்பாடு...

(09ஆம் பக்க தொடர்)

*13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக அமைச்சரவையிலும் பாராளுமன்றத்திலும் எழுந்த வாதப் பிரதிவாதங்களில் இ.தொ.கா. கலந்து கொள்ளவில்லை. பிரச்சினைகள் ஏற்படும் போது இந்தியாவில் தஞ்சமடைந்து விட்டு, பின் மெதுவாகக் கொழும்புக்கு வருவது ஒன்றும் புதிய 'ராஜ தந்திரமல்ல' இவர்களுக்கு. 83 கலவரத்தின் போது, முதல் தடவையாக சந்திரிகா அம்மையார் அரசுக்கு முட்டுக் கொடுக்க முற்பட்ட போதும் இந்த இந்தியாவில் தலைமறைவாகும் இராஜ தந்திரத்தைத்தான் இ.தொ.கா. பின்பற்றியது. இப்போதும் இதைத்தான் பின்பற்றியிருக்கிறது.*

*ஐ.தே.க. வின் தொழிற் சங்கத்தின் நிலைப்பாடு தெளிவானது. ம.ம.மு. வின் நிலைப்பாட்டை இராதா கிருஷ்ணன் சொல்லி விட்டார். மனோ கணேஷன் மற்றும் பிரபா கணேஷன் தம்மைத் தெளிவுபடுத்தி விட்டனர். ரங்கா பல தடவைகள் தன் எதிர்ப்பைக் கூறிவிட்டார். ஏனைய மலையகக் கட்சிகள் பொருட்டல்ல. ஆனால், இவ்விடயத்தில் கல்லுளி மங்கனாக 'கம்' மென்றிருப்பது இ.தொ.கா. மட்டுமே! இவ்விவ காரத்தில் தனக்கென ஒரு கருத்து இல்லை யென்றால், மத்திய மாகாண சபையில் 90களில் இருந்து இத்தனை வருடங்களாக முக்கிய பங்காளியாக இருந்து வரும் இ.தொ.கா மாகாண சபைகளின் எதிர்காலம் பற்றி எந்தவொரு கொள்கையையும் கொண்டிருக்க வில்லை எனில், தெரிவுக்கு பின் எந்த அடிப்படையில் இ.தொ.கா. பங்களிப்பு செய்கிறது? சொன்னபடி செய்யாவிட்டால் அர சாங்கம் கோபித்துக் கொள்ளும், தமது வசதி வாய்ப்புகளைப் பிடுங்கிக் கொள்ளும் என்பதுதான் அதன் தலைமைத்துவத்தின் கவலை?*

*இ.தொ.கா. வாய் திறந்து தன் நிலைப்பாட்டைச் சொல்ல வேண்டும். ஏனெனில், நாங்கள் சார்ந்திருக்கும் கட்சி கையாலாகாதது என்று சொல்லி 'பெருமை' பட்டுக் கொள்ள மலையக மக்கள் தயாராக இல்லை!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழி பெயர்ப்புத் தொடர்

(தொடர் 17)

தற்போது பிரயோகத்திலிருப்பதற்கு ஏற்பவும் இஸ்லாமிய அறிவியல் பதிவு செய்திருப்பது போலவும் சுன்னா என்ற கலைச் சொல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம் அதன் மொழியியல் கருத்திலும் பரந்த கருத்தைக் கொண்டதாகும் என்ற இரகசியத்தை நாம் அறிந்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதனால்தான், நபித் தோழர்கள் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது செயல்களில் பின்பற்றப்படுவதற்கும் முன்மாதிரியாகக் கொள்வதற்குமுரியவற்றை மாத்திரமே சுன்னா என்ற சொல்லின் மூலம் நாடினர். மொழியில் சுன்னா என்ற சொல் இதுவே அதன் அடிப்படைக் கருத்தாகும். 'பின்பற்றப்படும் வழி முறை' என்ற அர்த்தத்தைக் கொடுப்பதுவே அதற்குரிய காரணமாகும். அதாவது, சட்டவாக்கத்திற்கும் பின்பற்றுதலுக்குமுரிய செயல்களை மட்டுமே இச்சொல் உள்வாங்கியிருந்தது.

சுன்னாவின் கருத்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடமிருந்து அறிவிப்புச் செய்யப்படும் சொல், செயல், அங்கீகாரம் அனைத்தையும் குறிக்கும் வகையில் மாற்றம் பெற்ற போது அறிஞர்களும் ஈற்றில் இவ்வாறே வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். சுன்னாவில் சட்டவாக்கமாக அமைந்த பகுதியே பெரும்பான்மையாகக் காணப்படுவதும் சட்டவாக்கமாக அமையாதவை குறைவானதாக இருந்தாலும் சுன்னாவில் இப்பகுதி காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பின் வந்தோரின் நவீன கலைச் சொல் பிரயோகங்களின் அடிப்படையில் முன்னோரின் வாசகங்களை விளங்குவது (இதனால் அதிகமான ஆய்வாளர்கள் வழி பிறழ்ந்து சென்றுள்ளனர்) அறிவுத்துறையில் காணப்படும் மிக ஆபத்தான விடயங்களில் ஒன்றாகும். முன்னோர்கள் "நஸ்க்" என்ற சொல்லைப் பயன்படுத்தினர். அவர்கள் அதன் மூலம் நாடிய கருத்து பின் வந்தோர் நாடிய கருத்திலும் வேறுபட்டதாகும். சுன்னா என்ற சொல்லும் அவ்வாறே அமைந்துள்ளது.

நாங்கள் இன்று ஆராய்ந்து கொண்டிருக்கும் விடயதானம் குறித்து நபித்தோழர்கள் சுன்னாவாக அமைந்தவையா, அமையாதவையா என்றே நோக்கினர். சட்டவாக்கமாக அமைந்தவையா, சட்டவாக்கமாக அமையாதவையா என்று அவர்கள் நோக்கவில்லை.


இமாம் அஹ்மத் தனது முஸ்னதில் பதிவு செய்துள்ள அறிவிப்பின் மூலம் இதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அபூ துபைலிடமிருந்து இப்னு ஆஸ்மில் நுளவி பெற்று அறிவிப்பதை ஹம்மாதிடமி இப்னுஸலமா -ருந்து சுரைஜும் யூனுஸும் பெற்று அறிவிப்பதாக இமாம் அஹ்மத் பின்வருமாறு பதிவு செய்யதுள்ளார்!

அல்லாஹ்வின் தூதர் கஃபாவை தவாஃப் செய்யும் போது முதல் மூன்று சுற்றிலும் விரைந்து சென்றார்கள் என்றும் அது சுன்னா என்றும் உமது சமூகத்தினர் எண்ணிக் கொண்டுள்ளனர் என இப்னு அப்பாஸிடம் நான் கூறினேன். அதற்கு இப்னு அப்பாஸ் அவர்கள் உண்மையும் உணர்ந்துள்ளனர், பொய்யும் கூறியுள்ளனர் என பதில் சொன்னார். அவர்கள் கூறியவற்றில் உண்மை எது? பொய் எது? என நான் வினவினேன். தவாஃபின் போது அல்லாஹ்வின் தூதர் முதல் மூன்று சுற்றிலும் விரைந்து சென்றார்கள் என்று கூறியது உண்மையாகும். அது சுன்னா என்று கூறியது பொய்யாகும். அது சுன்னாவல்ல ஹுதைபிய்யா உடன்படிக்கைக் காலத்தில் குறைஷிகள்: "முஹம்மதையும் அவரது தோழர்களையும் புழு போல மடிந்து விடும் வரையில் விட்டு விடுங்கள்" என்று கூறினர். எதிர்வரும் வருடம் வர வேண்டும், மக்காவில் மூன்று நாட்களே தங்க வேண்டும் என குறைஷிகள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் உடன்படிக்கை செய்தனர். அதற்கேற்ப முஷ்ரிக்கள் கயீகஆன் திசையில் இருக்க, ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவுக்கு வந்தார்கள். தனது தோழர்களுக்கு, "நீங்கள் கஃபாவை மூன்று சுற்று விரைவாக தவாஃப் செய்யுங்கள், அது சுன்னாவல்ல என்று கூறினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸபாவுக்கும் மர்வாவுக்கும் இடையில் சென்று வரும் கிரியையை ஒட்டகத்தின் மீதிருந்து செய்தார்கள் என்றும் அது சுன்னா எனவும் உமது சமூகத்தினர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று கூறினேன். அதற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உண்மையும் உணர்ந்துள்ளனர், பொய்யும் கூறியுள்ளனர் என்று கூறினார். அவர்கள் கூறியதில் எது உண்மை. எது பொய் என்று வினவினேன். ஸபாவுக்கும் மர்வாவுக்கும் இடையில் தொங்கோட்டம் ஓடும் கிரியையை ஒட்டகத்தின் மீதிருந்து செய்தார்கள் என்று கூறியது உண்மையாகும். அது சுன்னா என்று கூறியது பொய்யாகும்; அது சுன்னாவல்ல.

ஸபாவுக்கும் மர்வாவுக்குமிடையில் அல்லாஹ்வின் தூதர் விரைந்து சென்றார்கள் என்றும் அது சுன்னா என்றும் உமது சமூகத்தினர் எண்ணிக் கொண்டுள்ளனர் என்று நான் கூறினேன். அதற்கு இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் உரைத்தது உண்மையாகும். ஹஜ் கிரியைகளை செய்யுமாறு இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு ஏவப்பட்ட போது அவற்றை நிறைவேற்றும் வழியில் ஷைத்தான் குறுக்கிட்டான்; அவரை முந்திச் சென்றான். இப்ராஹீமும் அவனை முந்திச் சென்றார். பின்னர் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவரை ஜம்ரத்துல் அகபாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கும் ஷைத்தான் அவருக்கு குறுக்கீடு செய்தான். ஏழு கற்கள் எறிந்து அவனை விரட்டினார்கள். பின்னர், ஜம்ரத்துல் வுஸ்தாவிலும் ஷைத்தான் அவருக்கு குறுக்கீடு செய்ய ஏழு கற்கள் எறிந்தார்கள். அபூ துபைல் கூறுகின்றார் இஸ்மாயீலை அறுத்துப் பலியிட அவர் முகக்குப்புற கிடத்திய போது-யூனூஸ் கூறுகின்றார், பின் அவர் இஸ்மாயீலை அறுத்துப் பலியிட முகக்குப்புற கிடத்தினார் (இஸ்மாயீல் அப்பொழுது வெள்ளை நிற ஆடை அணிந்திருந்தார்.) அப்பொழுது இஸ்மாயீல்: "என் அன்புத் தந்தையே என்னை கபனிடுவதற்கு இது தவிர்ந்த வேறு ஆடை எதுவும் இல்லை. என்னை கபனிடுவதற்காக இந்த ஆடையை களையுங்கள்" என்று கூறினார். ஆடையைக் களைய முற்பட்ட போது, "இப்றாஹீம் நிச்சயமாக நீர் உமது கனவை உண்மையாக்கி விட்டீர்'' என அவர் பின்னாலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டது (அஸ்ஸஃப்பாத்) இப்றாஹீம் உடனே திரும்பிப் பார்த்தார். கொம்பு உள்ள வெள்ளை நிற ஆடொன்றை அவர் அங்கு கண்டார். (ஸஹீஹ் முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்: 2707ஆவது ஹதீஸ்)

ஹஜ்ஜில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் புரிந்த செயல்கள், அவை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களால் செய்யப்பட்டன என உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் கூட அவற்றில் சில பின்பற்றப்பட வேண்டிய வணக்கமாக அமைந்த சுன்னா என்றும் சுன்னாவாக அமையாதவை என்றும் இந்த சமூகத்தின் அறிவு மேதை இப்னு அப்பாஸ் பகுத்து நோக்குவதை நாம் தெளிவாகக் கண்டோம்.



# ரமழான் நோன்பின் சிறப்புக்கள்

ரமழானில் அல்லாஹ்வுக்காக, அவனது கூலியை நாடி, உள்ளச்சத்துடன் நோன்பு வைத்தவரின் முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவ்விரவுகளில் தொழுதவரின் முந்திய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அம் மாதத்தின் சிறப்பான லைலத்துல் கத்ர் இரவை பெற்றவரின் முந்திய பாவங்கள் மன்னிக்கப் படுகின்றன என நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நவின்றார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) நூற்கள்,புகாரி, முஸ்லிம்

### நோன்பாளி செய்யக் கூடாதவை

எவன் பொய்யான சொற்களையும் தீய நடத்தையையும் விட வில்லையோ அவன் உண்ணாமல் பருகாமல் இருப்பதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை. என நபிவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), நூல்: புகாரி

நீங்கள் நோன்பு வைத்திருக்கையில் கெட்ட பேச்சுக்கள் பேசுவதோ கூச்சலிடுவதோ கூடாது. உங்களை யாரேனும் ஏசினால், அல்லது உங்களுடன் சண்டையிட முற்பட்டால் நான் நோன்பாளி என்று கூறி விடவும் என நபியவர்கள் சொன்னார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: புகாரி, முஸ்லிம்.

### நோன்பின் தற்காலிக சலுகைகள்

நீங்கள் பயணத்திலோ நோய்வாய்ப்பட்டவர்களாகவோ இருந்தால் வேறொரு நாளில் அதனை நோற்க வேண்டும். (அல்குர்ஆன்:2:185)

எங்களுக்கு மாதவிடாய் ஏற்படுகையில் (விடுபட்ட) நோன்பை வேறு நாட்களில் நோற்கும்படியும் அதே காலத்தில் விடுபட்ட தொழுகையை வேறு நாட்களில் நிறைவேற்ற கூடாது என்றும் உத்திரவிடப்பட்டிருந்தது. அறிவிப்பவர்: அன்னை ஆயிஸா (ரழி), நூல்:முஸ்லிம்

அல்லாஹ்வின் தூதரே! பயணத்தில் இருக்கும் போது நோன்பு நோற்க எனக்கு சக்தி உள்ளது. அப்போது நோன்பு நோற்பது என்மீது குற்றமாகுமா? என்று நான் கேட்ட போது, நபிவர்கள் இது அல்லாஹ் வழங்கிய சலுகையாகும். எவன் இந்தச் சலுகையைப் பயன்படுத்துகின்றானோ, அது நல்லதுதான். நோன்பு நோற்க எவரேனும் விரும்பினால் அதில் குற்றம் ஏதும் இல்லை. அறிவிப்பவர்: ஹம்ஸா இப்னு அம்ரு (ரழி) நூல்: முஸ்லிம்

### நேன்பாளிக்கு அனுமதிக்கப்பட்டவை

நபியவர்கள் நோன்பு நோற்றிருக்கும் போது பலமுறை பல் துலக்கிக் கொண்டிருக்க நான் கண்டுள்ளேன். அறிவிப்பவர்: ஆபிர் இப்னு ரபிஆ (ரழி) நூல்:அபூதாவூத், திர்மிதீ

நபியவர்கள் நோன்பு நோற்றிருந்த போது தாகத்தின் காரணமாகவோ அல்லது கடும் வெப்பத்தினாலோ தங்கள் தலைமீது தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்ததை அர்ஜ் என்ற இடத்தில் வைத்து நான் பார்த்தேன். அறிவிப்பவர்: மாலிக் (ரழி) நூல்:அபூதாவூத்

நோன்பு நோற்றிருப்பவர் தான் நோன்பாளி என்பதை மறந்த நிலையில் உண்ணவோ பருகவோ செய்து விட்டால் (நோன்பு முறிந்து விட்டது என்று எண்ண வேண்டாம்) மாறாக, அந்த நோன்பையே முழுமைப்படுத்தட்டும். ஏனெனில், அவனை அல்லாஹ் உண்ணவும் பருகவும் செய்திருக்கின்றான்.. அறிவிப்பவர்: அபூஹுரைரா, நூற்கள்,புகாரி, முஸ்லிம்

### சஹர் செய்தல்

நீங்கள் சஹர் செய்யுங்கள். ஏனெனில், அதில் (அபிவிருத்தி) பரகத் உண்டு. அறிவிப்பவர்: அனஸ் (ரழி) நூற்கள்: புகாரி, முஸ்லிம்

ஒரு ரமழானில் சஹர் உண்ண என்னை நபிவர்கள் அழைத்தார்கள். பரகத் நிறைந்த உணவு உண்ண வாரும் என்று அப்போது கூறினார்கள். நூல்: அபூதாவூத், நஸாயீ


நாங்கள் நபிவர்களுடன் சஹர் உணவு உண்டோம். அதன் பிறகு பஜ்ரு தொழுகைக்கு நின்றோம். ஸஹர் உணவு உண்டதற்கும் பஜ்ரு தொழுகைக்கும் இடையில் எவ்வளவு நேரமிருந்தது என நான் வினவினேன். அதற்கு அவர் திருக்குர்ஆனின் ஐம்பது வசனங்கள் ஓதுகின்ற அளவு இடைவெளி இருந்தது என விடை பகர்ந்தார்கள். அறிவிப்பவர்: ஜைது பின் தாபித் (ரழி) நூற்கள்: புஹாரி, முஸ்லிம்

### நோன்பு திறப்பது

அல்லாஹ் கூறுவதாக நபியவர்கள் கூறினார்கள். நோன்பு திறப்பதில் கால தாமதம் செய்யாதவர்கள் தான் எனக்கு விருப்பமான அடியார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி) நூற்கள்: அபூதாவூத், இப்னு மாஜா


நீங்கள் நோன்பு திறக்கும் போது பேரீத்தம் பழத்தின் மூலம் நோன்பு திறங்கள். அது கிடைக்காவிட்டால் தண்ணீர் மூலம் நோன்பு திறங்கள். என்று நபியவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரழி) நூற்கள்: திர்மிதீ, அபூதாவூத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கிய தேசம்

▲ தொகுப்பு: எஸ். பாமிஸா அலி ▲



# ரமழான் கால உணவுப் பழக்கம்

## அமைய வேண்டியது எவ்வாறு?

ரமழான் ஒரு மனிதனின் ஆன்மிகத்தை நெறிப்படுத்தி அவனது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதைப் போலவே அவனின் உடல் ஆரோக்கியத்தையும் சீர்படுத்துகின்றது. என்றாலும், துரதிஷ்டவசமாக எமது ரமழானோ ஆரோக்கியத்திற்கு எதிர்மறையான விளைவுகளையே எம்மிடம் ஏற்படுத்துகின்றது. நாம் நோன்பில் கைக்கொள்கின்ற உணவுப் பழக்கங்களே இதற்குக் காரணமாகும்.

இன்று மனித இறப்பு வீதத்தில் அதிகம் தாக்கம் செலுத்தும் தொற்றாத நோய்களான அதிகரித்த கொழுப்பு (Cholesterol), நீரிழிவு (Diabetic) மற்றும் உயர் குருதி அழுக்கம் (High pressure) என்பன எமது தவறான உணவுப் பழக்கத்தாலும் அசைவின்றிய ஆடம்பர வாழ்க்கை முறையாலுமே ஏற்படுகின்றன. பொதுவாக, ஏனைய காலங்களை விட ரமழானில் இத்தகைய நோய்களின் பாதிப்பு அதிகரிப்பதை அவதானிக்கலாம். இதற்கான காரணம், ரமழான் காலத்தில் நாம் அறியாமலேயே எமது உணவுப் பழக்கத்தில் பல தவறுகளை விட்டு விடுவதே. உண்மையில், ரமழான் இத்தகைய நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய மாதமாகும். இவ்வகையான நோய்களை உடையவர்கள் ரமழானில் தமது உணவுப் பழக்கத்தை சீரமைத்துக் கொள்வார்கள் எனில், ரமழானின் முடிவில் அவர்கள் ஒரு சுகதேகியாக மாறலாம். அந்த வகையில், ரமழானில் எமது உணவுப் பழக்கத்தில் பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்வது அவசியமாகும்.

ரமழான் காலத்தில் எமது பிரதான உணவு வேளைகள் இரண்டாகும். ஒன்று, ஸஹர் உணவு வேளை. அடுத்தது, நோன்பு திறக்கு (இப்தார்)வேளை. நோயாளிகள், சிறுவர்கள், பலவீனமானவர்கள் மாத்திரம் மூன்றாவது வேளையாக இரவுணவை உட்கொள்வர்.

### ஸஹர் உணவு

ஸஹர் உணவை வழமையாக உட்கொள்ளும் பிரதான உணவின் அளவை விட குறைந்ததாகவும் சமிபாடடைய நீண்ட நேரம் எடுக்கக் கூடிய உணவாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

ஸஹர் நேரத்தில் அதிகளவான உணவை உட்கொள்ளும் போது அது சமிபாடடைவதற்கு அதிகளவு சக்தி தேவைப்படுகிறது. இதனால், எமது உடல் அதிகளவான சக்தியை விரைவில் இழக்க நேரிடுகிறது. (நோன்பில் உடல்) சோர்வடைவதையும் துரிதப்படுத்தும்.

அதிகளவு உணவை உட்கொள்வதால் இரைப்பைச் சாறு அளவில் சுரந்து விரைவில் பசியை உணர வழிவகுக்கும்.

சிவப்பரிசிச் சோறு, நார்த்தன்மையுள்ள கறிகள் என்பவற்றை ஸஹர் பொழுதில் உட்கொள்வது சிறந்தது. கிழங்கு வகை தவிர்ந்த ஏனைய மரக்கறி வகைகளில் அதிகளவு நார்த்தன்மை காணப்படுகின்றது. இவை நீண்ட நேரத்திற்கு சமிபாடடையக் கூடிய உணவுகளாகும். இவற்றை உட்கொள்வதன் மூலம் பசியுணர்வு குறைவடைவதோடு உடல் சோர்வடையும் வீதமும் குறைவடைகின்றது.

கொழுப்பு, எண்ணெய், உப்பு, உறைப்பு போன்ற உணவுவகைகளை முற்றாக தவிர்ந்து கொள்ள வேண்டும். இவை பகலில் தாகத்தையும் வயிற்றெரிவையும் ஏற்படுத்தக் கூடியவை.

### இப்தார் உணவு

நபிகளாரின் நடைமுறையைப் பின்பற்றி பேரீத்தம் பழம், நீர் என்பவற்றைக் கொண்டு நோன்பைத் திறப்பது மிக சிறப்பானதாகும். நீர் ஆகாரங்கள், பழச்சாறு, மூலிகைப் பானங்கள் என்பவற்றையும் இப்தாரில் சேர்த்துக் கொள்ளலாம்.

நோன்பு திறக்கும் போது அதிக இனிப்புடைய உணவுகளையோ, பானங்களையோ அருந்துவது உடல் நலத்திற்குக் கேடானதாகும். இதனால் உடற் குருதியின் குளுக்கோசு மட்டம் சடுதியாக அதிகரிக்கின்றது. இது எமது உடலில் பல விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடியது. தலைச்சுற்று, தலைவலி, மயக்கம் போன்ற அடிப்படை விளைவுகளில் தொடங்கி கோமா எனும் ஆள் மயக்கம் வரை கொண்டு சேர்க்கலாம்.

கஞ்சி, சூப் போன்றவை அதிகளவு கொழுப்பற்றதாகவும் மீதமான தேங்காய்ப் பால் சேர்க்கப்படாததாகவும் நீர்த் தன்மை கொண்டதாகவும் அமையும் போது மட்டுமே அது ஆரோக்கியமானதாக அமையும்.

நோன்பு திறக்கும் போது பால் அருந்துவதும் சிறப்பானது. ஏனெனில், இது குருதியில் உடனடியாக குளுக்கோசு அதிகரிப்பதைத் தாமதப்படுத்துகின்றது.

அதிக எண்ணெய் கொண்ட துரித உணவு வகைகளை இப்தாரில் சேர்த்துக் கொள்வதால் வயிற்றெரிவு, நெஞ்செரிவு போன்ற உடனடி விளைவுகளும் குருதியில் கொலஸ்ட்ரோல் அதிகரித்தல் போன்ற நீண்டகால விளைவுகளும் ஏற்படுகின்றன.

பழங்கள், மரக்கறிகள் போன்றவை நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமையும். இவைகளை எமது பிரதேசங்களில் விளைகின்றவற்றைக் கொண்டு தெரிவு செய்து கொள்ள முடியும்.

### இப்தாருக்கும் ஸஹருக்கும் இடைப்பட்ட நேரம்

இந்நேரத்தில் அதிகமாக நீர் அருந்த வேண்டும். மேலும், அதிக நீர்த் தன்மையுள்ள பழங்கள், மரக்கறிகளை சாப்பிடலாம். (புட்டு வெள்ளரி, பூசணிக்காய், பிபிஞ்சா) பொன்னவரை, வில்வம் பூ, பச்சைத் தேங்காய் பூக்கீரை போன்ற மூலிகைப் பானங்களை அருந்துவதும் ஆரோக்கியமானது.

பகலில் உடலிலிருந்து இழக்கப்படும் நீரை இவ்வாறு இரவில் ஈடு செய்யா விட்டால் உடற் சோர்வு, தலைவலி, மலச் சிக்கல், சிறுநீர் அழற்சி, மாதவிடாய்ச் சக்கரத்தில் மாற்றம் போன்ற விளைவுகள் ஏற்படலாம்.

மேற்சொன்ன வழிகாட்டல்களின் பிரகாரம் எமது ரமழான் கால உணவுப் பழக்கங்களை அமைத்துக் கொள்வோமாயின் ரமழான் காலத்தின் முடிவில் ஆரோக்கியமும் பலமும் கொண்டவர்களாக மாறலாம். ■

## விரிசலுக்கு வித்திடும்... (05ஆம் பக்க தொடர்)

கூறப்படுகின்றது. 13இன் அதிகாரங்கள் பாதிக்கப்பட்டால் மீண்டும் நாட்டில் இரத்தக்களரி ஓடுவதைத் தடுக்க முடியாது என்று அமைச்சர் டியூ. குணசேகர கூறும் போது, இன்றைய அமைப்பில் வட மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் இலங்கையின் ஆறுகளின் தண்ணீர் கூட பிரச்சினையாகி விடும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன பத்திரிகையாளர் மாநாட்டில் எத்தி வைத்துள்ளார். அவர் ஐக்கிய மக்கள் முன்னணியின் கருத்தாக அதனை முன் வைத்துள்ளார். மாகாண சபை முறை எவ்விதப் பயனுமற்ற வெள்ளை யானை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகப் பொறுப்பாளர்களின் சந்திப்பின் போது மாகாண சபை முறை அறவே பயனற்றது என்று கூற முடியாது என்றும் அது நல்ல பல விளைவுகளைத் தந்துள்ளதாகவும் கூறியுள்ளார். இப்போது முன்னெடுக்கப்படும் யாப்புத் திருத்தம் மக்களது ஏகோபித்த கருத்தல்ல என்று அமைச்சர் ரெஜினோல் குரே கூறியுள்ளார். பல அமைச்சர்கள் நாட்டில் பொதுஜன வாக்கெடுப்பு மூலம் மாகாண சபையின் எதிர்காலம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ள நிலையில், கலாநிதி தயான் ஜயதிலக்க சிங்கள மக்களிடையே வாக்கெடுப்பு நடத்தி தமிழ் மக்களுக்கான தோல்வியைத் தீர்மானிக்க முடியாது. எனினும், வடக்கு, கிழக்கில் ஒப்பங்கோடல் நடத்தியே அது தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே சோபித்த தேரர் ஒரு யாப்பு முன்மொழிவை முன்வைத்துள்ள நிலையில் ஐ.தே.க. யும் ஒரு யாப்புச் சீர்திருத்த முன்மொழிவைக் கொண்டு வந்துள்ளது. இதன் பிரதிகள் பல்வேறு கட்சிகளுக்கும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வேறு கட்சிகளுடன் கருத்துப் பரிமாறிக் கொள்வது ஒரு சிறந்த முன்னுதாரனமாகவே கருதப்படுகிறது. ஆயினும், நிகழ்காலப் பிரச்சினைக்குத் தீர்வாக இவ்வரசியல் யாப்புகளிலும் விடயங்கள் முன்வைக்கப்படவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. ஐ.தே.க. கொண்டு வந்த மாகாண சபை முறையை எதிர்ப்பது அவர்களுக்கு ஒரு பண்பாட்டு ரீதியான பிரச்சினையாகும். ஆனால், அன்று 13ஐ ஆதரித்துப் பேசிய சிலர் இன்று அரசாங்கத்தின் அமைச்சர் அந்தஸ்தில் இருந்து செயற்பட்டு அதனை எதிர்ப்பது சற்று வேடிக்கையாக இருப்பதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பர்னாந்து எழுதியுள்ளார்.

சந்திரிக்கா பண்டாரநாயக்க மேல் மாகாண முதலமைச்சராக இருக்கும் போது 13ஆவது யாப்பில் உள்ளபடி பொலிஸ் அதிகாரத்தை வென்றெடுக்க முயன்ற போது அதற்குப் பக்கபலமாக இருந்த இன்றைய அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்தவும் பீலிக்ஸ் பெரேராவும் இன்று அதனை எதிர்த்துப் பேசுவது பற்றியே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இன்று மாகாண சபையை கறுப்புப் பேயாகக் காட்ட முயலும் சுசில், அன்று முதலமைச்சராக இருந்து அதனை அனுபவித்தார் என்றும் சுட்டிக்காட்ட ஒஸ்டின் பர்னாந்து தவறவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி அமைக்கப்பட்ட மாகாண சபையின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பில் தனது கருத்தைக் கேட்காமை குறித்து இந்தியா அதிருப்தியடைந்துள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச ஹர்தீப் ஸிங் பூரி நியமிக்கப்பட்டுள்ளார். பின்னர் அதனை மாற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்திஷ் அவர்களை கொழும்புக்கு அனுப்ப இந்தியாவின் பிரதமர் அலுவலகம் தீர்மானித்திருப்பதாக அறிய முடிகிறது. சம்பூர் அனல் மின்சார நிலையம் உட்பட்ட பல ஒப்பந்தங்கள் பற்றியும் கலந்துரையாட கொழும்பு வருவதற்கான நிகழ்ச்சி நிரலை இந்தியா கேட்டிருந்தாலும் இந்த கட்டுரை எழுதும் வரை அதற்கான அனுமதி இலங்கையிடம் இருந்து உறுதிப்படுத்தப்படவில்லை என்றே தெரிகிறது. இந்த தாமதத்தால் இந்தியாவின் மனம் உடைந்த நிலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வழமை போலவே 13ஆவது யாப்புத் திருத்தம் தொடர்பில் குழப்பம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. அமைச்சர் மட்டத்தில் கூட வித்தியாசமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசையும் முஸ்லிம் காங்கிரஸையும் தூரமாக்க சதி செய்யப்படுவதாக அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்திருக்கும் போது, வட மேல் மகாண சபையில் யாப்புத் திருத்தத்தை ஆதரித்த மாகாண சபை உறுப்பினர்களின் அங்கத்துவத்தை இடை நிறுத்த அமைச்சர் ஹக்கீம் நடவடிக்கை எடுத்துள்ளார். 13ஆவது திருத்தம் தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பந்தொட்டே ஆணித்தரமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்காமையே இக் குளறுபடிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. 25 வருடங்கள் இந்நாட்டில் அரசோட்சிய மாகாண சபை இன்று ஓர் அரசியல் புயலாக மாறியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புறவியல்

## கிழக்குத் தென்கோடி

ஏ.எம்.எம். ஸியாத் - இறக்காமம்

(சென்ற இதழின் தொடர்)

### உவமைத் தொடர்கள்



சாதாரண உரையாடல்களின் போது, அவற்றை அழகுறச் செய்வதற்கும் கருத்திற்கு வலுச் சேர்ப்பதற்கும் உவமைத் தொடர்கள் கையாளப்படுகின்றன. பேச்சு வழக்குச் சொற்களும் குறித்த பிரதேசத்திற்குரிய உவமைப் பொருட்க இரண்டறக் கலந்து இவ்விதம் பயக்கின்றன. ஒடுகைகள் நச்செனப் பொருள் தரவல் லனவாய்கின்றன. இத்தகைய, நாட்டார் உவமைத் தொட தமிழணங்கை அணிசெய் கலன்களாகும்.

**அவுட்டுட்ட கோழி போல:** கூட்டில் அடைக் கப்பட்ட கோழிகளைத் திறந்து விட்டால் எவ்வாறு சுதந்திரமாக சுற்றித்திரியுமோ அது போல, வீட்டில் தரித்து நில்லாது, கடைத் தெரு அயல் வீடுகளிலேயே பொழுதைக் கழிக்கும் நபர்களைக் குறித்துக் காட்ட இத்தொடர் கையாளப்படுகின்றது.

**இஞ்சி திண்ட குரங்கு போல:** யாதொன்றும் அறியாது, விழித்துக் கொண்டு நிற்பதைப் புலப்ப டுத்துகிறது.

**ஊமக் கெடா போல:** தவறை ஏற்றுக் கொள் ளாமல் மௌனமாக இருப்பவரை இவ்வுவமைத் தொடரால் அழைப்பர்.

**ஓலப் பெட்டி வாய் போல:** ஓலைப் பெட்டி யின் வாய் அகன்றது. அதனைக் கவிழ்த்துக் கொட் டும் போது, உள்ளிருக்கும் தானியம் முழுவதும் கொட்டப்பட்டு விடும். அது போல, மனதுக்குள் எதனையும் வைத்திராமல் முழுவதையும் வெளியே சொல்லி விடுவது. இரகசியம் பேண முடியாத் தன்மையை இவ்வுவமைத் தொடர் வெளிப்படுத்தி நிற்கின்றது.

**உருட்டி வெச்ச களிமண் போல:** சபை நட வடிக்கைகளிலோ குடும்பம் கூடும் வேளைகளிலோ அவற்றில் ஈடுபாடு காட்டாது ஒதுங்கி மௌனமாக அமர்ந்திருத்தல். இதற்கு இணையாக 'ஊண்டி வெச்ச புட்டுப் போல' எனும் உவமைத் தொடரையும் கையாள்வர்.

**கட்டுல போட்ட நாய் போல:** நாயைக் கட்டிப் போட்டால் சும்மாவே குரைத்துக் கொண்டிருக்கும். அது போல, எப்பொழுதும் வீட்டிலே தங்கியிருக்கும் மூத்தோர்கள் பிறரை நச்செரித்துக் கொண்டே இருப்பர். இதனையே இத்தொடர் புலப்படுத்து கின்றது.

**கடஞ்சி வெச்ச கம்பு போல:** அழகான பெண்ணைக் குறிக்கும் அதேவேளை, பிடிவாத குணத்தையும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாத தன்மையினையும் விளக்க இது உதவுகின்றது. இதற்கு இணையான உவமைத் தொடர்களாக 'கல்லுளி மங்கன் போல', 'மம்மட்டிப் புடி போல' போன்றவற்றையும் பயன்படுத்துவர்.

**கிக்கிலிப் பேய் போல:** வாயாடித் தனத்தை யும் உரக்கப் பேசுவதையும் இது குறிக்கும்.

**கிறுக்குப் புடிச்சவன் போல:** 'கிறுக்கு' என்பது பைத்தியம் என்ற பொருளிலும், கால, இடம் அறியாத தன்மை என்ற பொருளிலும் அமைந்து, அத்தன்மையோரைச் சாடுவதாயிற்று.

**கொரட்ட மீனப் போல:** சேற்றினுள் வாழும் ஒருவகை நன்நீர் மீனை கொரட்ட மீன் என்பர். இதன் மேற்பரப்பு கருமை சார்ந்ததாக காணப்ப டும். இது கறுப்பானவர்களையே குறிக்கின்றது.

**கொடிப்பட்டுப் போல:** மெல்லிய இடை யினைக் கொண்ட அழகிய பெண்ணை இந்த உவமையால் வர்ணித்துக் கூறுவர்.

**கொசவண்ட வாடி போல:** குயவனின் குடிசையில் சுடப்பட்ட பாத்திரம், பசுமையான பாத்திரம், களி, வைக்கோல், உலர்ந்த பாத்திரம் எனப் பலதும் பல இடங்களில் பரப்பப்பட்டுக் கிடப்பது போல, வீட்டிலுள்ள பொருட்கள் ஒழுங்கு முறையின்றி கிடப்பின் இவ்வுவமைத் தொடர் மூலம் தூற்றுவர்.

**சுவரில் ஒட்டின பல்லி போல:** எந்த நேரமும் பெற்றோருக்குப் பின்னால் திரியும் பிள்ளை களுக்கு இவ்வுவமைத் தொடரைக் கூறி எள்ளுவர்.

**சூப்பின பனங்கொட்ட போல:** எண்ணை யிட்டுச்சீவப்படாத தலைமுடியாகும். நேர்த்தியற்ற மனிதர்களையும் இவ்வாறு அழைப்பதுண்டு.

**தொரட்டிக் கப்பு போல:** நெடுநெடுவென வளர்ந்தவர்களை குறிப்பதாக அமைகின்றது.

**நாயும் கழிச்சட்டியும் போல:** எந்த நேரமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நட்பினரைக் குறிக்க இவ்வுவமை கூறப்படுகின்றது. பரஸ்பரமற்ற கணவன்- மனைவியருக்கும் இதனையே கூறுகின்றனர். இதற்கு இணையாக 'நாயும் எலும்புக் கட்டியும் போல' என்ற உவமைத் தொடரும் பயன்படுத்தப்படுகின்றது. (மீதி அடுத்த இதழில்)

## சிறு குறிப்பு



| | |
|---|---|
| நூலின் பெயர் | : மனித வாழ்க்கைப் பயணம் |
| ஆசிரியர் | : முஸ்தபா இன்ஸாப் |
| வெளியீடு | : சிறுவர் இஸ்லாமிய கல்வி நிலையம், இறக்காமம் |
| முகவரி | : 88/A, அமீர் அலிபுரம், இறக்காமம்-05 |
| தொ.பே.இல | : 0752350069 |
| விலை | : 160 ரூபா |

இறப்பு வரையிலான ஒவ்வொரு கட்டத்திலும் அம்மனிதன் இறைவனுக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடனைப் பற்றி இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

"கருவின் படி நிலைகளில் முதலில் உருவாவது செவிப் புலனாகும். 24வது வாரத்தின் பின்னர் குழந்தை ஒலியைக் கேட்கத் தொடங்குகிறது. இதைத் தொடர்ந்து பார்வைப் புலனையும் 28வது வாரத்தின் பின்னர் கண்ணின் விழித்திரை வெளிச்சத்தையும் உணர்கிறது."

'ஆலமுல் அர்வாஹ்' வில் உயிராக்கப்பட்டு தாயின் கருவறையில் அச்சதைப்பிண்டம் பல கட்டங்க ளையும் தாண்டிய நிலையில் பிறப்பிக்கப்படு கிறது. எனவே, ஒரு மனிதன் பிறந்தது முதல் அவன் வளர்ந்து, பல பருவங்களையும் கடந்து அவனின் இறப்பு வரையிலான ஒவ்வொரு கட்டத்திலும் அம்மனிதன் இறைவனுக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடனைப் பற்றி இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

"அந்தக் கஷ்டமான நேரத்தில் இந்த வார்த் தையை (லாயிலாக இல்லல்லாஹ்) சொல்வதற்கு எந்த மனிதனாலும் முடியாது, தூய்மையாக நடந்தவனைத் தவிர. இவ்வுலகில் தூய்மையாக நடக்காதவனுக்கு ஏற்படும் வேதனையில் 'லாயிலாக இல்லல்லாஹ்'வை மொழிவதற்கு அந்நேரத்தில் சிந்தனை வராது" என்கிறார் ஆசிரியர்.

இம்மை-மறுமை வாழ்வு குறித்த கருப்பொரு ளைக் கொண்டதான, முழுக்க முழுக்க குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் ஆதாரங்களாகக் காட்டி நிற்பது இந்நூலின் சிறப்பம்சமாகும்.

-லாீப் சுலைமான்



# நினைவுகளில் தொங்கும் நீர் ஊஞ்சல்

-ஒட்டமாவடி அறபாத்- தொடர்— 42

ஹிறாரியில் வசித்து வந்த திருகோணமலை நண்பர் பாரிஸ் பொருளாதார உத வியை பத்திரிகைக்காக செய்து வந்தார். நான் சில நேரங்களில் பத்திரிகை வேலைகள் அதிகம் இருந்தால் மிலேனியம் புத்தக நிலையத்தின் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொள்வேன். அதிகாலை மீண்டும் பம்பலப்பிட்டியிலிருந்து பொரல்லைக்கு வந்து அலுவலகப் பணிகளில் மூழ்கிவிடுவேன். ஒரு சோற்றுப் பார்சலை இரண்டு பேர் அல்லது மூன்று பேரும் சாப்பிட்டு விட்டு வேலைகளைக் கவனித்திருக்கின்றோம்.

ஒரு கப் டீ குடிக்க வேண்டும் போல் தோன்றும், அவ்வளவு அயர்ச்சி. நள்ளிரவில் பம்பலப்பிட்டியில் டீ வாங்க கடைகள் இருக்காது. இருந்தாலும் கிழக்கு மாகாண முகத் துடன் வீதியில் சுற்றித் திரிய ஓர்மம் வேண்டுமே! டீ போட்டுக் குடிக்கவும் நேரம் இருக்காது.

வெறும் தண்ணீரை மட்டும் அருந்திக் கொண்டு நள்ளிரவு வரை முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு உழைத்தவர்களிடம் சமூக உணர்வு தவிர வேறொன்று இருப்பதாக எனக் குத் தெரியவில்லை.

முஸ்லிம் குரல் பத்தரிகை எதிர்பார்த்த எழுச்சி அலையை மக்களிடையே தோற்று வித்தது. வெள்ளிக்கிழமைகளில் பள்ளிகள் தோறும் விற்பனை செய்வதென்ற கொள் கைக்கு ஏற்ப அனைவரும் உழைத்தோம்.

கட்டுரைகளில் உள்ள ஒரு வார்த்தை அல்லது வசனத்தைக் கூட பல கோணங் களில் விவாதித்து சேர்ப்பதா நீக்குவதா என்பதில் கூட அவதானமாக செயற்பட்டோம். ஒரு வசனத்தின் சரியான புரிதலுக்காக ஒரு மணி நேரம் கூட விவாதித்திருக்கிறோம்.

உதாரணமாக, வடகிழக்கு என்று இணைத்து எழுதுவதைக் கூட நண்பர் பவ்சர் விரும்பமாட்டர். வடக்கு–கிழக்கு என்று பிரித்தே எழுதி வருவார். முஸ்லிம் தனித்துவ அர சியல், கலை, கலாசார சொற்களை கையாள்வதில் மற்றவர்களுக்குப் பிடி கொடுக்காமல் பதிவு செய்வதில் நாங்கள் மிகக் கவனமாக செயற்பட்டோம்.

சில சமூக ஆர்வலர்கள் பத்திரிகை விற்ற பணத்தை திருப்பிச் செலுத்தாமலேயே காலத்தைத் தள்ளி முஸ்லிம் குரலின் கழுத்தை நெரித்துக் கொன்று விட்டனர்.

பஸ் பிடித்துக் கொண்டு ஊர் ஊராய்ப் போய் கடன் வசூல் பண்ண வேண்டிய நிலை. ஒரு பத்திரிகை நடத்துவதன் சிரமத்தையும் எதிர்கொள்ளும் சவாலையும் முஸ்லிம் குரல் விடயத்தில் அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டேன். புலிகளின் அச்சுறுத்தல்கள் தலை நகரில் உச்சத்தில் இருந்த காலத்தில்தான் முஸ்லிம் குரலை தைரியமாக வெளியிட்டு வந்தோம். அக்காலத்தில் பத்திரிகையின் தொடர்புகளுக்கு ஒரு தொலைபேசி இலக்கம் தேவைப்பட்டது. மற்றவர்கள் தயங்கிய தருணத்தில் என்னுடைய குரல் ஓர்மமாக ஒலித் தது. ஈற்றில் என்னுடைய தொலைபேசி இலக்கத்தைத்தான் பத்திரிகையில் போட்டோம்.

பத்திரிகை நின்ற பின்னும் மிரட்டல்கள் ஓயவில்லை. சில காலம் அந்த தொலை பேசியைத் துண்டித்து விட்டு ஒரு வருடத்திற்குப் பின் இணைப்பில் வந்தேன். ஒரு வருடத் திற்குப் பின் நண்பர் பவ்சரின் புத்தக நிலையத்தை மூடிவிட பத்திரிகை காரியாலயம் மருதானை ஆனந்தக் கல்லூரிக்குப் பின்னாலுள்ள மாளிகா கந்தை வீதிக்கு மாற் றப்பட்டது. ஆனந்தக் கல்லூரியின் வெளி விளையாட்டு மைதானம் அலுவலகத்திற்கு முன் காணப்பட்டது. பிற்காலத்தில் பாழடைந்த பத்திரிகை காரியாலத்தை ஏக்கத்துடன் பார்த்தபடி அந்த மைதானத்தில் ஒரு வருடமாக தினமும் வாக்கிங் போவேன். தற்போது அல்குத்ஸ் சர்வதேசப் பாடசாலை இயங்கும் கட்டடம். இவை மிக முக்கியமான பதிவுகள் என்பதால் சொல்ல வேண்டிய தேவை உள்ளது.

முஸ்லிம்களின் தனித்துவ ஊடகத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேசப்படும் இத்தருணத்தில் அதனை வளர விடாமல் முளையிலேயே கிள்ளி எறிந்த பெருமைக் குரியவர்கள் சில பத்திரிகை ஏஜென்டுகள் என்பது கசப்பான யதார்த்தமாகும்.

இஸ்லாம், சமூகப் பணி என்று தத்துவம் பேசும் இப்படியானவர்களை நிற்பாட்டி வைத்து கன்னத்தில் அறைந்தாலும் அடிக்கின்ற நமது கைகள்தான் தீட்டுப்படும். இத் தகைய சமூகத் துரோகிகள் இன்றும் வாயைப் பிளந்து கொண்டு சமூகத்தைப் பற்றி அக் கரையுடன் பேசிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

உண்மையில், இயக்கம் அல்லது கொள்கை சார் பத்திரிகைகளின் படுகொலைக்கு பின்புலமாக இருப்பவர்கள் அந்த இயக்கத்தின் பற்றுறுதி கொண்டவர்கள் என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் நபர்கள்தான். இவர்கள்தான் இயக்கத்தின் அல்லது கொள்கையின் வளர்ச்சிக்குத் தடையாக நிற்கும் அல்லது தோல்விக்கு துணைபோகும் நம்பிக்கைத் துரோகிகள்.

நண்பர் பவ்சர் பிற்காலத்தில் ஊர் ஊராக பத்திரிகை ஏஜென்டுகளைத் தேடி அலைந்திருக்கின்றார். அவரின் பெரும்பாலான பொருளாதாரத்தையும் நேரத்தையும் இந்த முஸ்லிம் குரல் விழுங்கியிருக்கின்றது. அவரைப் போல பலரின் கனவுகளையும் இந்த ஏஜென்டுகளும் கொள்கைவாதிகளும் ஏப்பமிட்டுள்ளார்கள். அவர்களின் வயிறு களில் முஸ்லிம் சமூகத்தின் தீ சம்பந்தமில்லாமல் எரிந்து கொண்டிருக்கின்றது. ஒரு சமூகத்தின் ஊடகத்தின் இறப்புக்கு காரணமான இவர்கள் நிம்மதியாக வாழ்தல் என்பது சாத்தியமற்ற செயல். நிச்சயம் அவர்களின் மனசாட்சி அவர்களைக் குதறிக் குதறிக் கொல் லும்; கொல்ல வேண்டும்!

ஊஞ்ஞல் இன்னும் ஆடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழானில் ஒரு பகலுணவு



**அஷ்ரஃப் சிஹாப்தீன்**

ஹிஜ்ரி 1417 கி.பி. 1996ம் ஆண்டு

நான் எதிர்பார்த்த மாதிரியே அந்தக் கடை அமைந்திருந்தது. தெருவில் வாகனத்தில் சற்றுத் தரித்து நன்றாக நோட்டம் விட்ட பின்னரே கடைக்குள் நுழைந்திருந்தேன்.

ஒரு சிறிய ஹோட்டல் அது. ஏழு அல்லது எட்டு டொபி போத்தல்களுக்கு நடுவில் கல்லாவில் அமர்ந்திருந்த உரிமையாளர் நிச்சயமாக பெரும்பான்மை இனத்தவர்தான் என்பது உறுதியானது. அந்தக் கடைக்குள் நான்கே நான்கு மேசைகள் மாத்திரம் இருந்தன. அதற்கு மேல் அங்கு இடம் இல்லை. அதில் ஒரு மேசை மூலையில் இரண்டு சுவர்களை அண்டிப் போடப்பட்டிருந்தது. தெருவுக்கு அல்லது கடை முகப்புக்கு முகம் காட்டாமல் அதில் அமர்ந்து கொண்டேன்.

கடையைச் சுற்றிப் பார்வையைச் செலுத்தினேன். சுவரில் பொருத்தப்பட்டிருந்த நீர்க் குழாயடியில் சுவரிலும் சுற்றிலும் பரவியிருந்த அழுக்கு, கடை உரிமையாளரைக் கைது செய்யப் போதுமானது. ஏனைய மூன்று மேசைகளிலும் கொத்தாக ஈக்கள் பறந்து கொண்டிருந்தன. நான் அமர்ந்திருந்த மேசைக்கு மேல் சில ஈக்கள் பறந்தன. அவற்றை நான் விரட்டினேன். சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கு வருவதில்லையோ என்ற கேள்வி மனதுக்குள் எழுந்தது. வந்தால் கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கும் இரண்டாவது தினம் மீண்டும் பொரித்த ஒரு கோழியை உரிமையாளர் சுற்றிக் கொடுத்து விடுவார். அதை அவர்கள் குடும்பத்துடன் சாப்பிட்டு விட்டுச் சந்தோசமாக இருந்து விடுவார்கள் என்று எண்ணினேன்.

வெயிட்டர் பையன் வந்து,

"என்ன வேண்டும்?"

என்று பெரும்பான்மை மொழியில் கேட்டான்.

"சோறு" என்று நானும் பெரும்பான்மை மொழியிலேயே பதில் சொன்னேன்.

சோறு கறிகளை வைத்து விட்டு அவன் நகர, நான் சாப்பிட ஆரம்பித்தேன்.

கடைக்குள் வேறு யாரும் கிடையாது. சாப்பிட்டு முடிப்பதற்குள் மூன்று, நான்கு முறை வேறு என்ன வேண்டும் என்று கேட்டுக் கேட்டு அவன் அருகில் வந்தான். அவன் அப்படி அருகில் வருவது எனக்கு ஒரு அசௌகரியத்தை ஏற்படுத்தியது. இதற்கிடையில் கடையின் முகப்புப் பகுதியை இரண்டு, மூன்று முறை திரும்பிப் பார்த்துக் கொண்டேன்.

தெருவில் கடையைத் தாண்டிச் செல்லும் யாராவது ஒரு முஸ்லிம் நபர் என்னைப் பார்த்துவிடக் கூடாது என்ற ஒரு பயம்தான் அதற்குக் காரணம். ஏனென்றால் அன்று ரமழான் நோன்பின் பதின்மூன்றாவது தினம். நான் அன்று நோன்பு நோற்காத நிலையில் ஒரு பெரும்பான்மைக் கடையில் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

நான் ஒரு தொலைக்காட்சிச் செய்திய றிவிப்பாளன். வானொலி அறிவிப்பாளன். கவிதை எழுதுபவன். பலருக்கும் அறிமுகமானவன். எனக்குத் தெரியாத பலர் என்னையறிவார்கள். தெருவில் நடந்து போனால் ஆகக் குறைந்தது இருவராவது புன்னகைப்பார்கள். தாமதித்து நிற்கும் இடத்தில் யாரோ ஒருவர்,

"நீங்கள் இன்னார்தானே"

என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வதுமுண்டு. சிலர் அதே இடத்தில் கண்ணுக்குத் தெரியாத இரத்தம் ஆறாகப் பெருக அறுக்க ஆரம்பித்து விடுவதுமுண்டு.

இவ்வாறான ஒரு நிலைமையில் ரமழானில் பகல் சாப்பாடு உண்ணும் என்னைக் கண்டால் என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்?

"ஹாஜி... என்ன இது.. நோம்பு நாள்ள... ஃபுள் வெட்டு வெட்டுறீங்க..?"

"இன்டைக்கி நோம்பில்லப்பா..."

"ஏன்?"

"ஏன்?"

"தூக்கம் போயிடுச்சி...."

"என்ன ஹாஜி.... அலாம் வெச்சுக்கிறதில்லயா?"

"ஃபோன்ல வெச்சுக்குவம்... அடிச்சித்தான் இருக்கு... எங்களுக்கு நல்லாத் தூக்கம் போயிருச்சி."

"எனக்கெண்டா ஹாஜி... சரியா மூணரைக்கிக் கண்ணு முழிச்சிக்கும். எழும்பித் தஹஜ்ஜத் தொழுதுட்டு வைஃபை எழுப்புவேன்."

"ஓ.... அப்பிடியா..."

"ச்சே.... ஒரு நோம்ப மிஸ் பண்ணிட்டிங்களே ஹாஜி... இதுக்குப் பொறவு நீங்க ஒரு வேல செய்ங்க... இந்த டேபல் ஒருலோசு இருக்கில்லியா... அத வாங்கி நேரம் செட் பண்ணிட்டுத் தலமாட்டுல வச்சிருங்க... அதுர சத்தத்துல எப்பிடித் தூக்கம் போனாலும் எழுப்பி உட்டுடும்"

'அப்பிடியா... இன்னக்கே வாங்கிரணும்...' என்று நான் பதில் சொல்லவில்லையாயின் நோன்பு திறக்கும் நேரம் வரும் வரைக்கும் எனக்கு அந்த நண்பர் உபதேசம் பண்ண ஆரம்பித்து விடுவார்.

அன்புக்குரிய வாசகர்களே... இந்தக் கலந்துரையாடல் இத்தோடு முடிந்து விடுவதாக நீங்கள் நினைப்பீர்களாயின் அது பெருந் தப்பு. இது ஒரு வேளை ஆண்டாண்டு காலத்துக்கும் எனது வாழ்வின் கறுப்புப் பக்கமாக எழுத்தில்லாமலேயே பதிவு செய்யப்பட்டுப் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

அந்த நண்பர் தனது இன்னொரு நண்பரிடம் அல்லது நண்பர்களிடம் இதை எப்படிச் சொல்வார் என்று நினைக்கிறீர்கள்?

"ஒங்களுக்கு விசயம் தெரியுமா? நேத்து அஷ்ரஃப்சிஹாப்தீன் வசமா மாட்டிக்கிட்டான்.'

"எங்க?"

"நோம்பு புடிக்காம ஒரு சிங்களக் கடைக்குள்ள புள் வெட்டு வெட்டிக்கிட்டிருந்தான். தற்செயலா எட்டிப் பார்த்தா... இவன்! கடைக்குள்ள பூந்துட்டன். ஆள் அப்சட் ஆயிட்டான். ஒத்தருக்கும் சொல்லிராதீங்கண்டு கெஞ்சினான்."

அந்தக் குழாம் எனது முன் செய்த பாவங்கள், பின் செய்த பாவங்கள், இடையில் செய்த பாவங்கள், செய்யப் போகும் பாவங்கள் யாவும் அடியோடு அழியும் வகையில் என்னை அடித்துத் துவைத்துக் கழுவும். இறைவனின் திருச் சன்னிதானத்தில் நான் அவர்களால் பரிசுத்தவானாக மாற அவர்கள் நோன்பைப் பிடித்துக் கொண்டு எனது பாவ மூட்டையைத் தோளில் ஏற்றிக் கொள்வார்கள். ஆனால், துன்யாவில் எனது பெயர் களங்கப்படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

"அஷ்ரஃப் சிஹாப்தீன் நோம்பு புடிக்காம ஹோட்டல்ல திண்டு திரியிறானாம் தெரியுமா?"

'அதுக்கு ஏன் ஹோட்டல்ல தின்னணும். ஊட்டுலேயே தின்னலாமே..."

'பொண்டாட்டி நோம்பாயிருக்கும்... அவ சோறு தர ஏலாண்டு வெரட்டி உட்டிருப்பா.'

'பாரு... இவனுக்கு என்ன கொறை..."

"அதானே... வீடு.... காரு..... தொழில்... எண்டு அல்லாஹ் குடுத்துத்தானேயிருக்கிறான்..."

"இவனுகள்தான் ரேடியோவுல இஸ்லாம் பேசுறானுவள்... கள்ளனுவள்!"

"இவனுகளப் பண்டி வெட்டுற கத்தியால வெட்டணும்...!"

ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் கேள்விப்பட்டதை வைத்துத் தீர்ப்பெழுதும் கடும் நம்பிக்கையாளர்கள் இதைக் கேள்விப்பட்டால் அசிங்கத்தைப் போல் என்னைப் பார்ப்பார்கள். எனது முகத்தில் முழித்தாலும் பாவம் என்று விலகிப் போவார்கள்.

ஐந்து சதம் ஸதக்கா கொடுக்காதவன், ஓர் ஏழைக்கு உதவாதவன், ஒரு நல்ல விடயத்துக்கு ஒத்துழையாதவன், சபை குழப்புபவன், தானே முதல்வனாக இருக்க வேண்டுமென்று முட்டுபவன், வாயைத் திறந்தால் பொய்யே சொல்லிப் பழகியவன், குறைத்து நிறுப்பவன், கலப்படம் செய்பவன், சுயநலத்துக்காக சார்பாகப் பேசுபவன், கள்ளப் பொம்புளை வைத்திருப்பவன், பெருநாளைக்குச் சாராயம் குடிப்பவன், அநியாயத்துக்கெதிராக ஆள்காட்டி விரல் நீட்டாதவன், அடுத்தவனைப் பற்றியே பேசுபவன், சூபித் தோற்றத்தில் வட்டிக்குக் கொடுப்பவன்... எல்லோர் வாய்க்கும் நான் அவலாகி விடுவேன்.

அல்லாஹ் அன்பானவன். கருணையாளன். தெரிந்து செய்த பாவங்களையும் தெரியாமல் செய்த பாவங்களையும் மன்னிப்பவன். தூக்கத்தினால் இழந்த நோன்பு பற்றி அவனுக்குத் தெரியாமலா இருக்கப் போகிறது? அதை அவன் மன்னித்து விடுவான். ஆனால் இவர்கள்தாம் மன்னிக்க மாட்டார்கள்.

முஹம்மதுர் ரசூலுல்லாஹ் கனவில் வந்து,

"இதோ பார்... இஸ்லாத்தை நீதான் காப்பாற்ற வேண்டும்"

என்று அதிகாரம் கொடுத்தது போல் நடந்து கொள்பவர்கள் இருக்கிறார்கள். அதாவது அவர்களுக்கு சுவர்க்கம் வாக்களிக்கப்பட்டதைப் போலவும் ஏனையோர் நரகத்துக்கு ரசீது எழுதியெடுத்துக் கொண்டவர்கள் போலவும் நம்மைப் பார்த்துக் கைசேதப்பட்டுக் கதைப்பார்கள். ஒரு மனிதனின் உடல் நிலை, குடும்ப நிலை போன்ற எதுவுமே பற்றிக் கவலைப் படாமல் பேசுவார்கள்.

'நீங்க பட்டினி நோம்பு புடிக்க இருந்திச்சே ஹாஜி.... முந்த நாள் நான் பட்டினி நோம்பு.. எங்கட சின்னவன்... பத்து வயசுதான் ஆஜி... அவனும் பட்டினி நோம்பு..."

சிலருக்கு அல்லாஹ்விடமிருந்து வஹி இறங்குவது போல் நினைப்பு. குலபாஉர் ராஷிதீன்களுக்குப் பிறகு அதிகாரத்தைத் தாமே வைத்திருப்பதாக ஓர் எண்ணம். அவர்கள் என்ன திருகுதாளம் செய்தாலும் அது மார்க்கத்துக்கு விசுவாசமானது என்பது அவர்களது கணிப்பு. மற்றவன் செய்யும் அல்லது செய்வதாகத் தோன்றும் எல்லாமே தப்புத் தப்பாகவே தெரியும். அதைச் சாடுவதற்கு அல்லாஹ் அவர்களது நாக்கிலேயே திருக்கை வாலைக் கொடுத்திருப்பதாக நினைப்பு.

சாப்பிட்டு முடியும் வரை இந்த அபாயங்கள் எதிலுமே அகப்படாமல் காத்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி கூறியவனாகக் கையைக் கழுவினேன்.

நோன்பு பிடிக்காத தினம் என்பதால் ஏராளமான வெளி வேலைகளைப் பட்டியலிட்டுக் கொண்டு வந்திருந்தேன். ஒவ்வொன்றாகச் செய்து முடித்தபோது பகல் இரண்டு மணியாகி விட்டது. பன்னிரண்டு தினங்கள் ஸஹர் நேரத்துக்குச் சாப்பிட்டுப் பழகியதால் காலை பசியெடுக்கவில்லை. காலையில் தேனீர் அருந்தும் எண்ணம் கூட வரவில்லை. ஒன்றரை மணிக்குக் கடும் பசி வயிற்றைக் கடிக்கத் தொடங்கியிருந்தது.

முஸல்மான்கள் நடமாடாத ஹோட்டல் ஒன்றைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குக் கொழும்பிலிருந்து கல்கிஸ்ஸை வரை வர வேண்டியதாயிற்று. ஹோட்டலுக்கு எதிர்ப் பாதையில் நின்று நோட்டம் விடுவதும் திருப்தியற்று நகர்வதுமாக பதினாறு ஹோட்டல்களைத் தாண்டி வந்து பதினேழாவது ஹோட்டலுக்கு வந்து சேர்ந்திருந்தேன்.

பையன் பில்லைக் கொண்டு வந்து வைத்தான்.

குறித்த தொகையை விடப் பத்து ரூபாயை அவனுக்காகச் சேர்த்து வைத்தேன். யாராவது கண்டு விடுவார்களோ என்ற பயத்துடன் தெருவைக் குறுக்கறுப்பது பற்றி யோசித்துக் கொண்டு கதிரையில் இருந்து எழும்புகையில் வெயிட்டர் பையன் தமிழில் கேட்டான்:

"நாணா... நீங்க அஷ்ரஃப் சிஹாப்தீன்தானே...?"

நன்றி:
விரல்களற்றவனின் பிரார்த்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது மறுமையின் விளை நிலம்!


நீ
ஆகிறாவுக்காக வாழ்கிறாயா?
வெறும் கையுமாய்
சாகிறதற்காக வாழ்கிறாயா?



மவுத்து உன்
பிடரி நரம்பின் பின்னால்...
அடுத்த வினாடி கூட நிச்சயமில்லை!
இப்புவி எப்போதும்
நிரந்தரமென்று கனவு கூட காணாதே
மறுமையின் விளை நிலம் என
ஒப்புவி!

திருமறையின் வழியிலும்
திருநபியின் மொழியிலும்
வாழ்வை ஒட்டிக் கொள்
உனக்காக மலக்குகள்
சுவர்க்க வாசலில் காத்துக்
கிடக்கிறார்கள்
உன் முஃமினான நிலா முகம் பார்த்து
முஸாபஹா செய்து கொள்ள!

-கலைதாசன் ஹக்கீம்-





காஸா
என் தேசம்—நான்
அங்கு பிறக்காவிடினும்

அவர்கள்
என் சகோதரர்கள்—என்
தாய் சுமக்காவிடினும்
உடலல்ல

என் மொத்த உணர்வுகளும்
துடிக்கிறது—என்
உறவுகளின் துயர் கண்டு

ஸபானா சுஹைறுப்
இஸ்லாஹியா வளாகம்




ஈமானிய உயிர்
உளம் பூத்திட
மறுமை நமைப் புசிக்காதிருக்க
இம்மையை நற் களமாக்கிடும்
புனித மாதம்

நரகப் பாதுகாவலனாய்
அல்குர்ஆனை
மருந்தாக்கிடும்
மகத்துவமிக்க மாதம்

தாகித்திருந்தும்
பசித்து, விழித்திருந்தும்
லைலத்துல் கத்ர் இரவின்
தாயக மாதமாய்
நன்மாராயம் பகிர்ந்திடும்
புனித மாதம்

அடியானின் உயர்வுக்கு
அல்லாஹ்வின் மன்னிப்பை
அதிர்ஷ்டமாக்கிடும்
மகத்துவ மாதம்

நற்கூலி எனும்
சத்தியமிக்க குர்ஆனின்
புனிதம் தெளிக்கும்
அல்லாஹ்வின் அழைப்பில்
அடியான் நமைக் காத்திடும்
அழகான மாதம் இந்த ரமழான்...

யாஸீன்பாவா ஹுஸைன்
பொத்துவில்

மாண்புகள் பூத்திடும்
மறை பொருள் காத்திடும்
மாநிலம் ரஹ்மத்தால்
மலர்ந்திடும் ரமழானே!


நோயதை அழித்திடும்
நோக்குடன் பிறந்திட்ட
நோன்புகள் தந்திட
நொடியுடைத்து வந்துவிடு
தூயவனாம் அல்லாஹ்வின்
தூதர் முஹம்மதின்
துடிப்பினால் காத்த மார்க்கம்
துளிர் விட வருகவே!

ஏழைப் பசி உணர்த்தி
ஏற்றங்கள் தந்துவிட்டு
ஏஜமானும் அடிமையும்
எல்லோரும் நிகரென்பாய்
உண்மை கோடி உணர்த்திட
உணர்வில் தியாகத்தை உருவாக்க
உருவான, உன்னத ரமழானே
வருகவே!

இரவில் நின்று வணங்கி
இறையோன் அருள் தழுவ
இங்கித பறக்கத் சொரியும்
இனித்திடும் ரமழானே
மூன்று பத்து முப்பத்திலும்
முக்குளித்த முஃமீன்கள்
முடிவில்லா சுவனமதில்
முத்தெனவே வீற்றிருப்பர்
நடு நிசியில் தொழுது நிதம்
நன்மை பல செய்திடவே
நலமுடன் நமக்கு வந்த
நல்ல மாதமென்றால் அது
ரமழானே!

ஷைய்த்தானை விரட்டியடித்து
செந்செழிப்பு மலர்ந்திடவும்

வல்லவன்
செதுக்கியதை
செம்மையாய் கழித்திடுவோம்
குர்ஆனை இறக்கிவைத்த
கூத்திரு மாதமிது
குரோதங்கள் மறந்து நாமும்
கூடி அமல் செய்திடுவோம்



பேரருள் பெற்றிடவே
பெருமையுடன் வந்த மாதம்
பேதங்கள் மறந்து நிதம்-நத்
பேறை அடைந்திடுவோம்
அடுத்த வீட்டிடல் அன்பு கூடி

அயலோரின் அருமை காண
அல்லாஹ்வே எமக்களித்தான்
அருட்புதையல் ரமழானை

தயிருக் கறையல்
தாளித்த பாலாணம்
கீரைச் சுண்டலாலும்,

கிருகிருக்கும் ஸஹர் வேளை
பால் சுரக்கும் பள்ளிக் கஞ்சி எம்
பகுதியெல்லாம் மணத்தை வீசும்
பசி போக்க பருகிடவே
ரமழானே வந்துவிடு!

-ஸெய்யன் ஸித்தீக்-

# இனம் - மொழி
## கடந்த ஒற்றுமை

எங்கும் சிங்களம்...!
ஒரு சில பர்தாக்களை
கண்டதும்
கொஞ்சம் திருப்தி
சொந்த ஊரிலிருந்து
நானொருத்திதான்
பெண்ணென்றோ
எங்கு திரும்பினாலும்
புதிய முகங்கள்தான்

புதிய இருப்பிடம்
புதிய நட்பு
புதிய நடத்தை என
அத்தனையும் புதுமையாக
நான் பெற்ற அனுபவம்
ஒரே நாளில்
என்னைத் தன் வசமாக்கிற்று



காக்கிச் சட்டை வீரர்கள்
எனக்கு நண்பர்களா?
ஆச்சரியம் வரவே
இதுவரை இருந்த
வெற்றுப் பயங்களும்
மறைந்தே போயின

இன. மொழி கடந்த
ஒற்றுமையில்
மதத்திற்காய் மனதோடு
கொண்ட போராட்டம்
கொஞ்சம் சலிக்கவும்
வைத்தது

வெறும் பதினைந்தே
நாட்கள் கொடுத்த
புதிய உறவுகளின்
உன்னதத்தை
பிரியும் நேரத்துக்
கண்ணீர் துளிகள்
உணர்த்தின

சிதாரா-மருதமுனை

**கவிதைப் படைப்பாளிகளின்**
**கவனத்திற்கு!**

எங்கள் தேசத்தின் உயிர் மொழி பகுதிக்கு கவிதை அனுப்பும் படைப்பாளிகள் A4 தாளின் ஒரு பக்கத்திற்கு மேற்படாதவாறு எழுதி அனுப்புமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

-ஆசிரியர் பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QD/28/NEWS/2013


# Social Media Workshop

நான்கு தசாப்த ஊடக அனுபவத்தின் புதிய பரிமாணம்

Status Photo Ask Question Milestone

Facebook, Twitter, Youtube, Linkedin, Flickr, Blogger, Livestream போன்ற நாம் அனைவரும் பயன்படுத்தும் சமூக வலைதளங்களே சமூக ஊடகங்கள் (Social Media) எனப்படுகிறது.

Post

சமூக ஊடகங்கள் மூலம் உங்கள் தொழிலை முன்னேற்றலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

E-Money, E-Marketing என்பன விஷேடமாக கற்றுத் தரப்படும்

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

JMF ஊடக நிறுவனம் Insight Institute உடன் இணைந்து நடத்தும்

4வது ஒரு நாள் சமூக ஊடக செயலமர்வு

முதலீடு 2100/= மாத்திரமே (மதிய உணவு, சிற்றுண்டி உள்ளடங்கலாக)



கல்முனையில்...

23.06.2013 (ஞாயிற்றுக்கிழமை)

காலை 09.00- மாலை 05.00

(குறிப்பிட்டளவு தொகையினரே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.)

தொடர்புகளுக்கு

0777 871758, 077 7866064

Just Media Foundation
77, Dematagoda Rd, Colombo-09
www.facebook.com/JMFSriLanka



## அல்ஹஸனாத்

ரமழான் சிறப்பிதழாக வெளிவந்திருக்கிறது

- இஸ்லாமிய இலட்சியக் குரல்
- உங்கள் குடும்ப மாத இதழ்

ரமழானை முன்னிட்டு சிறப்புத் தலைப்புகளுடன் வெளி வந்திருக்கிறது
உங்கள் பிரதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு
T. முஸ்தாக் - 0777 396306
M.M.M. பிலால் - 077 8466286

JUST MEDIA FOUNDATION
77, Dematagoda Road, Colombo-09
Tel: 011 2689324, Fax: 011 2686030
E-mail: alhasanath@gmail.com Web: alhasanath.lk

www.alhasanath.lk

அல்ஹஸனாத்

மலர்: 39 இதழ்: 07 ஜூலை 2013 ரமழான் 1434

ரமழான் சிறப்பிதழ்

மாதத்துடனான உறவு
மார்க்கத்துடன் இருந்தால்...



ரமழானைப் பரிசாகப் பெற்ற
ரப்பானிய சமூகம்

த:வா அமைப்புகள் சமூக ஒற்றுமையையும் சகவாழ்வையும் முன்னிலைப்படுத்த வேண்டும்

50/- ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at IPC PRINTING PRESS, 23, De Vaas Lane, Grandpass, Colombo 14.